சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்

हस्तप्रतीतिहासः तत्संपादनविधिश्च

ஆசிரியர் :

முனைவர் ஆ.வீரராகவன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 548

சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்புமுறையும்

हस्तप्रतीतिहासः तत्संपादनविधिश्च

ஆசிரியர்:
நியாய சிரோமணி, வேதாந்த ஆசார்ய,

முனைவர் ஆ. வீரராகவன், M.A., B.L.I.S., Phd.,
சம்ஸ்க்ருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்**
தஞ்சாவூர்.

2013 விலை : ரூ. 110-00

நூற்பதிப்பு விளக்க குறிப்பு

நூற்பெயர்	:	சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்புமுறையும்
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஆ. வீரராகவன், M.A., B.L.I.S., Ph.D.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	548
மொழி	:	சம்ஸ்கிருதம் - தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2013
தாள்	:	TNPL 18.6 kgs.
நூல் அளவு	:	21 x 14 c.m.
பக்கங்கள்	:	220
படிகள்	:	500
எழுத்து	:	16 & 12
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	சுவடியியல்
விலை	:	ரூ. 110

வெளியீட்டாளர் முகவுரை

தரணி போற்றும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில்பல்வேறு வகையான சுவடிகள், நூல்கள் பாதுகாக்கப் பெறுகின்றன. அவற்றிலிருந்து அரிய செய்திகளையும் மக்களுக்குத் தேவையான மருத்துவம், சோதிடம், நீதி போன்ற நூல்களையும் பதிப்பித்து ஆண்டுதோறும் சரசுவதிமகால் நூலகம் வெளியிட்டு வருகின்றது.

அதைப்போலவே 'சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்' என்ற தலைப்பில் சுவடியியல் சார்ந்த நூலொன்றை சரசுவதி மகால் நூலகம் தற்போது வெளியிடுகின்றது. இந்த நூலிற்கான அடிப்படைச் செய்திகள் பெரும்பாலும் சரசுவதி மகால் நூலகத்தில் பதிவிடப்பெற்ற சுவடிகளிலிருந்து சேகரிக்கப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

'சரசுவதி துர்க மார்கம்' என்ற பெயரால் சரசுவதி மகால் சம்ஸ்க்ருதத் துறையின் காகிதச் சுவடிகளை வகைப்படுத்திய வழிமுறையினையும், ஏடெழுதுவோர்களின் குறிப்பால் சில அறிஞர் பெருமக்களின் சுயகைப்பிரதிகளையும், சகஜிராஜபுரம் என்ற திருவிசநல்லூரின் குறிப்பால் நூல் இயற்றுவோரை அரசர்கள் ஆதரித்தமையும், கேசவஸ்வாமி நிகண்டுவினால் இரண்டாம் ராஜராஜன் வடமொழியின்பால் கொண்டுள்ள பற்றும், சிலமோடி ஆவணக் குறிப்புகளால் சுவடிகளை எழுத அரசர்களே ஆணையிட்டு அச்செயலுக்கு உதவிகளைப் புரிந்தமையும், சுவடிகளைப் பட்டியலிடுதல், பதிப்பித்தல், பாதுகாத்தல் ஆகியனவும் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

இந்நூலினை சிறப்பாக பதிப்பித்த நூலக சமஸ்கிருத பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களுக்கு எனது பாராட்டுகள். இந்நூல் மாணவர்களுக்கும், சுவடியியல் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர உதவிய மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. ச. நடராஜன்,B.Sc., அவர்களுக்கும், இந்நூலக நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.,Ph.D., அவர்களுக்கும் இந்நூல் அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
28-06-2013

கா. பாஸ்கரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

தஞ்சைத் தரணியில் தன்னிகரற்றுத் திகழும் சரசுவதி மகால் நூலகம் பல பழமையான ஏட்டுச் சுவடிகளையும், காகிதப் பிரதிகளையும் நூல்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. அரிய நூல்களை ஆண்டுதோறும் வெளிக்கொணர்ந்து அரிய சாதனையும் படைக்கின்றது. தஞ்சை சரசுவதிமகால் நூலகம் நூலகங் களுக்குள்ளே மிகத்தொன்மை வாய்ந்தது. உலகப்புகழ் பெற்றதுமாகும்.

தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் இலக்கியப் படைப்பிற்கும், நூலகங்களுக்கும் ஆதரவளித்துள்ளனர். (பார்க்க, ப.எண்- 46) பழங்காலத்தில் சுவடிகள் எழுத எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தினர். அவ்விளக்குகளுக்கு எண்ணெய்யாக கண்களுக்கும் நன்மை பயப்பதான இலுப்ப எண்ணெய்யை வாங்க நிதியளித்தமையையும், சரசுவதி மகாலிலுள்ள இரண்டு எழுத்தாணிகளைத் தீட்டிக் கொடுத்தையும் மோடி ஆவணங்கள் முறையே நமக்குத் (C.V. No./P.No. 3, பண்டில் எண். 109 C/ 21-1784 & பண்டில் எண் 94 C/47-1804)தெரிவிக்கின்றன. சுவடிகளைக் கட்டிவைப்பதற்கு கயிறு திரித்துக்கொடுத்ததற்கும் ஆவணச் சான்றுள்ளது.

சுவடி எழுத உபயோகப்படும் எழுத்தாணி, பனை ஓலையினாலான ஏடு, பனைமரத்தின் பயன்கள் ஆகியவை பனைமரசோபனம், என்னும் நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்நூல் 1914 ஆம் ஆண்டு திருபோரூர் T. கோபால் நாயக்கர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டமை ஈண்டு நினைக்கத்தக்க ஒன்று. எழுத்தாணிகொண்டு குடைந் தெழுதப்படும் ஓலைச்சுவடிகளும், மையின் துணையோடு தயாரித்த காகிதச்சுவடிகளும் காலத்திற்கேற்ப பல்வேறு எழுத்துகளில் அமைந்திருக்கும். அவற்றைப் பலரும் புரிந்துகொண்டு பயன்படுத்தும் வகையில் அமைகின்றது சுவடிவிவரப் பட்டியல் பணி ஆகும்.

சுவடி விவரப்பட்டியல் பணி மேற்கொள்ள அரசர்கள் பெரிதும் துணைபுரிந்தனர். சரபோஜி மன்னர் பட்டமேற்ற நாளில் சரசுவதிமகாலில் சரியான விவரப்பட்டியல் இல்லை என்ற குறிப்பு (பக்கஎண்-75ல்)கொடுக்கப்பட்டுள்ளது. சரபோஜி அரசாட்சி எய்திய நாள் 22.6.1798 என்று தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் நூல் குறிப்பிடுகின்றது. பட்டமேற்றபின் ஓலைச்சுவடிகளின் பட்டியலை ஓலைச்சுவடியிலேயே இயற்றச் செய்திருக்கின்றார். அதன் காலம் 1801 ஆம் ஆண்டு. சரபோஜி மன்னர் காலத்தியதும் சரசுவதி மகால் நூலகத்தின் முதன்முதல் சுவடிவிவரப்பட்டியலும் ஆக (அது தெலுங்கு எழுத்தில்) அமைந்து விளங்குவதை நாம் தஞ்சை சரசுவதி மகால் நூலக அருங்காட்சியகத்திலே கண்டு மகிழலாம். ஆங்கே பர்னல் துரை அவர்களின் உருவப்படமும், அவரது தலைமையில் வெளிவந்த A Classified Index to the Sanskrit Manuscripts in the Palace at Tanjore, London. 1878,1880ல் வெளிவந்த நூற்குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் சம்ஸ்க்ருதத் துறையில் காணக்கிடைக்கின்றது. 'பர்னல் துரை அவர்கள் தஞ்சையில் நீதிபதியாக இருந்தவர். அவர்களுக்கு வடமொழி தென்மொழிகளில் பயிற்சி உண்டு. சரபோஜி அரசர் காலத்திற்குப் பின்பும் பர்னல் துரை வந்ததற்கு முன்புமாகிய காலத்தில் இருந்த சுவடி விவரப்பட்டியல்களில் காணப்பட்ட குறைபாடுகள் நீங்கி ஒழுங்கு ஏற்பட்டது. இன்னும் பல அருமையான ஏட்டுச் சுவடிகள் சரசுவதி மகாலில் காணப்படுகின்றன என்று உ.வே. சாமிநாதய்யர் தமது 'பழையதும் புதியதும்' நூலில் தெரிவித்துள்ளார்.

மராட்டிய மன்னர் காலத்தில்தான் அச்சுப் பதிப்பகம் தரங்கம்பாடியில் தோற்றுவிக்கப்பட்டது. அதற்கான குறிப்புகள் இந்நூலில் பக்க எண் 60ல்

கொடுக்கப்பட்டுள்ளன. பழங்காலத்தில் நடைமுறையில் இருந்த கல்லச்சுப் பதிப்பு முறையினை, சித்திரகாரன் கோவிந்தசாமி மேஸ்திரியின் மூலம் திருச்சினாப்பள்ளி திருவேங்கட அய்யங்காரிடமிருந்து கல்லின் மேல் எழுத்து வரைந்து காகிதத்தின் மேல் படியும்படி செய்கிற விதத்தைக் கற்றுக் கொடுக்க மேற்சொன்ன அய்யங்காருக்கு முப்பது ரூபாயினை அளித்து போதிக்க வழிவகை செய்ததையும் ஓர் மோடி ஆவணம் (C.V. No./ P.No. 3, பண்டில் எண். 107 C/ 44-1845) தெரிவிக்கின்றது.

<u>நூற்பகுதி</u>

'சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்' என்ற இந்த நூலில் சுவடிகளின் வரலாறு, ஏடு எழுதுதல் மற்றும் எழுத்தாளர் பற்றிய குறிப்பு, சுவடிகளின் பெருக்கம், நூற்படைப்புகளுக்கு அரசர்களின் ஆதரவு சுவடிப்பட்டியல் செய்முறை, சுவடிப்பதிப்பு முறை, அதற்குத் தேவையான சில வழிமுறைகள் ஆகியன காணக்கிடைக்கின்றன.

<u>பதிப்புமுறை</u>

இந்நூலில் மொத்தம் 70 சுலோகங்கள் தமிழில் பொழிப்புரையோடு அமைக்கப் பெற்றுள்ளன. அவை சம்ஸ்கிருத நூல்கள், சம்ஸ்க்ருதச்சுவடி விவரப்பட்டியல்கள், பிறமொழி சுவடிப்பதிப்புமுறை நூல்கள், சுவடி வரலாறு நூல்கள் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பெற்றன. பிறமொழி அறிஞர்களும் இந்நூலினைப் பயன்படுத்தும் பாங்கில் அவை சம்ஸ்க்ருதத்தில் பிற்சேர்க்கையாக (I & III பக்க எண்கள்- 111-125 & 204 - 206) இணைத்து இப்பதிப்பிற்கு துணைநின்ற படங்களை நூலில் உரிய முறையில் எண்களைக் கொடுத்து அவற்றை மற்றொரு பிற்சேர்க்கையாக (II P.No. 126-203) அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் முன்னுரை, பொருளடக்கம், துணைநூற்பட்டியல் போன்ற

வற்றையும் பொருத்தி இந்நூற்பணி நிறைவு அடைந்துள்ளது.

<u>நன்றியுரை</u>

'சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்' என்ற தலைப்பிலமைந்த இந்நூல் பெரும்பாலும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ள சுவடிகளால் அறியப்பெறும் செய்திகளை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பெற்றுள்ளது. இந்நூலகம் தரும் செய்திகளைத் தொகுத்து ஒரு நூல்வடிவாகக் கொடுக்க உதவிய சரசுவதி மகால் நூலகத்திற்கு முதற்கண் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலை வெளியிட ஆணை வழங்கிய தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் உயர்திரு கா. பாஸ்கரன் இ.ஆ.ப. அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் திரு. ச. நடராஜன், B.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A., ML.I.S., Ph.D., அவர்களுக்கும், கணினி மற்றும் நூற்கட்டுத் துறையினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் மகிழ்கிறேன்.

பயன்கள்

இந்நூல் சுவடியியல் ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
23-6- 2013

முனைவர் **ஆ. வீரராகவன்,**
சம்ஸ்க்ருதப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

பக்க எண்.

1.	சுவடிகளின் வரலாறு	1-17
1-1.	ஓலைச்சுவடி	1
1-2	காவியவித்யாபரிகரங்கள்	2
1-3	மையாடல் விழா	4
1-4	மைக்கூடு	5
1-5	பூர்ஜமரப்பட்டை	5
1-6	காகிதச்சுவடி	7
1-7	சரசுவதீ துர்கமார்கம்	7
1-8	கடுத்தா	11
1-9	தோற்காகிதங்கள்	13
1-10	மரம்	15
1-11	உலோகம்	15
2-1	ஏடு எழுதுதலும், எழுத்தாளர்களும்	17-39
2-2	சுவடித்துவக்கல்	18
2-3	எழுத்தாணி	20
2-4	அறிஞர்களின் சுயகைப்பிரதி	21
2-4-1	சரபோஜி மன்னர் எழுதியது	21
2-4-2	பாஸ்கரராயர் எழுதியது	21
2-4-3	அப்பாதீக்ஷிதர் எழுதியது	22
2-4-4	உரைநூலாசிரியர் சுயகைப்பிரதி	23
2-5-1	ஏடு எழுத்தாளர்கள்	24
2-5-2	பணிக்கப்பட்ட சுவடிஎழுத்தாளர்கள்	24
2-5-3	வாழ்க்கைப்பணி சுவடிஎழுத்தாளர்கள்	26
2-5-4	பிறர் நலம் பேணும் சுவடிஎழுத்தாளர்கள்	27
2-5-4 (அ)	தனக்காக சுவடிஎழுதுதல்	27
2-5-4 (ஆ)	தனக்கும் பிறருக்குமாக சுவடிஎழுதுதல்	28
2-5-4 (இ)	தெய்வமகிழ்விற்காக சுவடிஎழுதுதல்	28
2-5-4 (ஈ)	குலதெய்வ மகிழ்ச்சிக்காக சுவடி எழுதுதல்	29
2-5-4 (உ)	குருவருள்பெற சுவடி எழுதுதல்	29
2-5-5	சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்	30
2-5-5 (அ)	சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்	30
2-5-5 (ஆ)	சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்	31

2-5-5 (இ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள் 31
2-5-5 (ஈ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள் 32
2-5-5 (உ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள் 33
2-5-5 (ஊ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள் 33
2-5-6 சுவடி எழுத்தாளர் தரும் பிறபயன்கள் 33
2-5-6 (அ) சகுன சாஸ்திரம் 33
2-5-6 (ஆ) வருண ஜபமுறை 34
2-5-6 (இ) பாடகர்களின் குணங்கள் 35
2-5-6 (ஈ) களவுப்பொருள் கிடைக்கவழி 35
2-5-6 (உ) நன்னெறி 36
2-5-6 (ஊ) கடிதம் 36
2-5-6 (எ) ஸ்ரீவைணவ தினசரி 37

3. சுவடிப்பெருக்கம் 39-43
3-1 அன்னதானம் 40
3-2 அபயதானம் 40
3-3 பைஷஜ்யதானம் 41
3-4 சாஸ்திரதானம் 41
3-4-1 சாஸ்திரதானம் 42
3-4-2 கைவல்யம் கிடைக்கவேண்டி சாஸ்திரதானம் 42
3-4-3 அன்பிற்காக சாஸ்திரதானம் 43

4-1 சுவடி அமைப்பின் பயன் 43-44
4-2 சுவடிகளின் அளவுபற்றி 43
4-3 சுவடிகளிலுள்ள துளைபற்றி 44
4-4 சுவடிக்காப்புப் பலகைகள்பற்றி 44

5 சுவடிநூல் உருவாக்கமும், இலக்கியவளர்ச்சியும் 45-65
5-1-1 சோழர்கால குறிப்பு- இருக்கு வேதபாஷ்யம் 45
5-1-2 ரூபாவதாரம் 45
5-1-3 நாநார்த்தார்ணவ ஸங்க்ஷேபம் 46
5-2-1 மராட்டியர்கால குறிப்பு 47
5-2-2 சகஜிராஜபுரமும் 48 பண்டிதர்களும் 48
5-2-3 இலக்கிய வளர்ச்சி 53
5-2-4 சரபோஜிமன்னர் நிறுவியஅச்சகம் 60
5-2-4 (அ) சிசுபாலவதம் (அச்சுநூற்குறிப்பு) 61
5-2-4 (ஆ) காரிகாவளி (அச்சுநூற்குறிப்பு) 61

5-2-4 (இ) தர்க்க ஸங்கிரஹம் (அச்சுநூற்குறிப்பு) 62

5-2-4 (ஈ) குமாரசம்பவ சம்பூ: (அச்சுநூற்குறிப்பு) 62

5-2-5 (அ) நூற்பிரதிஷ்ட்டை 62

5-2-5 (ஆ) புரோக்ஷணம் 64

5-2-5 (இ) தானங்கள் 64

6. <u>சுவடிப்பாதுகாப்பு</u> <u>65-71</u>

6-1-1 ஜீர்ணோத்தாரணம் 61

6-1-2 புத்தக அழிவிற்கு காரணங்கள் 67

6-1-3 திருடுதல் 67

6-1-4 தீக்கிரை 68

6-2 புத்தகப் பாதுகாப்பு 69

6-2-1 பாதுகாப்பு விழிப்புணர்வுச் சுலோகம் 70

6-2-2 பாதுகாப்பு விழிப்புணர்வுச் சுலோகம் 71

7 <u>சுவடி எழுத்துகள் சில</u> <u>71-75</u>

7-1 எழுத்துகள் 73

7-2 எழுத்துகளின் தோற்றம் 74

7-3 சுவடிப்பதிப்பிற்கு எழுத்தறிவு 74

<u>8. சுவடிப்பட்டியல்</u> <u>75-82</u>

8-1 பழையபட்டியலும் புதுப்பதிவேடும் 76

8-1-1 பட்டியல் தரும் குறிப்பு 76

8-1-2 பதிவேடு தரும் குறிப்பு 77

8-2 மோடி ஆவணம் தரும் பட்டியல் குறிப்புகள் 77

8-3-1 சுவடிப்பட்டியல் பயன்கள் 81

8-3-2 சுவடி விவரப் பட்டியல் பயன் 81

9-1 <u>சுவடிப்பதிப்பு முறை</u> <u>82-110</u>

9-1-1 சுவடிப்பெயர்ப்பு 83

9-1-2 பிரதி ஒப்பீடு 84

9-1-3 பதிப்பாசிரியர் 84

9-1-4 பதிப்பகப்படிவம் தயாரித்தல் 85

9-2-1 மெய்ப்புத் திருத்துதல் 85

9-2-2	அச்சு முளைகளால் ஏற்படுபவை	86
9-2-3	செய்திக்கு ஏற்ற சில குறைபாடுகள்	86
9-2-4	மெய்ப்புத் திருத்தும் விதிகள்	86
9-3-1	ஆய்வுப் பதிப்பு	89
9-3-2	சந்தான சுத்தி (தொகுதித்தூய்மை)	90
9-3-3	பாடஸங்கலனம்	96
9-3-4	பாடவேறுபாடுகள் தொகுக்கும் முறை	97
9-3-5	பாடபரிஷ்கரணம்	98
9-3-6	பதிப்புப்பணியில் பயன்படுத்தபெறும் சில குறிப்புகள்	99
9-3-7	பாடவேறுபாடு பொருத்துதல்	101
9-4-1	ஆய்வேடு அமைப்பு	103
9-4-2	முகப்புப்பக்கம்	104
9-4-3	முன்னுரை	104
9-4-4	பொருளடக்கம்	105
9-4-5	சுருக்கக்குறிப்பு	105
9-4-6	ஆரம்பப்பகுதி	106
9-4-7	முக்கியசெய்திக்கு தொடர்பான அத்தியாயம்	107
9-4-8	முடிவுரை	107
9-4-9	சொல்லடைவு	107
9-4-10	துணைநூற்பட்டியல் மற்றும் ஆய்வேடு பட்டியல்	108
9-5	சுவடிகளின் ஆண்டு கணக்கிடல்	109
<u>முடிவுரை</u>		**110**
பிற்சேர்க்கைகள்		**111 -206**
பிற்சேர்க்கை - I - சம்ஸ்கிருத சுலோகங்கள்		111-125
பிற்சேர்க்கை-II - படங்கள்		126- 203
பிற்சேர்க்கை - III -சம்ஸ்கிருத வரைபடங்கள்		204-206
துணைநூற்பட்டியல்		**207-208**

ஸ்ரீ:

சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்புமுறையும்

1. சுவடிகளின் வரலாறு

அரசர்களின் எழுவகையான அறச்செயல்களுக்கு 'ஸப்த ஸந்தானம்' என்று பெயர். அவற்றுள் நூல் இயற்றுவோருக்கு ஊக்கமும், உறைவிடமும் கொடுப்பது ஒன்றாகும். பழங்காலத்தில் எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஓலை, காகிதம், கடுத்தா, பூர்ஜமரப்பட்டை, மரம், உலோகம் ஆகியன. ஓலைச் சுவடி முதலான எழுதுபொருட்கள் பற்றி முறையே சிறிது பார்ப்போம்.

1-1. ஓலைச்சுவடி

சுய எண்ணங்களை வடிவங்கொடுக்க உதவியதே சுவடியாகும். சுவடு என்றால் அடையாளம் அல்லவா! கீறலான முறையில் எழுதப்படுவதே ஓலைச்சுவடி. (படம்-1, படங்களுக்கு பிற்சேர்க்கை II ப.எண். 126ஐ பார்க்கவும்) நல்லதான ஓலைச்சுவடிகளைக் கொண்டு வந்து அதன் இரு பக்கங்களிலும் தொளைசெய்து, அவற்றினுள் இரு கம்பிகளைப் பொருத்தி, இருபக்கங் களிலும் மரப்பலகைகளைச் சேர்த்து கண்ணுக்கு இனியதாய் அலங்கரிக்கவேண்டும் என்று வீரமாகேச்வர டீகையில் அன்னதானதேவர் குறிப்பிட்டுள்ளார்.

எழுதப்பயன்படும் பனை ஓலைகளை விளக்கும் சுலோகங்கள்-

*1. தாடபத்ரம் த்ருடம் ஸௌம்யம்
ருஜு ஸாக்ரம் த்விதா க்ருதம் ।
மிருதுளம் யத் ப்ரசஸ்தம் தத்
மதம் லேகாவிலேகனே ॥

*(1முதல் 70 நாகரிச்சுலோகங்களுக்கு பிற்சேர்க்கை I ப.எண். 111ஐ பார்க்கவும்)

2. கர்க்கஸம் கல்மஷம் வக்ரம்
ஹீனாக்ரம் த்ருடிதம் யகம் ।
தாலபத்ரம் ந தத் சிரேஷ்டம்
மதம் லேகாவிலேகனே[1] ॥

(பொருள்) ஓலைகள் உறுதியாகவும், அழகாகவும் ஓரப்பகுதிகள் ஒழுங்காகவும், நடுவிலுள்ள ஈர்க்கு அகற்றப்பட்டவையாகவும், நைப்பாகவும், அமைக்கப் பெற்றவை எழுதுவதற்கு ஏற்றன. முரட்டாகவும், பார்ப்பதற்கு விகாரமாகவும், வளைவாகவும், இரு ஓரங்களும் பழுதுபட்டுமுள்ளவை எழுதுவதற்கு தகுதியற்றன. ஓலைகளைப் பதப்படுத்தி எழுதுவதற்கு ஏற்றவாறு செய்து விற்பதைச் சிலர் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களுள் நிஜலிங்கசிக்கய்யன் ஒருவர். மேலும் சிவதத்துவ சிந்தாமணியில் இந்தத் தொழிலைப் புரியும் கடவூரு ரமணய்யா, திருவாரூர் தம்மண்ணா, திருச்சிட்டப்பள்ளி திப்பண்ணா ஆகியோரை ஸ்ரீலக்கண்ணதண்டேசன் குறிப்பிட்டுள்ளார். பழங்காலத்தில் எழுத உபயோகப்படுத்தப் பட்ட பொருட்களை 'காவியவித்யையின் பரிகரம்' என்று ராஜசேகரன் தனது காவியமீமாம்சா - பத்தாம் அத்தியாயத்தில் தெரிவித்துள்ளான்.

1-2. காவிய வித்யா பரிகரங்கள் :

3. ஸம்புடிகா, ஸபலகடிகா, ஸமுத்தக:, ஸலேகனீக மஷீபாஜனானி, தாடிபத்ராணி பூர்ஜத்வசோ வா ஸலோஹககண்டகானி, தாளதளானி, ஸுஸம்ருஷ்ட்டா பித்தய: ஸதத ஸந்நிஹிதா ஸ்யு: । தத் ஹி காவ்யவித்யாயா: பரிகர: இத்யாசார்யா:[2] ।

---

1. பிரபுத்த கர்னாடகா-184, பக்கம்-14
2. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். பருவ இதழ் - 51

சம்புடிகை = பெட்டி, பலக கடிகை = பலகை மற்றும் எழுதும் சுண்ணம், சமுத்ககம் = நகைப்பெட்டி போன்ற ஒரு பெட்டி, லேகனீ மூஷீபாஜனம் எழுதுகோல் மற்றும் மைபுட்டி, தாடிபத்ரம் = பனை ஓலை, பூர்வஜத்வக் = பூர்ஜமரப்பட்டை, லோஹக கண்டகம் = இரும்பு எழுத்தாணி, தாளதெலை = தகடு, ஸுஸம்ருஷ்டா பித்தி: = தயார் படுத்தப்பட்ட தாமிரபத்திரம் போன்ற இவையாவும் எழுத்தாளனின் அருகில் எப்போதும் இருக்கவேண்டும் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இதனை சமன்படுத்தப்பட்ட சுவர் என்றும் பொருள்கொள்ளலாம்.

ஓலைச்சுவடிகள் எழுதுபொருட்களாக ஆயிற்று என்பதை யுவான்சுவாங் (Hsuanchung-7th century-AD) தெரிவித்துள்ளார். ஆயினும் தாளபத்திரங்களின் உபயோகம் இன்னும் முன்பிருந்தே இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ரியோஜி(Horiuzi) ஓலைச்சுவடி கையெழுத்துப் பிரதி 6ஆம் நூற்றாண்டுக்கு முந்தயது. காஷ்மீரில் கிடைத்த காட்ப்ரோ சேகரிப்பின் சிலசிறு எழுத்துப் பகுதியின் எழுத்தாதாரத்தின் மேலே நான்காம் நூற்றாண்டிற்கு சேர்ந்தவை என்றும் பவர் கையெழுத்துப் பிரதிகளைக் காட்டிலும் இது பழமையானது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பவர் கையெழுத்துப் பிரதியின் பூர்ஜபத்திரங்களை ஓலைச் சுவடிகளின் அளவிற்கு சரியாக கத்தரிக்கப்பட்டுள்ளது. இதைப் பார்தால் அத்தனை பிந்தய காலத்திற்கு முன்னமே தாள்பத்தித்திற்குச் சமனான டெக்கான்னிலிருந்து நூறாறு மைல் தூரத்திலிருக்கும் பஞ்சாபில் தாள பத்திரங்களின் உப்யோகம் இருந்தது என்று சொல்லலாம். அவற்றின் நீளம் 1 லிருந்து 3 அடி, அகலம் 1 அங்குலத்திலிருந்து 4 அங்குலம் வரை உள்ளது. பனை ஓலைகளை பசுமையாய் இருக்கும்போதே கொதிக்கும் நீரில் வேகவைத்து நிழலில் உலர்த்தி வழவழப்பான கூழாங்கல்லைத் தேய்த்து மிருதுப்படுத்தி அதன் மீது எழுதுகிறார்கள்.

இந்திய ஓலைச்சுவடி ஹஸ்தபிரதிகளை கொரிபா அம்பரா க்யுலிபெரா (Corypha umbra culifera) அல்லது பொராஸஸ் ப்லாபெ[illegible]பெரா (Borassus flabelli fera) களால் செய்யப்பெற்றுள்ளது. இவைகளில் முதலாவதுக்கு பாரதமே மூல ஸ்தலமாகியும், இரண்டாவது பெரும்பாலும் ஆப்பிரிகாவிலிருந்து வந்ததாகியிருக்க வேண்டும். இந்த இரண்டு மரங்களின் இலைகளும் நீளமாக அமைந்து நடுவில் ஈர்க்குடன் நுனி கூராகச் சென்றிருக்கும். ஹார்நெல் (Hoernal) என்ற பிரசித்தமான அறிஞர் தாளபத்திர ஹஸ்தபிரதிகளை தீவிரமாக ஆய்ந்து பழைமையான ஓலைச் சுவடிகளெல்லாம் கொரிபா ஓலைகளினாலே தயாரானவை என்ற முடிவுக்கு வந்தார். இந்தியாவில் 14ம் நூற்றாண்டிற்கு முன்னதான கையெழுத்துப் பிரதி கிடைப்பது மிகவும் அரிது.

1-3. மையாடல் விழா

மையினைக்கொண்டு எழுத உபயோகிக்கும் மரபு மிகப் பழங்காலத்திலிருந்தே வந்ததென்பர். சுவடி எழுத்தாளர்கள் எழுத்துக்களை முதன் முதலில் நல்ல கூரான எழுத்தாணிகளைக்கொண்டு சுவடியின் மீது குடைந்து எழுதுவர்.[1] பிறகு ஓலைச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதின் பொருட்டு மைதடவுதலை ‘மையாடல் விழா’ என்று அழைக்கிறார்கள். “ஐயாண்டெழுதி மையாடி அறிந்தார் கலைகள்” என்பது சிந்தாமணி. வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு, ஊமத்தை இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்பைக்கரி, வசம்புக்கரி போன்றவை மை தயார் செய்யும் பொருட்களாகும். இவற்றாலான

1. The actual use of Ink came perhaps in the 2nd century B.C. Before this palm leaves & C. Were Scratched with of Stilus and the Characters were blackened by Soot or charaoal. (A short History of Sanskrit literature, By Madhabdas Chakravarthy, P.No. 15)

மையினை ஓலைச்சுவடியின் மீது பூசுவதால் எழுத்துக்களும் நன்றாகத் தெரியும். கண்களுக்கும் அது குளிர்ச்சியை அளிக்கின்றது. பூச்சிகள் வராமலிருக்க சிலர் சுவடியின் மேல் மஞ்சளையும் பூசுவர். இதனை "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்" என தமிழ்விடுதூது நூல் குறிப்பிடுகிறது.

1-4. மைக்கூடு

பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மைக்கூடு எப்படி அமைந்திருந்தது என்பது பற்றிய ஒரு குறிப்பினை இந்திய நாகரிகம் என்னும் நூலின் வழி இப்போது நாம் பார்ப்போம். பறவை உருக்கொண்ட ஒரு ஜாடியானது புறா உருவில் அமைந்து தன் வயிற்றின் மேல் படுத்துத்தலையை தூக்கிக் கொண்டிருக்கும் பாங்கில் அமைக்கப்பட்டிருந்தது. அதன் முதுகில் ஆழமான பள்ளமும் அதைக் கண்ட மெகாய் என்ற அறிஞர் பழங்காலத்தில் ஆங்கே உபயோகப் படுத்தப்பட்ட மைக்கூடு என்று கூறியுள்ளார். அந்த பிராணி ரூபமான ஜாடி மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளது.

1-5. பூர்ஜமரப்பட்டை

பூர்ஜமரப்பட்டை வரைதல் முறையை அடிப்படையாய்க்கொண்டு எழுத உபயோகப் படுத்தப்பட்ட பொருட்களுள் ஒன்று. இது மிகவும் மெல்லியதாய் சதுரவடிவில் அமையப்பெற்றிருக்கும். மையினைக் கொண்டு இதன்மேல் வடநாட்டில் எழுதிவந்தனர். சாரதா போன்ற வடதேச எழுத்துக்கள் ஆங்கே பெரும்பாலும் எழுத உபயோகிக்கப் பெற்றன. மிகப் பழமைவாய்ந்த வடமொழி கையெழுத்துப் பிரதி என்றால் பூர்ஜமரப்பட்டையில் எழுதியதாகும். காலம் 5th century. 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டு வடமொழிச் சுவடிகள்

மேலைநாட்டிலிருந்து கிடைத்தவை. எடு: அச்வகோஷனின் நாடகச்சுவடி. இது மத்திய ஆசியாவிலிருந்து கிடைத்துள்ளது. பூர்ஜமரப் பட்டைகள் எழுதுபொருளாகப் பயன்படுத்தியமைக்கு சில இலக்கியச் சான்றுகளும் கிட்டியுள்ளன. விக்கிரமோர்வசீய நாடகம் - இரண்டாம் அங்கத்தில் காளிதாஸன் தரும் குறிப்பினை தற்போது பார்ப்போம். அரசன் 4. 'பூர்ஜபத்ர கத்யோயம் அக்ஷரவின்யாஸ:' என்று விதூஷகனுக்கு தெரிவித்தான். ஊர்வசி எழுதி பறக்கவிட்ட அன்புக்கடிதம் பூர்ஜபத்ரம் என்பது தெள்ளத்தெளிவு. ஹிமாலயப் பிராந்தத்தில் பூர்ஜமரம் (Birch and Aloe bark) விளைகின்றது. மரத்தின் உள்பட்டையை பதப்படுத்தி நாற்கோணங்களில் கத்தரித்து எழுதுகோலால் இதன்மேல் மையினால் எழுத்துக்களை எழுதுகின்றனர். இப்படிப்பட்ட கையெழுத்துப்பிரதிகள் காஷ்மீரத்தில் நிரம்பக் கிடைத்துள்ளன. சாரதா எழுத்தில் மகாபாரதத்தின் ஒரு கையெழுத்துப்பிரதி பூர்ஜமரப்பட்டையில் (படம் 2) எழுதப்பட்டுள்ளது. பூர்ஜபத்ர கையெழுத்துப் பிரதியில் பவர் கையெழுத்துச் சுவடிகள் மிகவும் பிரசித்தமானவை. அவை ஓலைச்சுவடி போலவே கத்தரித்து அவற்றின் நடுவே தொளைசெய்து நூலை கோர்ப்பதற்கு வசதியாய் அமைக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் பூர்ஜமரப்பட்டையில் எழுதுவது வழக்கத்தில் இல்லாத ஒன்றாகும்.[1] பூர்ஜத்வஜம் என்று இந்த எழுதுபொருள். 5. "அனங்கலேக க்ரியயோப யோகம்" ஆனதை தனது குமாரசம்பவ காவியத்தில் காளிதாஸர் குறிப்பிடுகிறார் 6. "தாம் பூர்ஜஜாம் ககன" என்பதாக விருத்தரத்னாவளியில்[2] வேங்கடேசரின் குறிப்பும் பூர்ஜமரப்பட்டையான இவ்வெழுது பொருளைச் சுட்டுகின்றது.

1. Grantha Sampadana sastra paricaya-by Sitaram zahirdar P.No. 11

2. ப. எண். 37, சு. எண். 38, T.M.S.S.M. Library Publication, Tanjore.

1-6. காகிதச் சுவடி

தாளபத்திரத்திலிருந்து காகிதத்தில் எழுதுவதும் பழங்காலத்தில் நடைபெற்றுள்ளது. கிழிந்த துணிகளின் சிறுசிறு பகுதிகளையெல்லாம் இடித்து குழைவாக்கி மற்றும் சில பொருட்களுடன் சேர்த்துத் தயார் செய்வதைக் "கோரிகாகாகிதம்" என்பர். காகித உற்பத்தி சாலைகள் மன்னார்குடி, கும்பகோணம், பந்தநல்லூர், திருக்காட்டுப்பள்ளி, திருவாரூர் ஆகிய ஐந்து சிற்றூர்களில் ஏற்படுத்தப்பட்டன. இயந்திரத்தின் மூலம் தயார் செய்யும் பேப்பரைக் காட்டிலும் கையால் செய்யும்பேப்பர் நீண்டநாள் ஆயுளைப் பெறுகின்றது. காரணம் அது ஜிலடின் (மரவஜ்ரம்) மற்றும் மாவுப்பொருட்களை அதிகம் உபயோகிக்காமல் கிழிந்த துணிகளை மட்டும் பயன்படுத்தி செய்யப்படுகின்றது. ஆதலால் கையினால் தயார் செய்யும் காகிதங்கள் சுவடிக்காகவும், (படம் 3) ஆவணங்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்பட்டன.[1] ஓக் மரம், கேழ்வரகுத்தோல் ஆகியவற்றிலிருந்து தயார் செய்யப்பெறும் மையினைக் கொண்டு இதன்மேல் எழுதலாயினர். ஈஜிப்ஷியன்னர்கள் பேபிரஸ் புல்லை உபயோகித்து சுருளி ஆகார புஸ்தகத்தை நடைமுறைக்கு கொணர்ந்தனர். இந்த சுருளிபுஸ்தகம் சுமார் 16 அடி நீளங்கொண்டதாகச் செய்யப்படுகிறது. கிறிஸ்தசகம் 105ல் சீனாதேசம்தான் முதன் முதலாகப் பேப்பரை அறிமுகப்படுத்தியது.[2]

1-7. சரசுவதி துர்கமார்கம் (படம் 4)

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காகித கையெழுத்துப் பிரதிகள் நிரம்பக் காணக்

---

1. Grantha Samrakshane, by Sannaih
2. நன்றி: பரலிதே காகித ரஹிதஸமாஜம் - கன்னடச் செய்தித்தாள்-பிரஜாவாணீ-8.7.1990, .

கிடைக்கின்றன. அவற்றுள் சம்ஸ்கிருதத் துறையிலுள்ள காகிதச்சுவடி மூட்டைகள் குறித்து சிறிது பார்ப்போம்.

7. யஸ்யோபதேசாத் சரப க்ஷிதீசோ
ஜஹௌ ஜவா(ஸா?)த் க்ரைஸ்தவ .... ।
அண்ணா மகீந்த்ரம் ஷடமர்ஷகோத்ரம்
தர்மாதிகாரானுகுணம் ஸ்மரந்து ॥

தர்மானுகாமீ யதி பூபதி ஸ்யாத்
லோகஸ்து தர்மானுபஜீவ்ய திஷ்ட்டேத் ।
தர்மாதிகாரம் ந்ருபலோகபூத்யை
யோऽதத்த ராஜைக ஹிதைஷி சித்த: ॥

யஸ்யோத்யமோ வைதிகமார்க ரம்யே
ஸத்க்ஷேத்ர வித்வஜ்ஜன ஸத்ஸ்வரூபே ॥
சோளஸ்ய தேசே சரபேந்த்ரகாலே
அண்ணாமகீந்த்ரம் ஸததம் ஸ்மரந்து ॥

(அண்ணாமகியின் சரசுவதி துர்கமார்க தீபிகா (படம்-5) சுலோகங்கள்)

(பொ.) சடமர்ஷணகோத்திரத்தில் பிறந்தவர் ஆன அண்ணாமகி என்பவர் தஞ்சை அரச சம்ஸ்தானத்தில் தர்மாதிகாரி பதவி வகித்துவந்தார். அவர் சரபக்ஷிதிபதியின் கட்டளையால் அக்காலத்தில் சரசுவதி துர்கமார்கம் என்கிறபடி சரசுவதியாகிற கோட்டைக்கு (காகிதச் சுவடி மூட்டைகளுக்கு) செல்ல வழியை 25 பொருண்மை (படம் - 6) யில் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். 1834 மற்றும் 1863 ஆம் ஆண்டுப் பட்டியலின் தலைப்புகளின் எண்ணிக்கை தவிர தலைப்புகளின் இடமாற்றம் அறியப்படுகிறது. மாற்றங்களின் வரிசை எண்ணும் ஆண்டும் ஆங்காங்கே குறிக்கப்படுகிறது. 1. தர்ம சாஸ்திரம், 2. சப்தசாஸ்திரம், 3. ராமாயணம் (8/1834), 4. பாரதம் (9/1834, 13/1863), 5. பாகவதம் (10/1834, 14/1863), 6. புராணம் (7/1834,

24/1863), 7. மீமாம்ஸா (4/1834, 16/1863), 8. தர்க்கம் (3/1834, 12/1863), 9. வேதம் (22/1834,4/1863),10. பிரயோகம், 11. சிரௌதம் (12/1834, 5/1863), 12. ஜ்யோதிஷம்(6/1834, 15/1863), 13. காவியம் (13/1834,8/1863), 14. நாடகம்(14/1834, 10/1863) 15. வைத்யம் (17/1834, 6/1863), 16. நிகண்டு (12/1834,3/1863), 17. பகவத்கீதை (11/1834, 17/1863), 18. மத்வமதம் (15/1834, 1863ல் இல்லை), 19.வேதாந்தம் (5/1834, 1863ல் இல்லை), 20. ஸங்கீதம் (18/1834, 9/1863), 21. மந்த்ரம் (19/1834, 1863ல் இல்லை) 22. ஸஹஸ்ரநாமம், 23. விரதம், 24. அமாநத், 25.ஸ்தோத்ரம் (24/1834, 1863ல் இல்லை) போன்ற வகையில் படிகளை அமைத்துள்ளார். இந்த 25 பொருண்மையில் வகைப்படுத்தப்பட்ட காகிதச்சுவடி மூட்டைகள் (படம்-7) சம்ஸ்க்ருதத்துறையில் இன்றும் காணக்கிடைப்பதால் இங்கே இச்செய்தி பதிவிடப் பெறுகிறது. மேற்கூறிய அண்ணாமகியைப் பற்றிக் குறிப்புதரும் சுலோகங்கள் பர்னல் எண்களின் வரிசையில் அமைந்த காகிதச் சுவடியின் முதல் பதிவேட்டிலும் காணமுடிகிறது. ஓலையிலேயே அமைந்த ஓலைச்சுவடிகளின் பட்டியல் தஞ்சை சரசுவதி மகால் நூலக அருங்காட்சியகத்தில் ஒரு பகுதியும், பாதுகாப்புப் பிரிவில் ஒரு பகுதியும் காணக் கிடைக்கிறது. இவ்விரண்டின் காலம் சுமார் 1800 ஆகும். இதற்குப் பிறகு 1834, 1863 ஆம் ஆண்டுகளில் சுவடிகளின் பட்டியல் வெளிவந்தமைக்கு மோடிஆவணமே சான்று. அந்த குறிப்புகளிலும் அண்ணாமகி தரும் குறிப்புகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது 1834 ஆம் ஆண்டில் 1. தர்ம சாஸ்த்ரம், 2. சப்த சாஸ்திரம், 13. காவியம், 14. நாடகம் ஆகியவற்றின் ஆண்டு வரிசை எண்களும் தலைப்புகளும் மாறாது அமைந்துள்ளன. 1863 ஆம் ஆண்டில் 1. தர்ம சாஸ்த்ரம், 2. சப்தசாஸ்த்ரம், ஆகிய இரு தலைப்புகள் மட்டும் அடுத்தடுத்து விளங்குவதாய் 17ல் பகவத்கீதையும் அன்றுமுதல்

இன்றிறுதியாக மாறாமல் காணப்படுகின்றன. அண்ணாமகி இயற்றிய தலைப்புகள் வரிசையில் காணப்படும் 10. பிரயோகம், 22. ஸஹஸ்ரநாமம், 23. விரதம், 24 அமாநத் ஆகிய தலைப்புகள் 1834 மற்றும் 1863 ஆம் ஆண்டு குறிப்புகளில் தென்படவில்லை. அதற்கு பதில் அலங்காரம் (16/1834, 9/1863) சில்பம் (20/1834, 21/1863) ஆகமம் (21/1834,16/1863) ஆகியனவும், 1863 ஆம் ஆண்டின் குறிப்பில் மட்டும் சிறப்பாக பிராகிருத பத்யகாவியம் (19/1863) பிராகிருத நாடகம் (20/1863) தமிழ் வைத்யம் (22/1863) தமிழ் நூல்கள் (23/1863) போன்ற தலைப்புகள் காணக்கிடைக்கின்றன. ஆதலால் காகிதப்பண்டில்கள் அமைப்பின் காலம் வரகப்பையர் காலத்திற்கு பிற்பட்ட காலம் ஆகிறது. வரகப்பையர் காலம் ரோகா நளநாம ஸம்வத்ஸர சைத்ரசுத்த பிரதிபதா பானுவாரீ மா ஸேனாதுரந்தர ரா. ராமயா வரஹப்பய்யா தீக்ஷிதா யாம்ச்யா ஆக்ஞேவருன புஸ்தர ஹஜீர"[1] (படம்-8) "சாலிவாஹன சக 1778 நளநாம சம்வத்சரம், ஆங்கில வருடம் 1857, கலெக்டர் பேப் இட்ட ஆணைப்படி ராமயா வராஹப்பய்யரால் தயாரிக்கப்பட்ட அட்டவணை[2] என்கிற குறிப்பால் அறியமுடிகிறது. மேலும் வரஹப்பையர் குறிப்பினையும், காகிதச்சுவடி பர்னல் பதிவேடு எண்: 1ன் குறிப்பினையும் வைத்துக்கொண்டு, பதிவேட்டுச் சுலோகத்தில் ஜஹௌஜஸாத் க்ரைஸ்தவ எனச் சற்றே திருத்தம் செய்து கிடைக்கும் 1788 சக ஆண்டின் அடிப்படையிலும் தஞ்சை சரசுவதி மகால் நூலக வடமொழிப் பிரிவிலுள்ள மூட்டைகளை தலைப்புவாரி வரிசைக்கிரமம் செய்த ஆண்டு 1866 ஆகலாம் என்று கருதப்படுகிறது.

---

1. பிரயோகம், அரா. 12, B.No. 3131-3184.

2. ப.எண். 164, தஞ்சை சரசுவதிமகால் நூலகம், முனைவர் ஆ. குணசேகரன்.

1-8. கடுத்தா

காகிதச்சுவடி போன்றே வரைதல் முறையை அடிப்படையாய்க் கொண்டு எழுத உபயோகப் படுத்தப்பட்ட பொருட்கள் 'கடுத்தா' என்பதும் ஒன்று. கடுத்தா, பலகம், பலப்பம் ஆகிய பொருட் களின் குறிப்பு கன்னட ஸாஹித்யங்களில் நிரம்ப காணக் கிடைக்கின்றன.

இந்துக்கள் நன்றாக நெசவுசெய்த துணியின் மேலே எழுத்துகளை எழுதி வந்தனர் என்பது நேர்கோர்ஸ் அவர்களின் கருத்தாகும். நேர்கோர்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ள பருத்திதுணியின் விஷயமாக சில சந்தோபத்தமான (Meterical) ஸ்ம்ருதி நூல்களிலும் மற்றும் சாதவாகனனின் பல சாஸனங்களிலும் குறிப்புகள் உள்ளன. அந்த முறைப்படி இதை அரசு மற்றும் தனியார் எழுத்து மூலங்களை எழுதுவதற்கு உபயோகித்து இதை படம், படிகா, கார்பாசிகபடம் என்று அழைத்துவந்தனர். கடத்தா என்பது நாற்சதுரவடிவில் தொடர்ச்சியாய் அமையப்பெற்று விளங்கும் ஒரு எழுதுபலகையைப் போன்றது. இந்தியாவில் இது எழுத உபயோகப்படுத்தப் பட்டதென்பதை க்ரீகர்நிஆர்கஸ், மெகஸ்தனீஸ் போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பர்னல் (Dr.A.C.Burnell) மற்றும் ரைஸ் (Rice)பிரகாரம் கர்நாடக வர்த்தகர்கள் இப்போதும் 'கடத்தா' என்ற துணியை எழுதுவதற்கு உபயோகிக்கின்றனர். பருத்திதுணியை சுமார் ஒரு அடி அகலம் மற்றும் பலஅடி நீளமாகச்செய்து, அதன்மேலே புளியங்கொட்டையின் தோலால் ஆன குழைவைச்சமனாக அப்பி, நயமான கூழாங்கல்லினாலே தேய்த்துப்பதமாக உலர்த்தி, அதற்கு விளக்கின் கரியையோ அல்லது கரிப்பொடியையோ கெட்டியாகத் தடவி, பூசி கருப்பு வண்ணத்திற்கு கொண்டு வருகின்றனர். உலர்ந்த பின்னர் 'பலப்பம்'

(சிலேட்டுக் குச்சி) சீமைசுண்ணம் (சாக்பீஸ்) ஆகியவற்றைக்கொண்டும் அல்லது சோப்புகளாலான குச்சிகளாலும் எழுத்துக்களை எழுதலாயினர். இவ்வாறு எழுதப்படும் எழுத்துமூலங்கள் வெளுப்பு நிறமுடையதாயும் விளங்கும்.

இது பெரும்பாலும் அரசர்களுடைய ஆஸ்த்தானத்தில் எழுதுபொருளாகப் பயன்பட்டு வந்தது. இந்த 'கடித' அல்லது கடத்தா' என்னும் எழுது பொருளின் குறிப்பை கன்னடநாட்டின் ஆதிகவி, புராணகவி என்றவாறெல்லாம் போற்றப்படுகின்ற 'பம்பகவி' நமக்குத் தருகின்றார். பம்பபாரதம் கன்னட ஸாஹித்யத்தில் குறிப்பிடத்தக்க நூல்களுள் ஒன்று. முன்னாளில் இது அரசர்களின் ஆஸ்த்தான எழுது பொருளாகி செய்திகளை அறிவிக்கும் கருவியாகவும் விளங்கியது. அது பல அடிநீளம் பெற்றிருப்பினும் நாற்சதுரவடிவில் மடித்து மடித்து வைக்கப் பெற்றிருப்பதும் ஆகும். இந்த கையெழுத்துப் பொருளான 'கடித' சிருங்கேரி மடத்தைச் சார்ந்த சில மைசூர் ஓரியண்டல் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ளன. மைசூர் பிராந்தியத்திலுள்ள மேல்கோட்டை எனும் சிற்றூரின் சம்ஸ்க்ருத சம்சோதன சம்ஸத்தில் 'கடித' என்ற எழுதுபொருள் சுவடிப்பிரிவில் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

அந்த அமைப்பின் அடிப்படையிலேயே சிறிது மாற்றத்தைச் செய்து, ஒரு சிறிய நீண்ட நாற்சதுரத்தில் காகிதவடிவு கொண்டு அமைந்த அட்டையை அல்லது ஒரு எழுதுபொருளை இன்றைய நாளில் நாமும் கடிதம் என்று அழைக்கிறோம். இப்படி நாம் அன்றாடம் ஒருவருக்கொருவர் தத்தம் செய்தியைப் பகிர்ந்து கொள்ள பயன்படும் காகிதம் கடிதம், கடுதாசி என்றவாறு அழைக்கும் முறை கன்னட

ஸாஹித்தியத்தின் வழி வந்திருக்கலாம். பழைய கன்னடத்தில் நிரம்பத் தமிழ்ச்சொற்கள் இருப்பதும் ஈண்டு நினைக்கத்தக்க ஒன்று.

பூலருக்கு சேசல்மீர் என்ற இடத்தில் மஷியில் எழுதிய ஜைன சூத்திரங்களின் பட்டியல் இருக்கும் ஒரு பட்டுத் துணியிலான கட்டு கிடைத்துள்ளது. அணகில் வாடபைடணத்தில் இருந்து (இவ்விடத்திலிருந்து) பெடர்சன் என்ற அறிஞருக்கு கிடைத்த கையெழுத்துப்பிரதி மேல் இருந்த துணியில் அந்நூல் இயற்றிய காலம் விக்ரமசம்வத்ஸரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

1-9. தோற்காகிதங்கள்

தோற்காகிதங்களை கி.மு. 2ஆம் நூற்றாண்டில் பர்கமஸ் துரையான 'யூமனஸ்' என்பவர் நடைமுறைக்கு கொண்டுவந்தார்.* தோற்காகிதங்கள் பற்றிய ஒரு குறிப்பு சுபந்துவின் வாசவதத்தையில் இடம் பெற்றுள்ளது. 8. "விச்வம் கணயதோ தாது: சசி கடினீகண்டேன தமோ மஷீ ச்யாமே அஜின இவ, வியதி ஸம்ஸாரஸ்யாதி சூன்யத்வாத் சூன்யபிந்தவ இவ விலிகிதா:" (பொ) உலகினையே தன் கணிப்பில் கொண்ட பிரம்மதேவரால் தன்னுடைய கடினமான கண்டத்தினால் (எழுதுகோல் (அ) எழுத்தாணியால்) இருளாகிற மஷீ = மை போன்ற கருமை நிறத்தின் நடுவே அஜினம்(=தோல். தோல் என்றாலே கிருஷ்ணாஜினம் எனும் மான்தோல் நினைவில் வருவது இயற்கை. அதிலும் புள்ளிமான் தோலைப்) போன்ற எழுதுபொருளாய் (அமைந்து) விளங்கும் வானத்தில் உலக வாழ்க்கை என்பது சூன்யமாகிறதால் சூன்யப்புள்ளிகளைப் போல விண்மீன்கள்

*பரவிதே காகித ரஹித ஸமாஜம் 8.7.1990

எழுதப்பட்டன. ஆறாம் நூற்றாண்டு அல்லது ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுபந்து கவி வாசவதத்தை வருணனைக்காட்சியின் அடிப்படை யிலும், கரோஷ்டி எழுதிய எழுத்தாவணம் 'ஸ்டைன்' அவர்களுக்கு கிடைத்துள்ளதாலும் தோல்களை எழுதுவதற்கு உபயோகித்தனர் என்ற ஊகமான கருத்தை வெளியிட்டுள்ளார். ஆனால் தார்மிகமான வழியில் அது அபவித்திரமானது என்று கணித்தால் இந்து எழுத்து முறைக்கு தொடர்புடைய இந்த ஊஹம் சரியல்ல என்று தோன்றுகிறது. யுரோப் தேசத்தின் சேகரிப்புப் பொருட்களில் காஷ்கரில் கிடைத்த சிலவற்றுள் தோல் துண்டுகள் இருந்து அவற்றின் மேல் பாரதீயலிபி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சீனா, துர்கிஸ்தானத்தில் நடத்திய ஆய்வுகளினால் சரித்திரத்தில் புது அத்தியாயம் ஒன்றை இயற்றிய ஸ்டைன் அவர்கள் நீயாத்தில் தோலின்மேல் எழுதப்பட்டுள்ள சுமார் 2 டஜன் கரோஷ்ட்டி எழுத்துப்பிரதிகளை கண்டுபிடித்துள்ளார். பாரதீய நாகரீகமும் இருந்து பௌத்தர்கள் வஸித்துக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் இத்தகைய எழுது பொருட்கள் இருக்கலாம் என்று யாரும் ஊகிப்பரல்லர். இந்த தொடர்புகளில் வின்ஸெண்ட ஸ்மித்(xv, 72,73 ம்யாக் க்ரிண்டல் அவர்களின் மொழியாக்கம்: ஸ்ட்ராபோ வர்ணித்த பிராசீன பாரதம், பக். 71.J.R.A.S. 1902. 282)திற்கு எழுதிய தன்னுடைய சிறுலேகனத்தில் ஸ்ட்ராபோ (Strabo) வினுடைய வேண்டுகோள் ஒன்றை விவரிக்கின்றேன். 14ஆம் நூற்றாண்டில் காலமான அகஸ்டஸ் சீஜரனுக்கு தோற்காகிதத்தின் மேல் எழுதியனுப்பிய பாரதீய அரசாவணம் ஒன்றை ஸ்ட்ராபோ அவர்கள் கவனித்துள்ளார். இப்படி அறத்தின் வழி நோக்கி அசுத்தம் என்று தீர்மானித்தாலும் பாரதத்தின் பழமைசார் எழுத்துமூலங்களுக்கு தோல்

அல்லது சருமகாகிதங்களை உபயோகப்படுத்தியிரார் என்று சொல்வதற்கில்லை.

1-10. மரம் :

விநயபிடகம் மற்றும் ஜாதகங்களில் மரத்தின் பலகைகளை எழுத உபயோகித்த குறிப்பு உள்ளது. பர்மா தேசத்தில் மெருகெண்ணை (வார்ணிஷ்) பூசிய இந்த பலகைகள் பொதுவாக எழுதப்பட்டன. அஸ்ஸாமில் கிடைத்த இவ்வகை கையெழுத்துப்பிரதி ஆக்ஸ்போர்ட் பாட்லியன் கிரந்தபண்டாரத்தில் உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளனர்.

1-11. உலோகம் :

இந்திய இலக்கியத்தில் உலோகங்களின் குறிப்பு மாத்திரம் கிடைப்பதன்றி பல முக்கிய தானசாஸனங்கள் உலோகப் பலகைகளின் மேலேயே செய்யப்பட்டுள்ளன. தங்கம் வெள்ளிப்பலகைகள் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. தக்ஷசீலத்தின் கங்குபிரதேச ஸ்தூபிகளிலும் பட்டிப்ரோலு என்ற ஸ்தலத்தில் ஹரகெ (சிற்பத்தின் வார்ப்புபோன்ற) சாஸனங்களின் அநேக மாதிரிகள் கிடைத்துள்ளன. இவற்றைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் கிடைத்தவை என்றால் தாமிரப் பலகைகள். இவைகளுக்கு தாமிரபடம், தாமிரசாஸனம் (படம்-9) தாமிரம் போன்ற பெயர்கள் உள்ளன. நீண்ட காலம் இருக்கவேண்டுதான பல்வகை ஆவணங் களுக்கும், விசேஷமாக தானசாஸனங்களுக்கும் இவை உபயோகப் படுத்தப்பட்டன. பாஹியான் (400 A.D.) அவர்கள் புத்தருடைய காலத்திலிருந்தே கொடுக்கப்பட்டு வந்த சில தாமிரபலகைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

மௌரியரின் காலத்தில் அரசு நிர்ணயங்களை தாமிரத்தின் மேலே குடைந்து எழுதினர் என்று சோகார்

பலகை தெரிவிக்கிறது. எழுத்துகள் அவற்றின் மேலுள்ள அரசுச் சின்னங்களையும் எழுத்தாணி அல்லது கூரிய மரக்குச்சிகளாலே குடைந்து வார்ப்படம் தயார் செய்துகொண்டு தாமிரத்தைக் காய்ச்சி ஊற்றி இந்த தாமிரசாஸனம் தயாரிக்கப்படுகிறது. ஆகையால் எழுத்துக்கள் அரசுச்சின்னங்கள் ஆகிய இரண்டும் பலகையின்மேல் தெளிவாகவும் எடுப்பாகவும் காணப்படுகின்றன. இன்னும் பிற தாமிரப்பட்டயங்கள் உளி, சுத்தியல்கொண்டு செதுக்கி செய்யப்பட்டவை. இவை பருமனிலும் அளவிலும் வெவ்வேறானவை. சில சாஸனங்கள் இரண்டாக மடிக்கவும் முடியும் வண்ணம் சில ஔன்ஸ் நிறுவையுள்ள மெல்லிய தகடுகளின் மேலுள்ள இன்னும் சில விபரீதமாய்ப் பெரிதாயிருந்து 8 மற்றும் 9 பௌண்டு அல்லது இன்னும் அதிகபாரம் உள்ளதாய் இருக்கின்றன. இந்த தாமிரப் பலகை களுடைய அளவு குறைந்தபக்ஷம் எழுதவேண்டிய சாஸனத்தின் நீளம் எழுத்தாளனின் கையெழுத்துப் பிரதியின்முறை முதலானவற்றைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

பொற்கொல்லர்கள் பொதுவாக தம்மிடம் கொடுத்த மூலத்தை அப்படியே பிரதி செய்வார்கள். தாமிர சாஸனங்களாகச் செய்ய அளிக்கும் ஆவணங்கள் தாளபத்திரத்தின் மேலிருந்த காரணத்தால் தாமிரப் பலகைகளும் அவை போலவே அக்காலத்தில் சிறியதாகவும் நீளமாகவும் இருக்கலாயின. சாஸனங்கள் பூர்ஜபத்திரங்களின் மேலிருந்ததால் தாமிரப்பலகைகள் அதிக அகலமாயிருந்தது மட்டுமின்றி நாற்சதுரங்களைக் கொண்டதாகவும் காட்சிதந்தன. சிறு தாமிரப்பலகைகள் தென்னிந்தியாவிற்கும் பெரும்பலகைகள் அங்கிருந்து வடக்கேயுள்ள பிரதேசங்களுக்கும் சிறப்புடைத்தாய் இலங்குகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட தாமிரப் பலகைகள் தேவைப்பட்டால் பலகைகளின் தலைப்

பகுதியில் துவாரம்செய்து அவற்றை சின்னங்கள் தாமிர மோதிரத்தால் ஒன்றாய் பிணைத்திடுவர். தெற்கில் (தென்னிந்தியாவில்) ஒரே மோதிரம் இருப்பது காணக்கிடைக்கின்றது. பல தாமிரவிக்கிரஹங்களில் கீழ்ப்பகுதியில் பல எழுத்துச்சாஸனங்களும் காணக் கிடைக்கின்றன. தாமிரவிக்கிரஹத்திற்கு தமிழகக் கோயில் கலைமரபு நூல் தரும் திருவிடைமருதூர் பாவை விளக்கினையும், சிலா விக்ரஹங்களுக்கு தஞ்சை பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில் ஆழ்வாராதி களையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ஓவியம் மற்றும் அணிகலன்களில் கீழ்ப்பகுதியிலும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளவை சில பின் இணைப்பில் கொடுக்கப்படுகின்றன. (படம்.10)

2-1. ஏடு எழுதுதலும் எழுத்தாளர்களும்

மராட்டியர்கள் தஞ்சையை ஆட்சி செய்கின்ற காலத்தில் தஞ்சையில் 'நவவித்யா கலாநிதி சாலா' சிறப்பிடம் பெற்றிருந்தது. அங்கு ருக் முதலான நான்கு வேதங்களும் ஆறு சிரௌதசூத்திரங்களும், காவியம், நாடகம், அலங்காரம், நியாயம், வியாகரணம், மீமாம்ஸம், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சோதிடம், சங்கீதம், சிற்பம், வைத்யம், தர்மசாஸ்த்ரம் ஆகியவற்றோடு சாஸ்த்ரீயம், தமிழ், ஆங்கிலேயம், யுனானி போன்றவை போதிக்கப் பட்டன. சுவடி எழுதுவதற்காக எழுத்துக்களைச் சொல்லிக்கொடுக்கும் வகுப்பும் ஆங்கே இடம்பெற்று இருந்தது. நவவித்யா கலாநிதி சாலையில் மராத்தி, தெலுங்கு, தமிழ், கிரந்தம், துளு, பார்சி, அரபி, தக்ஷிணபாஷை போன்றவற்றை முறையே இருபத்தாறு நபர்கள் (6+2+2+6+2+2+2+4=26) பயிற்றுவிப்பவர்கள் ஆவர். ஆங்கே ஆங்கிலபாஷையும் கற்பிக்கப்பட்டது. இந்த நவவித்யாகலாநிதி சாலை சரசுவதி பண்டாரத்தில்

இருந்தது. மாணாக்கர்கள் இதிலேயே தங்கியிருந்தனர். அவர்களுக்கு சனி மற்றும் புதன்கிழமைகளில் எண்ணெய்தேய்த்துக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப் பட்டன. இக்கலாசாலையிலேயே அச்சகமும் இருந்திருத்தல் வேண்டும். நவவித்யா கலாநிதி சாலையின் சொத்தாக சமுத்திரத்தோட்டம் 160 சக்கரம் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டது அறியப்படுகிறது. 1797ல் இச்சாலை இருந்ததற்கான குறிப்பும் காணக் கிடைக்கிறது.*

2-2. சுவடித்துவக்கல்

அக்ஷராப்யாஸத்திற்குப் பிறகு ஒவ்வொரு சுவடியையும் படிக்கத்தொடங்கும் காலம் ஒரு சிறு திருவிழாவாகக் கொண்டாடப்படும். இதனை 'சுவடித்துவக்கல்' என்று சொல்லுவார்கள். மராட்டியர் காலத்தில் எழுதப்பயிற்சி தொடங்கும் சடங்கே சிறப்பாக நடைபெற்றுள்ளது. இரண்டாம் துளஜாகாலத்தில் மாருதி எனும் மன்னரின் மகள்வழிப் பேரனுக்கு எழுத்துக்களை எழுதத்தொடங்கி வைக்கும் சடங்கில் 15 வராகன்கொண்டு நிறுவிய வெள்ளிப் பலகையும், அதில் எழுத அரைவராகன் எடையுள்ள தங்கஎழுதுகோலும் தயார்செய்தமை மோடி ஆவணம் குறிப்பிடுகின்றது.

தஞ்சை அரண்மனையின் மேற்கொள்ளும் 56 தொழில்களுள் காகிதம் மற்றும் ஓலைச்சுவடி எழுதுதல் ஒன்றாகக் கருதப்பட்டது. அவ்வாறு அரண்மனையில் மொத்தம் 307 பேர் பணியாற்றியமையையும் ஏடு எழுதுவோர் மாதச்சம்பளத்தில் நியமிக்கப்படுவதையும் மோடி ஆவணம் தெரிவிக்கின்றது. க்ன்னடம் எழுத

---

* தஞ்சை மராட்டியர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், ப. எண். 244, 245.

சதாசிவபட்டரும், சுப்பராயபட்டரும், தெலுங்கு எழுத சிதம்பரசாஸ்திரியும், கிரந்தம் எழுத மன்னார்குடி சீதாராம அய்யரும், தமிழ் எழுத வேலாயுதம்பிள்ளை, அழகம்பிள்ளை, வேலாயுதமுதலி, சுந்தரராஜமுதலி, சுப்பராயப்பிள்ளை, வெங்கடாசலம்பிள்ளை, சாமிநாதபிள்ளை, வாசுதேவப்பிள்ளை ஆகியோர்களும் நியமிக்கப்பட்டிருந்ததை மோடி ஆவணம் நமக்குத் தெரிவிக்கின்றது. வாசுதேவப்பிள்ளை எழுதிய கம்பராமாயணம் தஞ்சை சரசுவதிமகால் நூலக அருங்காட்சியகத்தில் இன்றும் நாம் கண்டு மகிழலாம்.

தமிழ் ஏடு எழுதுபவர்களில் குறிப்பிடப்பெற்ற வேலாயுதமுதலியின் வழித்தோன்றல்கள் களத்தூரில் வசித்துவருகின்றனர். கடந்த 31-3-2004 அன்று களத்தூரிலிருந்து கல்விச்சுற்றுலா வந்தவர்களுள் ஒருவர் தஞ்சை சரசுவதிமகால் நூலக அருங்காட்சியகத்தினைப் பார்வையிட்டுப் பிறகு தாம் அரண்மனை ஏடு எழுத்தாளராகிய வேலாயுத முதலியின் வழிவந்தவர்கள் தாங்கள் என்றும், தங்களுக்கு சரபோஜி மன்னர் நிலம் அளித்துள்ள செய்தியையும் தெரிவித்துச்சென்றார்.

இவ்வாறு எழுதப்பெற்ற சில ஏட்டுச் சுவடிகளின் விவரம் கீழ்வருமாறு - கி.பி. 1823ல் பாகவதம் - தசமஸ்கந்தம்-பூர்வார்தம்(முதல்பாதி) எழுதப்பட்டது. 1829ல் ஸ்கந்தபுராணமும், கூர்மபுராணமும் எழுதப் பட்டன. வேதபுத்தமும், கிரந்த எழுத்தில் (படம்.11) யஜுர் வேதபாஷ்யமும் எழுதப்பட்டன. இதனை ஏடுபடுத்திய குப்பாச்சாரிக்கு 1000 கிரந்தம் எழுத 3 ரூபாய்கள் அளிக்கப்பட்டன. திருவாய்மொழி ஆயிரம் பாசுரத்தினுடைய உரை தான் 'பகவத் விஷயம்' என்று

சொல்லப்படுகிறது ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாராயிரப்படி போன்றவை திருவாய்மொழியின் உரைநூல்கள். இங்கு படி என்ற சொல் 32 எழுத்துகளைக் குறிக்கும். இதுவே வடமொழியில் கிரந்தம் என்ற எண்ணிக்கையைக் குறிக்கின்றது. ஆராயிரப்படி என்றால் ஆராயிரம் 32 எழுத்துகள் அதிலே இருக்கிறது என்பது பொருள். அவ்வாறு கணக்கிட்டு மேற்கூறிய உரை நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.[1] ஒரு சுவடியிலுள்ள கிரந்தங்களை கண்டுபிடிக்க பின்னிணைப்பிலுள்ள பட்டியல் முறையைப் (படம். 12) பார்க்கவும்.

2-3. எழுத்தாணி

தமிழ்த்தாத்தா எனப்போற்றப்பெறுகின்றவரான உத்தமதானபுரம் வே. சாமிநாத அய்யர் அவர்கள் தமது நூலில் குறிப்பிடும் எழுத்தாணிகள் குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, (படம்.13) என மூவகைப்படுகின்றன. சரசுவதிமகாலை வளர்த்தற்கு சுவடிகளை எழுத சரசுவதிமகாலுக்காக 1827 ஆம் ஆண்டு 501 எழுத்தாணிகள் தாராசுரம் அன்னசத்திரமான இராஜசாம்பாபுரத்திலிருந்து வாங்கப்பெற்றன. இராஜசாம்பாள் என்பவள் இரண்டாம் துளஜாவின் முதல் மனைவியாவார்.[2] கிருஷ்ணம்பட் கோஸ்வாமி பாரியை 'என் எஜமான் சரசுவதி மகாலில் வேலைபார்த்தார். இப்போது எனக்கு (என் பிழைப்புக்கு) வேறு ஆதாரம் இல்லாததால் மாசம் ரூ 2 பென்ஷன் கொடுக்கவேண்டும்' என்று விண்ணப் பித்திருப்பதும் ஈண்டு நினைக்கத்தக்க ஒன்று.

---

1. ஸ்ரீ ரங்கநாதபாதுகா Vol.I/issue.4/மே 2011.

2. தஞ்சை மராட்டியர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக்க எண்கள். 254, 255, 256, 273.

2-4. அறிஞர்களின் சுயகைப்பிரதி

தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் அறிஞர்களின் கையால் எழுதப்பட்ட சுயகைப்பிரதிகள் சில காணக் கிடைக்கின்றன.

2-4.1. சரபோஜிமன்னர் எழுதியது

சரபோஜிமன்னர் தன் கைப்பட எழுதிய காகிதப்பிரதியும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படுகிறது. சரசுவதி மகால் நூலகம் பெற்றுள்ள பல சேகரிப்புத் தொகுதிகளில் திரு மஹாதேவராவ் என்பாரின் பெயரில் அமைந்த சுவடிச்சேகரிப்புத் தொகுதியும் ஒன்று. அதில் தேவீபாகவதம்-ஸ்காந்த புராணம் ஆகியவற்றைச் சார்ந்த தோத்திரங்கள் பல உள்ளன. 9 'தஞ்சாவூர் சப் கோர்ட் அசல் நம்பர் 26 சன் 1916 இஸ்வீ மொகாஸா ராஜ்ய நாயக சரபோஜி ராஜே ஹஸ்தலிகித' என்கிற சொற்றொடர் அதன்மீது குறிக்கப்பட்டுள்ளது. அச்சுவடி 1916 ஆண்டு சரசுவதி மகால் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.[1]

2-4.2. பாஸ்கரராயர் எழுதியது

சாக்தவழிபாட்டில் சிறந்த பாஸ்கரராயர் வாரணாசியைச் சேர்ந்த கம்பீரராஜபாரதி தீக்ஷிதரின் குமாரர். இவர் கங்காதரவாஜபேயி என்பவரை ஆசானாகக் கொண்டவர். சகஜிமன்னரின் ஆதரவைப் பெற்று காவிரிக்கரையில் ஒரு கிராமம் பரிசிலாகப் பெற்றவர். பரிசில் பெற்ற அந்த கிராமம் பாஸ்கரராயபுரம் என்று பெயர் பெற்றது. அந்த பாஸ்கரராயர் தன் கைப்பட எழுதிய சுவடி இது என்பதனை கீழ்க்காணும் சுலோகம் நன்கு விளக்குகிறது.

---

1. அகரவரிசைச் சுவடிவிவரப் பட்டியல் எண். 25, Mss No. 4789 A&b D.No. 27369.

10. ஸ்ரீமச்சாஹ மஹீசமண்டன ஸமாக்ஞப்தைர் முஹுஸ் ஸாதரம்
ஸ்ரீ கங்காதர வாஜபேய மகிபி: ஷட்தர்சினீ பாரகை: |
தேனேவைதிக தந்த்ரஸங்கிரஹ இதி கிரந்தோயம் ஏதாம் ஸதாம்
துஷ்ட்யை பாஸ்கரராய நாமகக்ருதீ பாரத்யுபாஸ்யோ஽லிகத்[1] ||

(பொருள்) சகஜி மன்னரின் கட்டளையின் பேரில் மிகுந்த ஆர்வத்துடன் ஸாங்க்யம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்ஸா, உத்தரமீமாம்ஸா ஆகிய ஆறு தர்சனங்களில் வல்லோரான கங்காதரவாஜபேயி அவர்களால் அவைதிக தந்த்ர ஸங்கிரஹம் என்னும் நூல் இயற்றப்பட்டது. அந்நூலின் கையெழுத்துப்பிரதி நல்லோர்களின் மகிழ்ச்சிக்காக மந்த்ரோபாஸகரான பாஸ்கரராயரால் ஏடுபடுத்தப்பட்டது.

2-4.3. அப்பாதீக்ஷிதர் எழுதியது

இவர் பெரி அப்பாசாஸ்திரி எனப்படும் அப்பாதீக்ஷிதர் தஞ்சாவூருக்கு அருகே உள்ள கீழையூர் அக்ரஹாரத்தில் வாழ்ந்தவர். இவரது காலம் 1684-1711 ஆகும். இவர் ஷாஜி அவைப் புலவர்களில் ஒருவர். அந்த அப்பாதீக்ஷிதர் தன் கைப்பட எழுதிய சுவடி இது என்பதனை கீழ்க்காணும் சுலோகம் நன்கு விளக்குகிறது.

11. பிரஜோத்பத்தௌ கும்பமாஸே தர்சே கௌசிகசம்பவ: |
அப்பாதீக்ஷிதநாமாயம் அலிகத் யுத்தகாண்டகம்[2] ||

(பொருள்) பிரஜோத்பத்தி ஆண்டு, மாசித்திங்கள், அமாவாசை கூடிய சுபதினத்தில் கௌசிக கோத்திரத்தின் வழிவந்த அப்பாதீக்ஷிதர் என்பவரால் யுத்தகாண்டம் எழுதப்பட்டது.

---

1. Sanskrit Catalogue No. 14, P.No. 6411, Avaidika Darsana Sangraha, Burnell No. 6502/D.cat. No. 8244.
2. Sanskrit Catalogue No.15, P.No. 6670, Ramayana, Burnell No. 11711 / D. cat. No. 9255.

2-4.4. உரைநூலாசிரியர் சுய கைப்பிரதி

தாளப்பாக்கம் அன்னமாச்சாரியர் குமாரர் பகவத்கீதையின் பொருளை தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார். அந்த சுவடி தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ளது.

தாளபாக்கம் அன்னமாச்சாரியர் என்பவர் பாரத்துவாஜ கோத்திரம் - ஆச்வலாயனசூத்ரம்- இருக்குவேதம் - நாராயணசூரி லக்ஷ்மாம்பா தம்பதியினருக்கு கி.பி. 1424 ஆம் ஆண்டு வைகாசி விசாகம் கூடிய சுபதினத்தில் திருவேங்கடவனின் நந்தகாம்சம் பொருந்திய புதல்வராய்த் தோன்றியவர். தாள்ளபாக்கம் என்றும் அழைக்கப்பெறும் இவ்வூர் ஆந்திர மாநிலம் - கடப்பை மாவட்டம் இராசம்பேட்டை வட்டத்தில் உள்ளது. அன்னமாச்சாரியர் அவர்கள் 32000 தெலுங்கு கீர்த்தனங்களை திருவேங்கடவன் மீது இயற்றியுள்ளார்.

அன்னமாச்சாரியருக்கு திம்மக்கா அக்கம்மா என்று இரு மனைவியர்கள் இருந்தனர். அன்னமாச்சாரியர்- அக்கம்மா தம்பதியினரின் வழித்தோன்றல் பெரிய திருமலாச்சாரியர் (கி.பி. 1458-1554) ஆவார். பல நூல்களுக்குச் சொந்தக்காரரான இவரது நூல்களுள் தெலுங்கு வசனத்தில் அமைந்த பகவத்கீதையும் ஒன்று.

சுவடி தரும் தெலுங்குமொழிக் குறிப்பு

12. இதி ஸ்ரீதாளப்பாக்க அன்னமாச்சார்ய புத்ருண்டைன திருமலை அய்யகாரு பகவத்கீதார்த்தமு தெலுகுசேஸி அர்த்தம் வ்ராசிஞ்சினதி, பத்தெனிமிதி அத்யாயாலு ஸம்பூர்ணமு.*

---

* Sanskrit Catalogue No. 15, P.No. 6573, Bhagavatgita, Burnell No. 11467/ D.cat. No. 8918.

(பொருள்) தாளபாக்கம் அன்னமாச்சார்யரின் திருக்குமாரரான திருமலைய்யன் என்பவர் பகவத்கீதையின் பொருளை தெலுங்கு மொழியில் இயற்றி, பொருள் எழுதியது. பதினெட்டு அத்தியாயங்கள் முற்றுபெற்றன. மேலே கூறப்பட்ட குறிப்பால் இந்நூல் உரைஆசிரியரும், சுவடி எழுதியவரும் ஒருவரே ஆகலாம் என்று கருதப்படுகிறது.

2-5-1. ஏடு எழுத்தாளர்கள்

ஏடு எழுதும் எழுத்தாளர்களையும் மூன்று வகையாக வகைப்படுத்தி உள்ளனர் ஆன்றோர். அவர்கள் 1. பணிக்கப்பட்ட சுவடி எழுத்தாளர்கள். 2. வாழ்க்கைப் பணி சுவடிஎழுத்தாளர்கள். 3. பிறர் நலம்பேணும் சுவடிஎழுத்தாளர்கள் என்றவாறு அறியப் பெறுகின்றனர். ஏடு எழுதுதலும் மேற்காணும் வகையில் அமைவதை சில எடுத்துக்காட்டுகளுடன் இங்கே விளக்கப்படுகின்றது.

2-5-2. பணிக்கப்பட்ட சுவடி எழுத்தாளர்கள்

சுவடிநூல்களை எழுதுவதற்கென சில எழுத்தாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஆதலால் இவர்கள் 'பணிக்கப்பட்ட சுவடி எழுத்தாளர்கள்' ஆவர்.

13. அத்ரியங்கேஷு மஹீமிதேஷு சகபூபாப்தேஷு
பர்யாபிதேஷ்-
வப்தே ராக்ஷஸநாம்னி மாதவ ஸிதாஷ்டம்யாம்
ரவேர் வாஸரே ।
ஏகோஜி க்ஷிதிபாக்ஞயா கவி க்ருபாநாதேன
மேதாவினா
முத்ராராக்ஷஸ நாடகம் விலிகிதம் சாணக்ய
நீத்யுஜ்வலம் ॥[1]

1. DC. Vol.VIII, P.No. 3469, Mudra rakshasa, paper Manuscript.

இம்முறை இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்திலும் தொடர்ந்தமைக்கு கீழ்க்காணும் சுலோகம் சான்றாகிறது.

14. சரபேந்திர மஹீநேது: ஆக்ஞயா புதஸன்னுத: ।
ரகுவம்ச மகாகாவ்யம் ஸகம்பட்டோ வ்யலீலிகத் ।।[1]

சரபேந்திர மஹாராஜாவின் கட்டளையால் ஸகம்பட்டர் என்பவர் ரகுவம்சம் எனும் பெருங்காப்பியத்தை ஏட்டில் எழுதினார் என்பது சுலோகத்தின் பொருள்.

தஞ்சை சரசுவதி பண்டாரத்தில் சகம் 1767 (+78=1845AD) ஆம் ஆண்டு பனை ஓலைப்புத்தகம் எழுதுவதற்காக ஒருவரும், எடுப்பதற்காக ஐவரும், காகிதப்புத்தகம் எழுதுவதற்காக பதினொருவரும், எடுப்பதற்காக அறுவரும், ஆங்கிலப்புத்தகம் ரக்ஷகர் இருவரும் இன்னும் பிறபணியாளர்களும் ஆக மொத்தம் 87 நபர்கள் பணியாற்றினர் என்று மோடி ஆவணம் குறிப்பிடுகிறது.[2]

'குரோதிவருடம், மாசிமாதம், 22 ஆம்தேதி மத்யார்ஜுனம் மஹாதானபுரத்திலிருக்கும் மஹா-ரா-ஸ்ரீ சேஷப்பையரவர்கள் ஸரஸ்வதீகோசத்துக்கு தேப்பெருமாள் நல்லூரில் இருக்கும் வைத்யநாதசிவன் புத்திரன் காசீபதி எழுதினது'[3] எனக் கிடைக்கும் குறிப்பின்படி சரசுவதி மகால் நூலகம் போன்று திருவிடைமருதூரில் 'ஸரஸ்வதீ கோசம்' என்று ஒரு நூலகம் இருந்திருப்பது தெரிய வருகிறது.

---

1. DC. Vol.VI, P.No. 2436, Raghuvamsa, paper Manuscrupt.
2. மோடி ஆவணத்தமிழாக்கமும், குறிப்புரையும், T.9774, P.No. 304-308, T.M.S.S.M.L. Tanjore.
3. DC. Vol.XV, P.No. 6445, D. No. 8257, T.M.S.S.M.L. Tanjore.

2-5-3. வாழ்க்கைப்பணி சுவடிஎழுத்தாளர்கள்

ஏடுகளில் எழுதி பிறகு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு பிறரிடம் கொடுப்பவர் 'வாழ்க்கைப்பணி சுவடிஎழுத்தாளர்கள்' ஆவர். தஞ்சாவூர் ராஜ்யத்தில் பிழைப்பிற்காக வேண்டி ஏடு எழுதியவர்கள் பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கின்றது.

(அ)15. ராஜே ஸ்ரீ அருணாசலபட்ட லிகிதாத் தஞ்சாபுரே பிரபவ: கோபால சக்ரபணம் ஏகம் உசபூ தத்வா ஸம்பாதிதம் I[1]

(பொருள்) அருணாசலபட்டர் எழுதியதிலிருந்து தஞ்சாபுரி பிரபுக்களால் கோபால சக்ரம் பணம் ஒன்றினை உசபூ (பொருள் தெரியவில்லை) கொடுத்து இந்த மஹாபாரத நூல் பெறப்பட்டுள்ளது.

(ஆ.) ஸ்ரீ அருணாசலபட்ட லிகிதாத் தஞ்சாபுரே பிரபவ: கோபால சக்ரபணம் தத்வா ஸம்பாதிதம் I[2]

(பொருள்) அருணாசலபட்டர் எழுதியதிலிருந்து தஞ்சாபுரி பிரபுக்களால் கோபாலசக்ரம் பணம் கொடுத்து இந்த முத்ராராக்ஷஸ நூல் பெறப்பட்டுள்ளது.

(இ) 17. சேஷபட்ட சுதீ புத்ர
பாலம்பட்டேன தீமதா ।
திரவ்யை: ஸம்பாதிதமிதம்
ஜகஜ்ஜானாது புஸ்தகம் ॥[3]

(பொருள்) அறிஞரான சேஷபட்டரின் புதல்வர் பாலம்பட்டர் எனும் பண்டிதரால் இந்த 'ஆக்யாதவாத

---

1. சரகவதி மகால் நூலகம், தஞ்சாவூர். பருவஇதழ்-51
2. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். பருவஇதழ்-51
3. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். பருவஇதழ்-51

டிப்பணி' நூல் நிதியளித்து பெறப்பட்டுள்ளது. இதனை புத்தக உலகம் அறியட்டும்.

மராத்தியமன்னர்கள் ஆட்சிவருவதற்கு முன் நாயக்கமன்னர்கள் தஞ்சையை. ஆண்டுவந்தனர். அவர்களுள் விஜயராகவநாயக்கர் காலத்தில் கோபாலசக்கரம் எனும் நாணயம் வெளியிடப்பட்டது. அந்த கோபாலசக்கரம் நாணயத்தைக் கொடுத்து சுவடி பெற்றமை குறிப்பிட்டுள்ளபடியால் சிலர் சுவடிகளை எழுதி, விற்று வாழ்ந்துள்ளனர் என்பது உறுதியாகின்றது.

2-5-4. பிறர் நலம் பேணும் சுவடிஎழுத்தாளர்கள்

சுவடிஎழுதுதல் என்பது தனக்கும் பிறருக்குமாக சிலர் மேற்கொண்டனர். இச்செயல் இஷ்டதேவதை-குலதேவதை-குரு ஆகியோர்களின் மகிழ்ச்சியின் பொருட்டும் மேற்கொள்ளப்படுகிறது.

2-5-4.(அ) தனக்காக சுவடிஎழுதுதல்

சுவடிஎழுத்தாளர் தன் இதமளிப்பான் பயன்கருதி இதனை எழுதியுள்ளார் என்பது தெரியவருகிறது.

'கணபதி சதுர்த்தீ விரதம்' என்னும் சுவடியின் இறுதியில் 18. சோபக்ருத் ஸம்வத்ஸரே, மார்கசீர்ஷ மாஸே, சுக்லபக்ஷே, பிரதிபதி, ப்ருகு வாஸரே ஆத்மஹிதார்த்தம் கணபதிசதுர்த்தீ விரதம் லிக்யதே. கோவிந்த ஜங்கம கோட கிராமே. சுபமஸ்து.[1]

(பொருள்) சோபக்ருத் ஆண்டு, மார்கசீர்ஷ மாஸம், வளர்பிறை, பிரதமை, வெள்ளிக்கிழமை, கணபதி சதுர்த்தீவிரதம் ஜங்கமகோட்டை எனும் சிற்றூரில் கோவிந்தன் ஆகிய என்னால் ஆத்மஹிதார்த்தம் இது

---

1. சம்ஸ்க்ருத சுவடி எண்.15196, T.M.S.S.M.L. Tanjore.

எழுதப்பட்டது. (அனைவருக்கும்) நலம் உண்டாகட்டும் என எழுதியுள்ளார்.

2-5-4 (ஆ) தனக்கும் பிறருக்குமாக சுவடிஎழுதுதல்

சுவடி எழுத்தாளர் தரும் இறுதி குறிப்பால் தனக்கும் பிறருக்கும் பயன்படுமாறு இதனை எழுதியுள்ளமை அறியப்படுகிறது.

எழுத்தாளர் தரும் குறிப்பு

19. சகே 1617 விபவநாம ஸம்வத்ஸரம் ஜ்யேஷ்ட்ட சுத்த பௌர்ணிமா மங்களவாஸரே தஞ்சபுர்யாம் நாகோஜி பண்டிதேன லிகிதம், ஸ்வார்த்தம், பரார்த்தம் ச ।[1]

(பொருள்) சகம் 1617 (+78=1695 AD) விபவ ஆண்டு, ஆனித்திங்கள் சுத்த பௌர்ணமி செவ்வாய்க்கிழமை தஞ்சாவூரில் நாகோஜிபண்டிதர் என்பவரால் 'பிரஸன்னராகவம்' எனும் சுவடி தனக்கும் பிறருக்கும் பயன்படுமாறு எழுதப்பட்டது.

2-5-4 (இ) தெய்வமகிழ்விற்காக சுவடிஎழுதுதல்

சுவடி எழுத்தாளர் தரும் இறுதிகுறிப்பால் தாமுகக்கும் தெய்வத்தின் மகிழ்ச்சிக்காக இச்சுவடி எழுதியுள்ளமை அறியப்படுகிறது.

எழுத்தாளர் தரும் குறிப்பு

20. விகாரி ஸம்வத்ஸரீய நபஸ்யமாஸி அஷ்டமீ ஸோமவாஸரே தஞ்சாநகர்யாம் இதம் உபநிஷத்கிரந்தம் சிவ: ப்ரீத்யர்த்தம் லிகிதம் ।[2]

---

1. DC. Vol.VIII, P.No. 3699, Prasanna Raghava, paper Manuscript.
2. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. II, P.No. 701, Paper Manuscript.

(பொருள்) விகாரி ஆண்டு புரட்டாசி மாதத்தில் அஷ்டமீ திதி கூடிய திங்கட்கிழமையில் தஞ்சைமாநகரத்தில் இந்த உபநிஷத் நூல் சிவபெருமான் மகிழ்விற்காக எழுதப்பட்டது.

2-5-4 (ஈ) குலதெய்வமகிழ்ச்சிக்காக சுவடிஎழுதுதல்

சுவடிஎழுத்தாளர் தரும் இறுதி குறிப்பால் குலதேவதை ப்ரீதிக்காக இச்சுவடி எழுதியுள்ளமை அறியப்படுகிறது.

எழுத்தாளர் தரும் குறிப்பு

21. அனேன ப்ரீயதாம் தேவான் பகவான் ஜானகீபதி: ।
ஸ்ரீராமசந்த்ர: பூர்வேஷாம் அஸ்மாகம் குலதைவதம் ॥[1]

(பொருள்) நம்மாலும் நமது முன்னோர்களாலும் குலதைவதமாக வழிபாடு செய்துவரும் பகவான் ஜானகிமணாளன் ராமச்சந்திரன் 'பிரஸன்ன ராகவம்' என்கிற இந்த சுவடிஎழுதும் செயலால் மகிழ்வடையட்டும்.

2-5-4 (உ) குருவருள்பெற சுவடிஎழுதுதல்

சுவடி எழுத்தாளர் தரும் இறுதிகுறிப்பால் ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரீதிக்காகவும், குருவின் மகிழ்விற்காகவும் இச்சுவடி எழுதியுள்ளமை அறியப்படுகிறது.

எழுத்தாளர்தரும் குறிப்பு

22. மாலே பாத்ரபதே திதௌ பிரதிபதி குரோதாக்ய
ஸம்வத்ஸரே
ஸச்சப்தாம்ருதவர்ஷிதானி குவலயாநந்த பிரதாம்
கௌமுதீம் ।

1. Mss No. 2161/P.A. 364/D.No.4693, paper Manuscript.

சப்தஞான தமோபஹாம் முரரிபோ: ப்ராலேலிகத்
ப்ரீதயே
சேஷாக்யோ விபுதேந்த்ர தேசிகமணே: ஸூனு:
குருப்ரீதயே ||[1]

(பொருள்) குரோதி ஆண்டு, புரட்டாசி மாதம், பிரதமைதிதி கூடிய நன்னாளில் நற்செமில் ஆகிற அமுதமழைப்பொழிவால் ஆனந்தத்தை அளிக்கும் சந்திரகிரணத்திற்கு ஒப்பாக சப்தஞானமெனும் இருளைப்போக்கவல்ல இந்த சித்தாந்தகௌமுதி சுவடியை முரனின் எதிரியான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் மகிழ்ச்சிக்காகவும், விபுதேந்திர தேசிகமணியின் புதல்வரான சேஷசூரி தன்னுடைய குருப்ரீதிக்காகவும் எழுதியுள்ளார்.

2-5-5. சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

சுவடி எழுதுவோரின் புகலிடமாயும் இந்த தஞ்சாவூர் திகழ்ந்திருக்கின்றது. சரசுவதிமகாலை வளர்த்தற்குரிய சிறந்தவழி பல புதிய ஏட்டுச்சுவடிகளை படி எடுத்தலும், பழுதடைந்த சுவடிகளைப் புதுப்பித்தலுமே ஆகும் என்பதையறிந்த அரசர் பலமொழிகளிலுள்ள சுவடிகளை இடையீடின்றிப் பலமொழிகளில் வல்லவரை நியமித்துப் படியெடுக்கச் செய்தார். படியெடுத்தவர் பலராதல் கூடுமென்பதை 1827ல் 501 எழுத்தாணிகள் இராஜசாம்பாள்புரத்திலிருந்து விலைக்கு வாங்கப்பெற்றதிலிருந்து அறியலாம்[2].

2-5-5(அ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

24. அக்ஷரம் யத் பரிபிரஷ்டம்
மாத்ரா ஹீனம் ச யத்பவேத் ।
க்ஷந்துமர்ஹந்தி வித்வாம்ஸ:
கஸ்ய நாஸ்தி வ்யதிக்ரம:[3] ||

---

1. DC. Vol.II, P.No. 701, Kalagnirudropanishad, Paper Manuscript.
2. தஞ்சை மராட்டியர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும். ப.எண். 254
3. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. V, P.No. 2210, D.No. 2623, Paper Manuscript.

(பொருள்) சுவடிகளை எழுதுகின்ற தருணம் அரை எழுத்தாய் எழுதுவது, மாத்திரைக் குறைதல் போன்றவை நிகழலாம். அதையெல்லாம் மன்னிக்கத் தகுந்தவர்கள் அறிஞர்களே. தவறு யாருக்குத்தான் நிகழாது !

2-5-5 (ஆ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

25. அக்ஷரம் யத் பரிபிரஷ்ட்டம்
    மாத்ரா ஹீனம் ச யத்பவேத் ।
    க்ஷந்துமர்ஹந்தி வித்வாம்ஸ:
    க்ஷமா ஹி விதூஷாம் தனம் ॥[1]

(பொருள்) சுவடிகளை எழுதுங்காலத்தில் எழுத்து உடைவு, மாத்திரைக் குறைவு போன்றவை நிகழ்ந்திருப்பினும் அறிஞர்கள் மன்னித்தேற்க வேண்டும். பொறுமையே புலமையாளருக்கு புகழ்தரும் பெருஞ்செல்வம் ஆகும்.

2-5-5 (இ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

26. யதத்ர ஸ்கலிதம் த்யக்தம்
    பிரமாதாலஸ்ய தோஷத: ।
    தத் க்ஷந்தவ்யம் புதை: ஸத்பி:
    க்ஷமா ஹி விதுஷாம் தனம் ॥[2]

(பொருள்) எழுதும் செயலில் எங்கெல்லாம் சோம்பேறித்தனத்தின் விளைவால் எழுத்துக்களின் நழுவுதல், விடுகை போன்றவை நிகழ்கின்றதோ அவற்றை நல்லவர்களும், அறிஞர்களும் பொறுத்துக் கொள்ளவேண்டும். பொறுமையே புலமையாளர்களின் பெருஞ்செல்வம்.

---

1. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. 14, P.No. 5989, D.No. 7806, Paper Manuscript.
2. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. 13, P.No. 5694, D.No. 7600, Paper Manuscript.

2-5-5 (ஈ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

27. விஸர்கேஷு வர்ணேஷு மாத்ராஸு பங்க்தௌ-
அனுஸ்வார ஸம்யோகதைர்க்யேஷு யத்யத் ।
பிரணஷ்டம் பிரமாதேன ஹஸ்தஸ்ய தோஷாத்-
ஸமாலோக்ய ஸர்வம் ஸஹந்தாம் மஹாந்த: ||[1]

(பொருள்) எழுதும்போது வரிகளில் விஸர்கம் (விஸர்கம் = :) மாத்திரை (மாத்திரை = யாப்பிலக்கணம் கூறும் ஓர் அளவு) அனுஸ்வாரம் (மகாரத்தின் மேலிடும் ஒற்றைப்புள்ளி) சேர்த்தெழுதுதல் நெடில் போன்றவை கை முதலான இந்திரிய தோஷங்களால் விடுபட்டிருக்கலாம். பெரியோர்களாகிய தாங்கள் அனைத்தையும் நன்கு கவனித்து பிழைபொறுத்தருள வேண்டும் பிழை பொறுப்பது பெரியோர் கடன் அன்றே![2]

2-5-5 (உ)சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

28. அக்ஞாத தோஷான் மதிவிப்ரமாத் வா
யத்கிஞ்சிதூனம் லிகிதம் மயாத்ர ।
தத்ஸர்வமார்யை: பரிசோதனீயம்
கோபோ ந கார்ய: கலு லேககஸ்ய ||[3]

அறியாமை எனும் தோஷத்தாலும், அறிவின் தடுமாற்றத்தாலும், குறைவானவற்றை இங்கென்னால் எழுதப்பட்டது. இதை கற்றுணர்ந்த பெரியோர்கள் பரிசோதிக்க வேண்டுமே தவிர சுவடிஎழுதும் எழுத்தாளர்கள் மீது கோபம் கொள்ளக்கூடாது.

---

1. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. V, P.No. 2554, D.No. 3690, Paper Manuscript.
2. நாலாயிர திவ்யப் பிரபந்தம் - பெரியாழ்வார் திருமொழி. 5.1.2.
3. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. V, P.No. 3457, Paper Manuscript.

உ-5-5(ஊ) சுவடி எழுதுவோரின் வேண்டுகோள்

29. அத்ருஷ்ட தோஷான் மதி விப்ரமாத்வா
யதர்த்தஹீனம் லிகிதம் மயாத்ர ।
தத்ஸர்வமார்யை: பரிசோதனீயம்
கோபம் ந குர்யாத் கலு லேககஸ்ய ॥[1]

(பொருள்) பார்க்காத தோஷத்தாலும், அறிவின் தடுமாற்றத்தாலும், பொருளல்லாதவற்றை இங்கென்னால் எழுதப்பட்டது. இதையெல்லாம் பெரியோர்கள் பரிசோதிக்கவேண்டும். அதைவிட்டு எழுத்தாளர்கள் மேல் கோபமடைதல் தகாது.

உ-5-6. சுவடி எழுத்தாளர் தரும் பிற பயன்கள்

சுவடி எழுத்தாளர்கள் தாம் எழுதி முடித்த சுவடிகளின் இறுதியில் பல்வேறு செய்திகளைக் கொடுக்கிறார்கள். அவற்றுள் பயனுள்ள சிலவற்றை மட்டுமிங்கே நாமறிந்து மகிழ்வோம்.

உ-5-6 (அ) சகுனசாஸ்திரம்

எறும்புகள் வீடுகளில் ஊர்ந்து செல்கின்றன. அவற்றின் ஊருதலை நாம் எத்திசையில் காண்கிறோமா அத்திசையை வைத்துப்பொருள் அறியலாம்.

பிபீலிகா தர்சனபலம்(எறும்புகளைக் கண்டால் பயன்)

64. பிபீலிகா க்ருஹே ப்ராச்யாம்
அசிராத் அர்த்தநாசனம் ।
பந்த்வாகமனம் ஆக்னேய்யாம்
யமே ஸ்த்ரீ நைர்ருதே பலம் ॥

1. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. V, P.No. 3648, Paper Manuscript.

வாருண்யாம் ஸ்ரீஸ்து வாயவ்யே
பரேண க்ருஹிணீ வ்ரஜேத் ।
ஸௌம்யே மஹாஸ்ரீ: ஐசான்யே
பைக்ஷ்ம் மத்யே தனக்ஷய: ||[1]

(பொருள்) **கிழக்கு: விரைவில் பொருள் இழப்பு. தென்கிழக்கு: உறவினர் வருகை. தெற்கு: பெண் கிடைக்கும். தென்மேற்கு: பயன் விளையும். மேற்கு: செல்வம். வடமேற்கு: மனையாள் (மற்றொருவருடன்) சோரம். வடக்கு : பெருஞ்செல்வம். வடகிழக்கு: பிச்சை. நடுப்பகுதி: செல்வத்தின் அழிவு.**

2-5-6 (ஆ) வருணஜபமுறை

ஆஸ்யதக்னம் விகாஹ்யாப:
பிராங்முக: பிரயத: சுசி: ।
சூக்தாப்யாம் திஸ்ர ஆதிப்யாம்
உபதிஷ்டேத பாஸ்கரம் ||
அனச்னன் ஏதத் ஜப்தவ்யம்
விருஷ்ட்டி காமேன யத்னத: ।
பஞ்சராத்ரேऽப்யதிக்ராந்தே
மஹதீம் விருஷ்டிமாப்னுயாத் ||[2]

(பொருள்) **இருக்கு வேதத்தில் சொல்லப்பட்ட "திஸ்ரோவாச:" எனத்தொடங்கும் சூக்தத்தை மழையை விரும்புவனால் முயற்சிசெய்து உணவருந்தாமல் ஜபிக்கவேண்டும். முகத்தின் வரை நீரில் கிழக்கு பார்த்தவாறே திஸ்ர, ஆதி என்கிற இரு சூக்தங்களால் சூர்யனை உபாஸிக்கவேண்டும். இதை அனுஷ்ட்டிப்பவன் ஐந்து நாட்களில் பெருமழையைப் பெறுவான். திஸ்ரோ வாச: சூக்தத்திற்கு த.ச.ம. நூலகச் சுவடிவிவரப்பட்டியல் எண் 1ல் 89 ஆம் பக்கத்தினைப் பார்க்கவும்.**[3]

1. Catalogue xvii, P.No. 8157, D. No. 13648, T.M.S.S.M.L. Tanjore.
2. Catalogue I, P.No. 90/ T.M.S.S.M.L. Tanjore.
3. Catalogue I, P.No. 89/ T.S. 40 D.No. 156/ T.M.S.S.M.L. Tanjore

2-5-6 (இ) பாடகர்களின் குணாகுணங்கள்

மாதுர்யம் அக்ஷரவ்யக்தி:
பதச்சேதஸ்து ஸுஸ்வர: ।
தைர்யம் லயஸமர்த்தஞ்ச
ஷடேதே பாடகா:குணா: ॥
கீதி சீக்ரீ சிர:கம்பீ
ததா லிகிதபாடக: ।
அனர்த்தக்ஞ: அல்பகண்டஸ்ச
ஷடேதே பாடகாதமா:[1] ॥

(பொருள்) இனிமை, தெளிவான சொற்பிரயோகம், பதப்பிரிவு, நல்லஸ்வரம், தைர்யம், லயத்தில் வல்லமை இவை ஆறும் பாடகர்களின் குணங்களாகும். பாட்டு, விரைவாய்ப் பாடுதல், தலையாட்டுதல், எழுதிவைத்துப்பாடுதல், பிழையாய்ப் பொருளறிகை, குறையான குரல் ஆகியவை ஆறும் பாடகாதமர்களின் குணங்களாகும்.

2-5-6 (ஈ) களவுப்பொருள் கிடைக்க வழி

கார்த்தவீர்யார்ஜுனோ நாம
ராஜா பாஹுஸஹஸ்ரவான் ।
தஸ்ய ஸ்மரண மாத்ரேண
ஹ்ருதம் நஷ்டம் ச லப்யதே[2] ॥

(பொ.) கார்த்தவீர்யார்ஜுனன் என்ற பெயர் கொண்டவன் ஆயிரங்கைகளையுடைய அரசனாவான். அவனை நினைத்தாலே போதும் களவாடப்பட்ட அல்லது இழந்தபொருட்கள் கிடைக்கும்.

---

1. Catalogue - I, P.No. 77/ T.M.S.S.M.L. Tanjore.
2. Catalogue - I, P.No. 165/ T.M.S.S.M.L. Tanjore.

2-5-6 (உ) நன்னெறி

அ. அன்னஹீனோ தஹேத் ராஷ்ட்ரம்
மந்த்ரஹீனோத ருத்விஜ: ।
கர்த்தாரம் தக்ஷிணா ஹீனோ
ஹந்தி யக்ஞோ ரிபுர் பவேத் ॥[1]

(பொ.) உண்ண உணவு இல்லையாகில் அது அரசினை எரித்துவிடும். மந்திரமில்லா வேள்வி வேள்வித்தலைவனை அழித்துவிடும். தக்ஷிணை கொடுக்கவில்லையாகில் கர்த்தாவுக்குக் கேடு. முறையற்ற வேள்வியே சிலருக்கு எதிரியாகிவிடும்.

ஆ. அஸத்யமபி சஸ்தம் ஸ்யாத் ஆபதீத்யனுசாஸனம் ॥[2]

(பொ.) 'ஆபத்தில் மட்டும் பொய்யும் சிறப்புடைத்தாய்' ஆகிறது என்று முன்னோர்கள் மொழிந்திருப்பதால் எப்போதும் நாம் பொய்யைத் தவிர்த்து மெய்யையே பேசவேண்டும் என்பது அறியப்படுகிறது.

2-5-6 (ஊ) கடிதம்

ஒரு நூலாசிரியர் தன்னுடைய செய்திகளை அரசவைக்கு கடிதமாக எழுதியமை குறிப்பிடத்தக்க ஒன்று. ஆத்மவித்யாவிலாஸம் என்ற நூலை இயற்றியவர் சதாசிவ பிரம்மேந்திராள் ஆவார். அவரது செய்திகளை பாக்களாக அனந்ததேவர் இயற்ற அரசவைப்புலவர் மல்லாரி பண்டிதர் முதலாம் சரபோஜிக்கு கடிதமாக எழுதியுள்ளார். இக்கடிதம் ஆத்மவித்யாவிலாஸம் நூலில் பதிப்பித்துள்ளமையால் ஆங்கே விடுபட்ட சுலோகங்களும் அதன் பொருளும் இங்கே சுருக்கித்தரப்படுகிறது.

1. Catalogue-V, P.No. 2265/D. 2658/Prayaccitta Kutuhalam T.M.S.S.M.L. Tanjore.
2. Catalogue I, P.No. 71, T.M.S.S.M.L. Tanjore.

70. நிர்வ்யாஜம் பவதா + சதமேததாம் ||[1]
கரதீக்ருத பூபால வரதீக்ருத வாஸவ ।
சரதீயதி தே கீர்த்தி சரபோஜிமகீபதே ||
மல்லாரி பண்டிதேந்திரஸ்ய
மாத்ராசாஸௌ நியோஜித: ।
அநந்ததேவ நாமாஸௌ
பத்யான் ஆரசயத் கவி: ||[2]

(பொ.) சதாசிவபிரம்மேந்திரர் சரபோஜி மகாராஜருக்கு புத்ரோத்பத்தி ஏர்படுவதற்காக அரச கட்டளையின் பேரில் கும்பகோணத்தில் ஓர் நாளும், மயிலாடுதுறையில் காவிரி நீராட்டம் செய்து 5 நாட்களும், தீபாம்பாபுரத்திலும் கங்குலும் பகலுமாய் இறைவனை இறைஞ்சி நின்றார். இதனால் இன்னும் வெகுவிரைவில் புத்ரோத்பத்தி ஏற்படும் என்றும் ஆசீர்வதித்து, முக்திக்ஷேத்திரமான திருக்கோடிக்காவில் வாஸம் செய்யத் தமது விழைவையும், மடம் ஒன்று அரசரின் உதவியால் கட்டவேண்டும் என்ற தமது கோரிக்கையினையும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2-5-6 (எ) ஸ்ரீவைணவதினசரி

பவபூதியின் மகாவீரசரிதத்திற்கு உரை வீரராகவசூரியால் இயற்றப்பட்டது. உரையினை ஏடுபடுத்தியவர் தன் விவரக் குறிப்பை அழகாக விவரிக்கின்றார். அக்குறிப்பில் உள்ள செய்திகள் வைணவதினசரியைப் போதிப்பதால் முயன்று இங்கே இணைக்கப்படுகிறது.

சுவடிதரும் குறிப்பு

23. சதுர்வேத பாரங்கதானாம், ஷட்சாஸ்த்ர தல ஸ்பர்சானாம், ஸ்ரீமத் பாஷ்கார சித்தாந்த நிரதானாம்

---

1. ஆத்மவித்யாவிலாஸம் நூலின் முன்னுரை, ச.பு. எண். த.ம.ச.ச. நூலகம், தஞ்சாவூர்.
2. Catalogue - XIII, P.No. 5813/D.4894/D.No. 7685, T.M.S.S.M.L. Tanjore.

(படம்.14) அதீத போதானுஷ்டான பிரசாரண நிபுணானாம், பிரதிதினம் ஸ்ரீமத் பாஷ்யகார பதபங்கஜ ஸேவா ரஸைகானந்த நிர்பராணாம், பிரதிதினம் சூர்யோதயாத் ப்ராகேவ ஸ்நானம் க்ருத்வா, ஊர்த்வபுண்ட்ர-துளஸீமாலா-நலினாக்ஷமாலா-பவித்ராதிகம் த்ருத்வா............ ஸந்தியாவந்தனாதி கர்மசு நிஷ்ட்டானாம், இதிகாச புராணபாராயண சுநிஷ்ட்டானாம், ஸ்ரீவைஷ்ணவானாம் ஆவாஸபூதே, ஸ்ரீமத் பூதபுரீ நிஷ்ட்ட ஸ்ரீமத் பாஷ்யகாராலய தக்ஷிணவீதிரியமிதி ப்ரசித்தமாபன்னே பூமண்டலாலங்காரபூதே லக்ஷ்மீநாராயணாக்யபுரே ஸதா வேத பாராயண ஜரீஜ்ரும்பமாண சப்தஜால சப்தாயமானே, தன்னிஷ்ட்ட ஸ்ரீவைஷ்ணவாசரித அக்னிஹோத்ர-வாஜபேய க்ரதுத்பாதித தூமப்ருந்த ப்ரச்சாதனேன அனதிதாபங்கார சூர்யகிரணே வாஸ்தவ்யஸ்ய ஸ்ரீசாமசாகா ப்ரவீணஸ்ய, விதுஷோ பாரத்துவாஜகுல பாராவார பூர்ணசந்த்ரஸ்ய, ஸ்ரீவேங்கடாசார்யஸ்ய புத்ரேண வேங்கடராகவேண கவிலோகரஞ்சனகாரிணீ 'பிரத்யோதனீ' ஸமாக்யா மஹாவீரசரிதவியாக்யா ஸப்தாங்கஸஹிதா ஸ்வ ஹஸ்தாப்யமேவ விலிக்ய ஸமாபிதா !*

(பொருள்) நால்வேத வாணர்களாலும், அறுவகைசாஸ்த்ர வல்லுநர்களாலும் ஸ்ரீமத் ராமானுஜரின் சித்தாந்தவாதிகளாலும், தர்மநெறிகளை தானும் கடைபிடித்து, மற்றவர்களுக்கும் எடுத்தியம்ப வல்லவர்களாலும் ஸ்ரீமத் ராமானுஜரின் திருவடித் தாமரைகளில் தினந்தோறும் பணிவிடைசெய்து, அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியில் திளைக்கின்றவர்களாலும், நாள்தோறும் கதிரவன் தோன்றுவதற்கு முன்பாகவே நீராடி, திருமண்காப்பு,

* *நன்றி: மகாவீரசரித உரை* by *வீரராகவசூரி, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலக அட்டவணை, சென்னை, தொகுதி* xxi, P.No. 8454.

துளசி மாலை தாமரைமணிமாலை, பவித்ரம் முதலியவற்றை அணிந்துகொண்டு, ஸந்தியாவந்தனம் முதலான செயல்களைப் புரிவோராலும், இராமாயண-பாகவத-புராண பாராயணம் செய்வோராலும் சூழப்பெற்று, ஸ்ரீவைஷ்ணவர்களால் வசிக்கப் படுவதும், ஸ்ரீபெரும்பூதூரிலுள்ள ஸ்ரீமத் ராமானுஜர் கோயிலின் தென்திருவீதி இதுவென்று கொண்டாடப் பெற்று, பூவுலகிற்கே அணியாய்த் திகழ்வதும், எப்போதும் மறையாளர்களின் ஒலியால் சூழ்ந்துகிடக்கும், அங்கு வாழ் அந்தணர்தம் ஆகுதியின் புகையால் அழற்கதிரை மறைக்கும் இடமான லக்ஷ்மீ நாராயணபுரத்தில் வசிப்பவரும், சாமவேத வல்லுநரும், அறிஞரும், பாரத்துவாஜ குலக்கடலில் முளைத்தெழுந்த முழுநிலவு போன்றவரும் ஆன ஸ்ரீவேங்கடாசார்யருக்கு புதல்வராய்த் தோன்றிய வேங்கடராகவரால் கவியுலகை மகிழ்ச்சி கொள்ளச்செய்வதான 'பிரத்யோதனீ' எனும் பெயர்கொண்ட ஏழு அங்கங்களுடன் கூடிய மஹாவீரசரித வியாக்யானம் தன் கையாலேயே (ஏட்டில்) எழுதிமுடிக்கப்பெற்றது.

3. சுவடிப்பெருக்கம்

சுவடிப் பெருக்கத்திற்கு சமணர்கள்தான் முன்னோடிகளாவர். கி.பி. 453ல் ஜைன முனிகளின் சமூகம் தங்கள் தர்மபிராசீன நூல்களை படிஎடுக்கத் தொடங்கிற்று. அவ்வாறு படிஎடுக்கும் முறையினை 'புஸ்தகாரோஹணம்' என்பதாக ஜைனாகமங்கள் அழைத்தன. சித்தராஜஜயசிம்மன் ஹேமசந்திரனுக்காக எட்டு இலக்கணக் கையெழுத்துப் பிரதிகளைக் காஷ்மீரிலுள்ள சரசுவதி பண்டாரத்திலிருந்து வரவழைத்துக் கொடுத்தான். அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு எழுத்தாளர் பலரால் பிரதிகள் பல தயார் செய்யப்பட்டன. அவ்வாறு தயாரித்த பிரதிகளை

நாட்டிலுள்ள ஒவ்வொரு நூலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதோடின்றி பர்சியா, சிலோன், நேபாள் போன்ற பகுதிகளுக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டன. இந்த நூல் பரப்புச்செயல் பத்தாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்ததாக 'ஜைன பிரபாவசரிதம்' தெரிவிக்கின்றது. தர்மநாத புராணத்தில் 'ஆஹார அபய பைஷஜ்ய சாஸ்திரதான தத்தாவதான என்று சொல்லப்பட்டது போல சமணர்களின் சிறப்பான தானங்களாக அன்னம், அபயம், பைஷஜ்யம், சாஸ்திரம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

3-1. அன்னதானம்

30. அன்னதானாத் பரம் நாஸ்தி
தானமன்யன் மஹீதலே ।
பிராணினாம் தேஹஸந்தாப
நாசனாத் பிராணதாரணாத்[1] ॥

(பொருள்) அன்னதானத்தைக் காட்டிலும் உயர்வான தானம் வேறு ஒன்றும் இப்பூவுலகில் இல்லை. ஏனெனில் அன்னம்தான் உயிரினங்களின் உடலிலே எழும் பசித்தீயை ஒழித்து உயிர்வாழ்தலைச் செய்கின்றது.

3-2. அபயதானம்

31. தானமிச்சதி சேத் தாதும்
தத்யாத் அபயபூர்வகம் ।
தானம் ஸர்வஜனானந்தம்
ஸம்ஸாரச்சேதன க்ஷமம் ॥
தேஹினாம் ம்ருதி பீருணாம்
பிராணான் யோ புவி ரக்ஷதி ।
ஸ நிர்பயோ பவேத் யஸ்மாத்
குகதிம் ச ந பச்யதி ॥[2]

---

1. நாககுமார காவியம்- தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு.
2. நாககுமார காவியம்- தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு.

(பொ.) தானம் வழங்க விரும்பினால் பயம் போக்குவதான அபயத்தை தானமாக அளிக்கலாம். அந்த தானம் அனைத்து மனிதர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரவல்லது. உலக வாழ்க்கையினையும் வெட்டி வீழ்த்தக்கூடியது. பூமியில் இறப்பைக் கருதி அஞ்சிவாழும் உயிரினங்களின் உயிரை யார் காப்பாற்றுகின்றாரோ அவர் பயமற்றவராய் இருக்கலாம். யாதொரு கெட்டநிலையையும் அவர் பார்க்கமாட்டார்.

3-3. பைஷஜ்யதானம்

32. ரோகேணாங்க விநாச: ஸ்யாத்
அங்கநாசே குதஸ்தப: ।
தபோபாவேऽபவர்கஸ்ய
ஸௌக்யம் தூரதரம் பவேத் ॥
தஸ்மாத் க்ரஸ்த பாத்ரேப்யோ
பைஷஜ்யம் தீயதே ஸதா ।
ஸ்வயம் பவதி நீரோகோ
ரூபவான் அன்யஜன்மனி ॥[1]

(பொ.) நோயால் உடல் அழிந்து போகும். உடல் அழிந்தால் தவம் புரிவது எப்படி இயலும் ? நோயுற்றவன் வாழ்க்கையில் நலம் என்பதே தொலைவிலுள்ள ஒரு பொருள் ஆகிவிடும். ஆகையால் நோயாளிகளுக்கு எப்போதும் மருந்து அளிப்பவர் தானும் நோயற்றவராகி அடுத்தபிறவியில் அழகராகவும் விளங்குவார்.

3-4. சாஸ்திரதானம்

33. ஸாதுப்யோ தீயதே சாஸ்திரம்
லேகயித்வா ஸ்வசக்தித: ।
வ்யாக்யாயதேऽதவா தேஷாம்
சாஸ்த்ரதானம் ததுச்யதே ॥

---

1. நாககுமார காவியம்- தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு.

பிபர்த்தி ஸகலம் சாஸ்திரம்
சாஸ்த்ரதானபலாத் ஸ்வயம் ।
கிருதவாஷ்ட்டகர்ம நிர்மூலம்
லபதே சாச்வதம் பதம்[1] ॥

(பொ.) நல்லவர்களுக்கு தன் கையால் சாஸ்திரம் எழுதிக்கொடுப்பதும் அல்லது விரித்துரைப்பதும் சாஸ்த்திரதானம் எனப்படுகிறது.

இவ்வாறு புரியும் சாஸ்த்திரதானப்பயனாலேயே ஒருவர் அனைத்து சாஸ்த்திரத்தையும் தரித்தவர் ஆகிறார். அஷ்டகர்மங்களையும் வேறறக்காய்ந்து நிலையான முக்தியை அடைகிறார்.

3-4-1. சாஸ்திரதானம்

34. ஸ்ரீஹேவிளம்பி ஸம்வத்ஸர பாத்ரபத சுக்லபக்ஷ 13ரந்து தோடஸ்வாமிகே சாஸ்திரதானவாகி பரெது கொட்டரு ।

(பொ.) ஸ்ரீஹேவிளம்பி ஆண்டின் புரட்டாசித்திங்கள் வளர்பிறை 13 ஆம் நாள் தோடஸ்வாமிக்கு சாஸ்திரதானமாக எழுதிக்கொடுத்தார். இச்செய்தினை 'கன்னட கிரந்த சம்பாதனா சாஸ்திரம்' தெரிவிக்கின்றது. பாஸ்கரவர்மன் ஹர்ஷவர்தனனுக்கு புஸ்தகங்களைக் காணிக்கையாக அளித்த செய்தியினை பாணகவி தெரிவிக்கின்றார்.

3-4-2. கைவல்யம் கிடைக்கவேண்டி சாஸ்திரதானம்

35. கலிகால + ஜினமுனி பதாம்போஜாத ப்ருங்கனுமப்ப பண்டாரி தேவருசெட்டி தனகே கேவலஞான பரிபிராப்தி நிமித்தவாகி, காரகலத சாந்திநாத ஸ்வாமிகள பஸ்திகே பரெஸி கொட்ட தர்மநாத புராணக்கே மங்களமஹா ।

(பொ.) கலிகாலம் + சமணமுனிவரின் திருவடி தாமரைகளை மொய்க்கும் வண்டாகிற பண்டாரி

---

1. நாககுமார காவியம்- தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு.

தேவர்செட்டி என்பவர் தனக்கு கேவலஞானம் கிடைக்க வேண்டியதின் பொருட்டு சாந்திநாதர் தேவாலயத்திற்கு எழுதிக்கொடுத்த தர்மநாத புராணத்திற்கு மங்களமுண்டாகட்டும்.

3-4-3. அன்பிற்காக சாஸ்திரதானம்

அன்பு மற்றும் நட்பினை வளர்த்துக்கொள்ள வேண்டி சிலர் சுவடிதானம் செய்வர்.

36. தோரோ ஜகன்னாதஸ்யேதம் புஸ்தகம், இதம் புஸ்தகம் ப்ரீதிஸ்நேஹாப்யாம் ஜம்புநாதாய தேன தத்தம்[1]

(பொ.) ராக்ஷஸபுவனாகரன் என்னும் கமலாகரனுடைய புதல்வன் ராமனால் தாரை வார்த்துக்கொடுக்க, பெறப்பட்டதான தோரோ ஜகன்னாதரின் இந்த 'ருக்வேத பதபாட' புஸ்தகம் அன்பு நட்புகளைக் கருத்தில்கொண்டு ஜம்புநாதருக்கு அளிக்கப்பட்டது.

4-1. சுவடி அமைப்பின் பயன்

சுவடிகளை மும்மூர்த்திகளின் உருவமென்றும், அதற்குச் சுற்றும் கயிற்றை வாசுகி எனும் பாம்பு உருவமென்றும், மேலும் இதனை மூலப்பிரைகிருதிக்கு ஒப்பாகவும் பேசியுள்ளார்.

4-2. சுவடிகளின் அளவு பற்றி

சுவடிகளின் அளவுகளை உத்தமம், மத்யமம், அதமம் என்றவாறே மூவகைப்படுத்தப்பட்டுள்ளன. 32 அங்குல நீளம் உள்ளவைகளை உத்தமவர்க்கத்திலும், 28 அங்குல நீளமுள்ளவற்றை மத்யமவர்க்கத்திலும், 8 அங்குல நீளமுள்ளவைகளை மூன்றாம் வர்கத்திலும் சேர்க்கலாம். இவ்விதம் அமைப்பதால் அவை அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுவிதமான பலன்களையும் கொடுக்கின்றன. பூர்ஜ பத்திரங்களில் 12

1. T.M.S.S.M.L. Tanjore. DC. Vol. I, P.No. 4787, Paper Manuscript.

அங்குல பிரமாணமிருப்பின் அது ஞானத்தைக் கொடுக்க வல்லது.

4-3. சுவடிகளிலுள்ள துளைகள் பற்றி

சுவடிகளில் செய்யப்படும் துளைகளை நடுவிலும், ஓரங்களிலும் மற்றும் ஓலை யொன்றுக்கு ஒரு துளையினையும் செய்தல்கூடாது. ஆதலால் சுவடிகளில் இரு துளைகள் செய்தல் வேண்டும். இவற்றுள் வலப்புறத்தொளையில் ஒரு மெல்லியதான குச்சியினை பொறுத்தி மற்றொரு துளையின் வழியாகக் கயிற்றினைப் பிணைக்கலாம். சுவடியில் இரு துளைகளைச் செய்வதனால் வெற்றி உண்டாகும் என்று நம்பப்படுகிறது. சுவடிகளில் இரட்டைத் தொளைகளைச் செய்து ஒன்றில் செப்புக்கம்பி அல்லது மூங்கிற்குச்சியைச் சொருகிக் கட்டுவார்கள். அதற்கு 'நாராசம்' என்று பெயர். சுவடியின் வலப்புறம் நாராசத்தைப் பொறுத்தி இடப்புறம் கயிறுபிணைத்துக் கட்ட உதவியாக ஒரு சிறுபனை ஓலைத்துண்டைப் பயன்படுத்துவார்கள். அதற்கு 'கிளிமூக்கு' என்பர்.

4-4. சுவடிகளின் காப்புப் பலகைகள் பற்றி

மும்மூர்த்தி ஸ்வரூபமான இச்சுவடிகளை தக்க பலகைகளை யிட்டுக் காப்பாற்றவேண்டும். அதற்கு தாமிரத்தாலே அல்லது பித்தளையாலோ கவசம் அணிவிக்கலாம். அது முடியாமற் போனால் வில்வம் மற்றும் தேக்கு மரத்தாலான பலகைகளைக் கொண்டு காப்புக்கவசம் செய்யலாம். அதிலும் புது மரப்பலகை களையும் இரும்புக்காப்புப் பலகைகளையும் பயன்படுத்தல் ஆகாது. ஆதலால் நன்கு பண்பட்ட மரங்களைக் கொண்டுகாப்புப் பலகைகளை அணிவிப்பது சாலச்சிறந்ததாகும். இப்படியாக நம் முன்னோர்கள் சுவடிகளைத் தேர்ந்தெடுப்பது முதல் சுவடிகளில் எழுதி அவைகளை காத்திடும்வரை

பெருமதிப்புடனும், மிகுந்த பக்தியுடனும் இருந்து வந்தனர் எனத் தெள்ளத்தெளிவாகிறது.[1] சுவடியின் பாதுகாப்பிற்காகப் பொருத்தப்படும் காப்புப் பலகைகளிலும் ஓவிய அறிஞர்கள் தங்கள் கலைவண்ணத்தைக் காண்பித்துள்ளனர்.[2]

5. சுவடிநூல் உருவாக்கமும் இலக்கிய வளர்ச்சியும்

தஞ்சாவூர் பலகலைகளுக்கு இருப்பிடமாயும் சுவடிநூல்களை உருவாக்கும் அறிவுசார்க் கருவூலமாகவும் திகழ்ந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இதற்கு சோழர் மற்றும் மராட்டியர் காலத்தைச் சார்ந்த குறிப்புகளும் கிடைக்கின்றன.

5-1-1. சோழர் காலக்குறிப்பு-இருக்குவேதபாஷ்யம்

தஞ்சையில் பராந்தகசோழன் கி.பி. 907-952 ஆட்சி புரிந்தான். அப்போது குத்தாலத்தை அடுத்த கோமல் கிராமவாசியான, வேங்கடார்யரின் புதல்வர் மாதவர் என்ற அந்தணர் 'இருக்குவேதபாஷ்யம்' எழுதினார். இருக்குவேத பாஷ்யம் மாதவரின் உரையுடன் 1700, 1701 என்ற D. எண்களில் சரசுவதி மகால் நூலகத்தில் இலங்குகின்றது. கோமலில் கோமதீசுவரர் கோயில் கலவெட்டு பராந்தகனுக்குரியது. 'ஜகதேகவீரன்' என்று பாராட்டி இருக்குவேதபாஷ்யத்தில் மாதவர் குறிப்பிடுகின்றார்.

5-1-2. ரூபாவதாரம்

ரூபாவதாரம் தர்மகீர்த்தியால் இயற்றப்பட்ட இலக்கணநூலாகும்.[3] யாப்பருங்கலக்காரிகையில் ஆசிரியர் "ரூபாவதாரத்தின் நீதகச் சுலோகமே போலவும்" என்று குறிப்பிட்டுள்ளார்.[4]

---

1. பருவ இதழ் எண். 40, T.M.S.S.M.L. Tanjore.
2. அருங்காட்சியகம், T.M.S.S.M.L. Tanjore.
3. T.M.S.S.M.L. Tanjore. B.No. 9987/D.No.5817
4. தஞ்சை மன்னரும் சரசுவதி மகால் நூலகமும்.

5-1-3. நாநார்த்தார்ணவ ஸம்க்ஷேபம்

37. ஶ்ரீசோளோத்துங்கசோளாக்ய சோளேஷ்வாஸீன் மஹீபதி: ।
யः கலிம் பாரதாத்வர்ஷாத் பஹி: சக்ரேऽதிதூரத: ॥
அமுனா ராஜராஜேன கலி:க்ருத்யுகீக்ருத: ।
மஹாக்ரஹாரே ராஜேந்த்ரசோள ஸமக்ஞோ மஹாத்மனாம் ॥

ஸர்வவித்யா ஸம்ருத்தானாம் ஶ்ரீமதாம் ரிஷிதேஜஸாம் ।
நிவாஸோ விப்ரவ ர்யாணாம் சோளேஷ்வாஸீத் ப்ரதிஷ்டித: ॥

ராக்ஞா ராஜேந்த்ரசோளேன ஸ்வநாம்னா ஸ்தாபித: புரா ।
மஹா மாஹேச்வராணாம் ய:தாருண்யேஷ்வேவ யஜ்வனாம் ॥

தத்ராக்ரஹாரே வாஸ்தவ்யோ வத்ஸகோத்ரஸமுத்பவ: ।
ஸாமவேதவிதாமக்ர்ய:கேசவஸ்வாமி நாமக: ॥

ஶ்ரீராஜராஜசோளஸ்ய ஸேவகோபூத் த்விஜாக்ரணீ: ।
தம் கதாசித் ஸமாமந்த்ர்ய ஸோபமானம் மஹீபதி: ॥

சிராத் சிகீர்ஷிதம் வஸ்து ஸ்ம்ருத்வாக்ஞாபயதீத்ருசம் ।
அயி வத்ஸ ஸுகாயாலம் கௌதூஹலமதீவ மே ॥

ஸலிங்கேஸ்பஷ்ட்ட தாதூனாம் நாம்னாம் நாநார்த்த வாசினாம் ।
ஜிக்ஞாஸிதஸ்ய சப்தஸ்ய ஸுகதர்சன ஸித்தயே ॥

இத்யுக்தோ ராஜராஜேன சிரஸாதாய சாஸனம்[1] ॥

மாமன்னர் இரண்டாம் ராஜராஜன் (1146-1163 A.D.) (படம். 15) கலியை பாரதத்திலிருந்தே வெளியில் துரத்தி க்ருதயுகமாகச்செய்து ஆண்டான். முன்னொரு காலத்தில் இராஜேந்திரசோழன் சோழதேசத்தில் தன் பெயரால் ஓர் அக்கிரஹாரத்தினை நிறுவி ஆங்கே சாஸ்த்ரவல்லுநர் களையும் சுரோத்ரியர்களையும் குடியமர்த்தினான். அவர்களுள் அந்த அக்கிரஹாரவாசியான கேசவஸ்வாமி இராஜராஜசோழனிடம் பணிசெய்தவரும், ஸ்ரீவத்ஸ குலத்தில் தோன்றியவரும், சாமவதவிற்பன்னர்களுள் சிறந்தவரும் ஆவார். ஒருசமயம் அவரை அழைத்து, உபசரித்து, 'ஆண்பால் பெண்பால் ஆகியவற்றை உணர்த்துவதும், வினைச்சொல், பெயர்ச்சொல் போன்றவற்றின் அடிப்படையில் பலபொருள்

1. **நிகண்டு ஸங்கிரஹம், முன்னுரை, ப. எண். 6,** T.M.S.S.M.L. Tanjore.

கொடுக்கக்கூடியதான சொற்களையும், கடினமான சொற்களின் பொருள் அறியவிழைவோருக்கு எளிதில் பயன்தரக்கூடிய நிகண்டு நூலொன்றை தயாரிக்க வேண்டும் என்பது என் நெடுநாளைய விருப்பம். அப்பணி எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும்' என்றவாறே அதை நினைத்து நிகண்டுநூல் இயற்றக் கட்டளை இட்டான். கேசவஸ்வாமியும் அரச கட்டளையை ஏற்று ஓரெழுத்து, ஈரெழுத்து என்றவாறு ஆறெழுத்துகள் வரையிலான சொற்களைத் திரட்டி கேசவஸ்வாமி, நிகண்டு நூலொன்றைத் தயாரிக்க அது 'கேசவநிகண்டு' என்ற அவரது பெயரிலேயே அமைந்து விளங்குகிறது.

5-2-1. மராட்டியர் காலக்குறிப்பு

38. ஸ்ரீமத் கவேரஜா தீரம் வித்வத்பிருந்தோபசோபிதம் ।
அத்யுத்தம சிவக்ஷேத்ரம் விஷ்ணவாதி ஸ்த்தானமஸ்தி ஹி ॥

தத்ர தஞ்சாபுரம் நாம ராஜாஸ்த்தானமனுத்தமம் !
ராஜான: பிரதிதாஸ்தத்ர போஸலீயான்வவாயஜா: ॥

தேஷு ராஜா மஹானாஸீத் சரபேந்திர: ஸுதார்மிக: ।
தஸ்ய புத்ரோ மஹானஸ்தி ஸ்ரீசிவாஜி மஹீபதி: ॥

நியோஜயாமாஸ புதான் லோகானாம் ஹிதகாம்யயா ।
ரச்யந்தாம் பகவோ கிரந்தா: நாநா சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹா: ॥

இதி ச்ருத்வா வசஸ்தஸ்ய குர்வந்தி விபுதா முதா ।
கேசித் வ்யாகரணே அகுர்வன் கேசித் ந்யாயே ததா பரே ॥

வைத்யசாஸ்த்ரே ததா சக்ரு: மந்த்ரசாஸ்த்ரேஷு கேசன ।
ஏவம் குர்வத்ஸு வித்வத்ஸு சாஹஜீந்த்ரபுரே வஸன் ॥[1]

என்கிறபடியே காவேரி நீரோட்டக் கரைப் பிரதேசமான தஞ்சாவூர் புலவர் குழாங்களுடன் கூடியதாய் சிறப்பான சிவவிஷ்ணு ஆலயங்களோடும்

---

1. பருவ இதழ் 51, T.M.S.S.M.L. Tanjore.

திகழ்கின்றது. அந்த தஞ்சாவூரினை போசலகுல வழித்தோன்றல்கள் அரசாட்சி செய்கின்றனர். போசல குல மன்னர்களுள் சரபோஜி மன்னர் மிகச் சிறந்தவர். அறநெறியாளர். அவரது புதல்வரே தஞ்சை சிவாஜி எனப்படுபவரான இரண்டாம்சிவாஜி (படம்.14) மன்னர். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் உலகநன்மைக்காக பற்பல அறிஞர்களை பல்வேறு வகை சாஸ்த்திரங்களை இயற்றக்கோரி குடியமர்த்தினர். மன்னர்களின் கோரிக்கைகளை ஏற்று சாஹஜீந்த்ர புரத்தில் வசித்தவர்களுள் சிலர் இலக்கணம், நியாயம், மந்திரசாஸ்திரம் போன்ற நூல்களை இயற்றல் ஆயினர். இச்செய்தி இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்திய சுவடி ஒன்றின் பதிவிடப்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்க ஒன்று. இவ்வாறு பண்டிதர்களுக்கு ஆச்ரயம் அளித்தல் முதலாம் சரபோஜி, துளஜா, இரண்டாம் சரபோஜி ஆகியோரது காலங்களிலும் அதிகமாக நிகழ்ந்துள்ளது.

5-2-2. சகஜிராஜபுரமும் 45 பண்டிதர்களும்

சாஹஜீந்த்ரபுரம் என்பதுவே சகஜிராஜபுரம் என்று சகஜிமன்னர் (படம்.15) பெயரில் பண்டிதர்களைக் குடியமர்த்த விடப்பட்ட ஊர் ஆகும். சகஜி மன்னரும் சந்திரசேகர விலாஸம் (நாடகம்), சப்தரத்ன ஸமன்வய கோசம், சப்தார்த்த ஸங்கிரஹம், சிருங்கார மஞ்சரீ ஆகிய நான்கு நூல்களை இயற்றியுள்ளார். துளஜா மன்னரின் சங்கீதசாராம்ருதம் நூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சகஜியின் அவைப்புலவர்களுள் சிறந்தோர் இருவர். ஒருவர் சொக்கநாதர். மற்றொருவர் ராமபத்திரதீக்ஷிதர். தீக்ஷிதரது சரித்ரத்தினை கன்னட மொழியிலமைந்து விளங்கும் சம்ஸ்கிருத கவிசரித்ர பகுதியின் வழி சற்று

பார்ப்போம். ***39.*** சகஜி: கிரிஸ்த்வப்தே ***(1693*** AD*)* ஸ்வநாம்னா அக்ரஹாரம் ஏகம் நிர்மாய வித்வத்ப்யோ தத்தவான். தத்ர தானசாஸன பத்ரே-வேப்பத்துராக்ய கிராமஸ்ய பஸ்சிமத:, திரிபுவனாக்ய கிராமஸ்ய உத்தரத:, மணஞ்சேரி கிராமஸ்ய பூர்வத:, அளக்குடி கிராமஸ்ய தக்ஷிணத: வர்த்தமானம் திருவிசநல்லூர் இத்யபர நாமதேயம் சகஜிராஜபுரம் இதி ஸ்பஷ்டமுக்தம் பவதி[1]. ***40*** சகஜி மகாராஜக்ருதே தானசாஸனபத்ரே நல்லாதீக்ஷித பௌத்ராய, யக்ஞராமதீக்ஷிதபுத்ராய, ஸ்ரீராமபத்ர மகீந்த்ராய கௌண்டின்ய கோத்ரோத்பவாய, ஆச்வலாயன ஸூத்ரிணே ருக்சாகாத்யாயினே சத்வாரி க்ஷேத்ராணி ப்ரதத்தானி இதி ஸ்புடம் மகாராஷ்ட்ரீ பாஷாயாம் லிகிதமஸ்தி[2] ।

(பொ.) தஞ்சையை ஆண்ட சகஜிமன்னர் ***1693*** *ஆம் ஆண்டில் தன்பெயரில் அக்ரஹாரமொன்றை ஏற்படுத்தி, அதற்கு சகஜிராஜபுரம் எனப்பெயரிட்டு அறிஞர்களுக்கு தானம் அளித்தான். அந்த அக்ரஹாரம் வேப்பத்துருக்கு மேற்கிலும் திருபுவனத்திற்கு வடக்கிலும், மணஞ்சேரிக்கு கிழக்கிலும், அளக்குடி கிராமத்திற்கு தெற்கிலும் இருக்கிற திருவிசநல்லூர் கிராமமே சகஜிராஜபுரம் என்பதாக அதற்கு நான்கெல்லைகள் சுட்டப்பட்டுள்ளன. சகஜிமன்னர் செய்த கொடைக்குறிப்பொன்றில் கௌண்டின்ய கோத்திரம் - ஆச்வலாயன சூத்ரம்- ருக்வேதம் என்ற மரபில் வந்தவரும் நல்லாதீக்ஷிதரின் பெயரரும், யக்ஞராம தீக்ஷிதரின் புதல்வரும் ஆன ஸ்ரீராமபத்ர*

---

1. சம்ஸ்கிருத கவி சரித்ரம், கன்னட எழுத்து, ப.எண். 416

2. சம்ஸ்கிருத கவி சரித்ரம், கன்னட எழுத்து, ப.எண். 417

தீக்ஷிதருக்கு நான்கு பாகங்கள் அளிக்கப்பட்டன என்பதாய் மராத்தி மொழியில் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கன்னடமொழி-சம்ஸ்கிருத கவி சரித்ரத்தின் வழி அறிபவரும் திருவிசநல்லூர் அறிஞர்களுள் 4 பங்குகளைப் பெற்றவர் ஸ்ரீராமபத்திர தீக்ஷிதர். கீழே காணப்படும் மோடி ஆவண வரிசை எண் 7லும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

திருவிசநல்லூர் அறிஞர்களின் மான்யமும் அவர்களது வம்சாவளியும் குறித்த கீழ்க்காணும் செய்திகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வந்த மோடி ஆவண மூட்டைகளிலிருந்து சேகரிக்கப்பெற்றன. தற்போது இந்த ஆவண மூட்டைகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பராமரிக்கப்படுகின்றன. அவற்றை வரிசையாய் அளிக்கும் வகையில் Dr. V. Raghavan அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பெற்ற சாகேந்திரவிலாஸ முன்னுரை தரும் திருவிசநல்லூர் அறிஞர்களின் வரிசைஎண்களும் ஆய்வாளர்களுக்கு உதவியாக இத்துடன் அளிக்கப் படுகின்றன.

Dr. V. Raghavan அவர்கள் குறிப்பிட்ட 45 பண்டிதர்களுள் 18 ஆம் எண்கொண்ட பண்டிதர் குறிப்பு ஒருவாறு கிடைக்க வழி காணப்படினும் வரிசைஎண்3ல் திப்பாதீக்ஷிதர் வரிசை எண் 43ல் லக்ஷ்மணசாஸ்திரி ஆகியோர் குறித்தவிவரம் தென்படவில்லை.

இனி சாகேந்திரவிலாஸம் தரும் திருவிசநல்லூர் அறிஞர்களின் வரிசை எண்களையும் 6வது எண்கொண்ட (மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வந்த) மோடி ஆவண மூட்டைதரும் செய்திகளையும் 1=வரிசைஎண், 2=மான்யம் & வம்சாவளி, 3=ஆவணஎண், 4=பக்கங்கள்,

5=சாகேந்திரவிலாஸம் தரும் திருவிசநல்லூர் அறிஞர்களின் வரிசைஎண்கள் என்ற பட்டியல் வழி பார்த்துமகிழ்வோம்.

வ.எ.	மான்யம்&வம்சாவளி	ஆ.எண்	மொா.பக்	சாஹே.அறி.வ.எ.
1	திருவிசநல்லூர் கிராமத்தின் நில உடைமையாளர்கள்	76	1-5	-
2.	பாஸ்கர தீக்ஷிதரின் வம்சாவளி	78	1-1	2
3	வாசுதேவதீக்ஷிதர் மகன் வேங்கடசாஸ்திரி வம்சாவளி (வாசுதேவதீக்ஷிதர்)	79	1-1	1
4	ஈச்வரசாஸ்திரி மான்யம்&வம்சாவளி	81	1-1	4
5	வேதநாத தீக்ஷிதரின் மான்யம்&வம்சாவளி (பிரதிவஸந்த வைத்யநாத தீக்ஷிதர்)	82	1-3	5
6	கச்சபேச்வரர் மான்யம்	83	1-2	6
7	இராமச்சந்திர தீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி (ராமபத்திர தீக்ஷிதர்)	84	1-2	7
8.	வீரராகவதீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி	85	1-1	8
9	அய்யாவாருதீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி	86	1-4	9
10	குப்பாதீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி	87	1-2	10
11	வேதநாராயணதீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி (வேதகவீச்வரர்)	88	1-2	11
12	மகாதேவதீக்ஷிதர் மான்யம் & வம்சாவளி (மகாதேவகவி)	89	1-2	12
13	கொண்டாவதானி மான்யம்	90	1-1	13
14	படலாச்சாரியர் மான்யம் & வம்சாவளி (திரிவேதீ பட்டாச்சார்யர்)	91	1-2	14
15	பெரியகவி மான்யம் (பெரியப்பகவி)	92	1-1	15
16	அய்யாதீக்ஷிதர் மான்யம் (அப்பாதீக்ஷிதர்)	93	1-1	17
17	நாராயணதீக்ஷிதர் மான்யம்	94	1-1	16
18	அனந்தராமன் மான்யம் (பஞ்சரத்னம் அனந்தநாராயணசாஸ்திரி)	95	1-1	20
19	வேங்கடேச்வரதீக்ஷிதர் மான்யம் (வேங்கடேச்வர வாஜபேய யாஜி)	96	1-2	21

20	நாராயணதீக்ஷிதர் மான்யம் (த்விவேதீ நாராயணாவதானி)	97	1-1	25	
21	மகாதேவ வாஜ பேயர் மான்யம் (மகாதேவ வாஜபேயயாஜி)	98	1-1	22	
22	ராஜவல்லபசாஸ்திரி மான்யம்	99	1-1	23	
23	வேங்கடசாஸ்திரி மான்யம் ஸ்ரீவேங்கடசாஸ்திரி)	100	1-1	24	
24	வேங்கடகிருஷ்ணதீக்ஷிதர் மான்யம்	101	1-3	26	
25	யசுர்வேத நாராயணசாஸ்திரி மான்யம் (நாராயணசாஸ்திரி)	102	1-1	19	
26	நாராயண சாஸ்திரிமான்யம்	103	1-1	27	
27	காட்டூர் நாராயணதீக்ஷிதர் மான்யம் (மாட்டூர்)	104	1-1	28	
28	வேங்கடகிருஷ்ணதீக்ஷிதர் மான்யம் (வேங்கடகிருஷ்ணாவதானி)	105	1-1	29	
29	குப்பாபண்டிதர் மான்யம்	106	1-1	30	
30	விஸ்வபதிசிரௌதியம் விவரம் (விஸ்வபதி சாஸ்திரி)	107	1-2	31	
31	கணபதிஸோமயாஜி மான்யம்	108	1-1	32	
32	மார்கஸகாயதீக்ஷிதர் மான்யம்	109	1-1	33	
33	ராமாசாஸ்திரி மான்யம் (மதுராராமசாஸ்திரி)	110	1-1	34	
34	நரசிங்கபட் மான்யம் (நரசிம்மசாஸ்திரி)	111	1-1	35	
35	வேங்கடதீக்ஷிதர் மான்யம் (வேங்கடாத்ரிதீக்ஷிதர்)	112	1-1	36	
36	கஜநாதசாஸ்திரி மான்யம் (ரங்கநாதசாஸ்திரி)	113	1-1	37	
37	ராமஜோஷி மான்யம்	114	1-1	38	
38	சாமவேதவேங்கடேசசாஸ்திரி மான்யம் (சாமவேதி வேங்கடேச்வரசாஸ்திரி)	115	1-1	39	
39	ஸ்ரீநிவாஸசாஸ்திரி மான்யம்	116	1-2	40	
40	சட்டநாதசாஸ்திரி மான்யம் (சட்டநாதகவி)	117	1-1	41	
41	வேங்கடேச்வரபிரஸித்த மான்யம் (வேங்கடேச்வர கவி)	118	1-2	42	

42	விஜயராகவதீக்ஷிதர்	119	1-3	44
43	ஆதிநாராயணசிரௌதியம் விவரம்	120	1-1	45
44	சேகரநாராயணன் மான்யம்	121	1-1	18?
45	வரதராஜ் ஸர்வமான்யம் (கல்விச் சாலைக்காக)	122	1-1	46
46	விஸ்வநாதஸ்வாமி கோயில் ஸர்வ மான்யம் (சிவவிஷ்ணு ஆகிய இரண்டு கோயில்களுக்காக)	123	1-1	47

மேலே குறிப்பிட்ட அறிஞர்களுள் ஒவ்வொரு சாஸ்த்திர வல்லுநர்களுக்கு ஒரு பங்கு வீதம் 2,3,4,5,7 எண் கொண்டவர்கள் 4 பங்குகளும், 11,12,15 எண் கொண்டவர்கள் 3 பங்குகளும், ஏனையோர் ஒவ்வொரு பங்குகளும் பெற்றவர் ஆவர். இதன் காரணமாக சம்ஸ்கிருத நூல்கள் மராட்டிய மன்னர்களின் ஆட்சி காலத்தில் பலவாறு தோன்றலாயின.

5-2-3. இலக்கியவளர்ச்சி

தஞ்சாவூர் சரித்திரத்தில் 1535-1855 AD *வரை இலக்கிய வளர்ச்சிக்காலம் என்று கூறலாம். தென்னிந்தியாவில் சம்ஸ்கிருதம் இடைவிடாது தழைத்தோங்க மராட்டிய மன்னரான ஏகோஜி மற்றும் அவனுடைய வம்சத்தவருக்கும் பெரும்பங்கு உண்டு. அது தஞ்சாவூர் நாயக்கமன்னர்களால் அதிகரிக்கக் காரணமானது. அந்த காலத்தில் தஞ்சாவூரை ஆண்ட நாயக்கர்கள் மற்றும் மராட்டியர்கள் பண்டிதராகவும் கவியாகவும் அநேகம் கவிகளுக்கு ஆதரவு கொடுத்தும் இருந்துவந்தனராகையால் தஞ்சாவூர் மற்றும் அதன் சுற்றியுள்ள பிரதேசங்களனைத்தும் அனேகம் கவிகளால் சூழ்ந்ததாய் இருந்ததுடன் இப்போதும் அவர்கள் எழுதி வைத்துள்ள விலைமதிப்பற்ற கிரந்தங்களால் புகழுடல் பெற்றவர்களாய் திகழ்கின்றனர். இதுதான் நமக்கு அவர்கள் விட்டுச்சென்ற பொக்கிஷம். அரசர்கள் முறைப்படி ஆண்டுவருகின்ற அதேசமயம் அவர்களின்*

வழி பிராம்மணமந்திரிகள் கவிகளாக இருந்து முறையே மந்திரிபதவியில் இருந்ததையும் காணமுடிகின்றது. அது திரயம்பகனிடமிருந்து துவங்குகிறது.

மந்திரிபரம்பரை

திரயம்பகன்

கங்காதரன்(1)

ந்ருஸிம்மன்(2) திரம்பகன்(3) பகவந்தன்

ஆனந்தன்(4)

ந்ருஸிம்மன்

தஞ்சை மராட்டியமன்னர்களும் மந்திரிகளும்

ஏகோஜி (1676-1684 AD) — கங்காதரன்(1), ந்ருஸிம்மன்(2)

சகஜி (1684-1711AD) | சரபோஜி (1711-1729 AD) | துக்கோஜி (1729-1735AD) — திரயம்கன்(3), ஆனந்தன் (4), கனச்யாமன்

போசலவம்சத்தை நிறுவிய சிவாஜியின் சரித்திரம் சரித்திரத்திற்கு மட்டுமே சேர்ந்தது. பரமானந்தன் என்பவன் 31 அத்தியாயங்களில் அவனுடைய வீரச்செயல்களை திறம்பட வருணித்து அதை சிவபாரதம் என்று அழைத்துள்ளான். அவன் அரசின்மேல் படையெடுத்துவந்து பர்ணாலபர்வத கோட்டையைப் பிடித்ததை ஜயராமன் பர்ணால கிரஹணாக்யாயிகை என்ற 5 உல்லாசமுள்ள நூலில் எழுதி வருணித்துள்ளான். சிவாஜியின் மகனான

ராஜாராமனின் சரிதம் கேசவபண்டிதனால் எழுதப் பெற்று அதை இராஜாராமசரிதம் என்றே அழைத்திருக்கிறான்.

1676-1684 AD வரை ஆண்ட ஏகோஜிமன்னரின் ஆஸ்த்தான மந்திரியாகிய பாலகிருஷ்ணனின் புதல்வன் ஜகந்நாதன் என்பவன் ரதிமன்மதம் என்ற நாடகத்தையும், ஆனந்தயஜ்வன் என்ற மற்றொரு மந்திரியின் மகன் ஸ்ரீசன் என்பவன் த்ரிபுரவிஜயசம்பூ என்ற நூலையும் எழுதினர்

சகஜி(படம்.16)யின் அவைப்புலவர் ராமபத்திர தீக்ஷதரின் சிறப்பான சிஷ்யர்கள் வேங்கடேச்வரர் மற்றும் பூமிநாதர், வேங்கடேச்வரர் பதஞ்சலிசரித வியாக்யானத்தையும், நல்லாதீக்ஷிதர் என்ற மற்றொரு பெயர்பெற்ற பூமிநாதர் தர்மவிஜயசம்பூ என்ற நூலையும் எழுதியுள்ளனர். சகஜிமன்னரின் வாழ்க்கை வரலாற்றினை தர்மவிஜயசம்பூநூல் வருணிக்கின்றது.

ராமபத்திரதீக்ஷிதரின் காலத்தில் வாழ்ந்த மகாகவிகளுள் வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீதரவேங்கடேசர், அப்பாதீக்ஷிதர் மற்றும் மகாதேவர் முதலானோர் சிறந்தவர்கள். வேங்கடகிருஷ்ணன் நடேசவிஜயம், உத்தரசம்பூ ராமாயணம் ஆகியவற்றையும், ஸ்ரீதர வேங்கடேசர் தயாசதகம், மாத்ருபூதசதகம், தாராவளிசதகம், ஆர்த்திஹரஸ்தோத்ரம், சாஹேந்திர விலாஸம் என்ற காவியங்களையும், அப்பாதீக்ஷிதர் அல்லது அப்பாசாஸ்திரி சகஜிமன்னரைக் குறித்தான ஷாகஜீயம் எனும் சிருங்காரமஞ்சரீ நாடகத்தையும் மதனபூஷணம் எனும் ஓரங்கமுள்ள பாண நாடகத்தையும், செய்யுள்நடையும் உரைநடையும் கலந்த கௌரீமாயூரசம்பூ எனும் காவியத்தினையும், மகாதேவர் 10 அங்கங்கள் உள்ள அத்புதவர்ணனம் எனும் நாடகத்தையும் இயற்றியுள்ளனர்.

சகஜி மற்றும் சரபோஜி அவைகளில் மேலும் பல கவிகளும் இருந்துள்ளனர். சகஜி மன்னரின் ஆஸ்தான பண்டிதர் சுமதீந்த்ரபிக்ஷு என்பவர். இவர் வேங்கடநாராயணன் மற்றும் சுரேந்திர தீர்த்தரின் சீடருமாவார். சுமதீந்திரஜெயகோஷணா என்னும் நூலை இவர் தனக்கு ஆதரவு கொடுத்தவரின் பெயரிலும் திரிவிக்கிரமோதாஹரணம் என்ற உரைநூலையும், சங்கீதசாஸ்திரத்தைச் சார்ந்த ஷாஹவிலாஸம் என்ற கிரந்தத்தையும், அபிநவகாதம்பரீ எனும் காவியத்தையும் இயற்றியுள்ளார். துண்டிராஜ வியாஸயஜ்வன் என்பவர் முத்ராராக்ஷஸத்திற்கு ஓர் உரையினை கி. பி. 1713ல் எழுதியுள்ளார். நாராயணனின் புதல்வன் ஜகந்நாதன் நான்கு ஸர்கங்களுள்ள ஞானவிலாஸம், கி.பி. 1722ல் சரபராஜவிலாஸம், அனங்கவிஜய்பாணம், சிருங்காரதரங்கிணீ போன்ற காவியங்களையும் படைத்துள்ளார். சரபோஜி மன்னரின் அமைச்சர்களில் இவரும் ஒருவர். சேஷாசலபதி என்பவன் சகஜி மற்றும் ஸ்ரீராமனுடைய சரிதத்தை அடிப்படையாய் வைத்து இரண்டுபொருளைத் தரக்கூடிய வகையில் கோசலபோசலீயம் என்ற காவியத்தை ஆறுசர்கங்களில் எழுதிமுடித்துள்ளான். வேங்கடேசன் என்பவன் போசலவம்சாவளி என்ற நூலில் சரபோஜியின் வம்சாவளியைக் கூறி மன்னர் சரபோஜியைக்குறித்தும் மிகுதியாக எழுதியிருக்கிறான்.

கி.பி. 1729-1735 வரை தஞ்சையை ஆண்ட துக்கோஜி மன்னர் காலத்திலும், கி.பி. 1739-1763 வரை ஆண்ட பிரதாபசிம்மன் காலத்திலும் அமைச்சராக இருந்த கோவிந்ததீக்ஷிதருடைய வம்சத்தவரான வாஞ்சேஸ்வரன் அல்லது குட்டிகவி மகிஷசதகத்தை இயற்றியுள்ளார்.

இரண்டாம் துளஜாமன்னர் (1763-1787AD) (படம்.19) தன் பெயரில் நூலியற்றக் கட்டளையிடுதல்.

41. பிரதாபஸிம்ம மகாராஜஸ்ய ஸம்பூர்ண தபோவிசேஷை: பரமேச்வரஸ்ய குமார இவ தூர்ணமவதீர்ண: துளஜா மகாராஜ: ராமசந்த்ரசேகர பௌண்டரீகயாஜினம் ஸமாஹூய ஸ்வவிலாஸேன பரமாத்புதவஸ்து நந்தகசரிதம் பரிகல்ப்ய நாடகீகர்த்தவ்யம் இதி ஸமாதிசத்[1].

கி.பி. 1798-1832 வரை ஆண்ட இரண்டாம் சரபோஜி (படம்.17)யின் ஆதரவில் விளங்கிய சதாஜி என்பவன் சிவாஜியின் குடும்ப வியவஹாரம் குறித்த ஸாஹித்யமஞ்சூஷா எனும் நூலையும் இயற்றியுள்ளார். கி.பி. 1832-1855 வரை ஆண்ட சிவாஜி மன்னர் (படம்.18) காலத்திலும் ஈச்வரனின் மகன் வீரராகவன் என்பவன் வல்லீபரிணயம் என்ற நாடகத்தையும், அப்பாதீக்ஷிதர் ஆசாரநவநீதத்தையும், கங்காதரன் (1675-1686 AD) போசலவம்சாவளி சரிதத்தையும்,

42. தஞ்சாநகராதீசஸ்ய ஏகோஜிமகாராஜஸ்ய மந்த்ரிணோ கங்காதராத்வரிண: புத்ரேண சாஹஜி சரபோஜி மஹீபாலயோரமாத்யேன திரயம்பகராய மகினா *என்கிறபடி.*

(பொ.) தஞ்சை நகரத்தை ஆண்டுவரும் ஏகோஜி மகாராஜாவின் மந்திரியும் கங்காதராத்வரியின் புதல்வரும், சகஜி, சரபோஜி ஆகிய இருமன்னர்களின் அமைச்சரும், திரம்பகராயமகி என்று அழைக்கப்பெறும் இரண்டாம் திரயம்பகன் (1687-1727 AD) ராமாயணத்தின் அடிப்படையில் தர்மாகூதத்தையும், பகவந்தன் ராகவப்யுதயத்தையும், ஸ்ரீமத்பாகவத்தின் அடிப்படையில் முகுந்தவிலாஸத்தையும் எழுதியுள்ளனர்.

---

1. Kalanandakam - P. No. 1&2, Intro. P.No. 11.

பகவந்தன் என்பவன் கங்காதராத்வரியின் மகன் த்ரயம்பகனின் தம்பி ஆவான். இவன் உத்தர ராமாயணக் கதையை அடிப்படையாகக்கொண்டு உத்தரசம்பூ நூலை எழுதியுள்ளான். அனந்தராயமகி என்பவர் பிரபோத சந்திரோதய நாடகம் போல் வித்யாபரிணயம் மற்றும் ஜீவானந்தம் என்ற இரு நாடகங்களை எழுதியிருக்கிறார். ஆனந்தராயனின் புதல்வர் ந்ருசிம்மன் த்ரிபுரவிஜயசம்பூ என்ற காவிய நூலை எழுதியுள்ளார்.

கி.பி. 1729-1735 வரை தஞ்சாவூரை ஆண்ட துக்கோஜியினிடம் மந்திரியாகியிருந்த கனச்யாமன் என்பவன் சம்ஸ்கிருதத்தில் 64 நூல்களையும், பிராகிருதத்தில் 20 நூல்களையும், வேற்று மொழியில் 25 நூல்களையும், எழுதியுள்ளான். இவனுக்கு சுந்தரி கமலா என்ற இரு மனைவியர். இவர் வித்தசாலபஞ்சிகைக்கு வேறொரு உரையை எழுதியுள்ளார். கனச்யாமனின் மகன் சந்திரசேகரன் டமரு மற்றும் பிரசண்ட ராஹூதயம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளான். இவன் தம்பி கோவர்தனன் என்பவன் கடகர்பரகாவியத்தின் உரை எழுதியுள்ளான்.

மேலே கூறப்பட்டசெய்திகளின் பரிசீலனையின் பேரில் ராஜா சரபோஜி புலமைமிகுந்தகுடும்பத்தில் பிறந்தவன்; அமோகமான சூழ்நிலையில் வளர்ந்தவன்; கனபண்டிதன் என்பதும் தெளிவாகிறது.

விஜயநகரப்பேரரசு பெயருக்கும் கூட சிறிதுமின்றி அழிந்த பிறகு சரசுவதி மகால் தஞ்சாவூர் அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. தஞ்சாவூரை ஆண்டவர்களுள் நாயக்கமன்னர்களும், இரண்டாம் சரபோஜி மன்னரும் குறிப்பிடத்தக்கவர்கள். இரண்டாம் சரபோஜி மன்னர் 1798-1832 வரை தஞ்சையை ஆண்டார். அந்த காலம் போர் இன்றிய சூழல் ஆனபடியால் அது இலக்கிய சேவைக்கு வித்திட்டது. சரபோஜியும் சுவார்ட்ஸ் பாதிரியாரின் தொடர்புடன் கல்வியையும்

அறிவாற்றலையும் பெற்றார். அதற்கு காரணம் அந்த பாதிரியார் சரபோஜி தந்தையின் நண்பராவார். சரபோஜி ஆங்கிலக் கல்வியினை அந்த பாதிரியாரிடமே மேற்கொண்டார்.

1820-1830ல் சம்ஸ்கிருதம் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கும்போது காசியாத்திரை மேற்கொண்டு பற்பல அரியநூல்களை நகல் செய்து வந்ததோடல்லாமல் மராத்தியில் எழுதப்பெற்ற கையெழுத்துப் பிரதிகள் பலவற்றை விலைகொடுத்தும் வாங்கிவந்தார். இரண்டாம் சரபோஜிமன்னரின் படைப்பாக நான்கு ஆச்வாஸங்களைக்கொண்ட குமாரசம்பவசம்பூ அறியப்படுகிறது. அதன் வழி சம்பூகாவியப்பயனையும், அவரது நடையினைக் குறித்தும் சிறிது பார்ப்போம்.

சம்பூகாவியப்பயன்

43. பத்யம் ஹ்ருத்யமபபீஹ கத்யரஹிதம்
தத்தே ந ஹ்ருத்யாஸ்பதம்-
கத்யம் பத்யவிவர்ஜிதம் ச பஜதே
நாஸ்வாத்யதாம் மானஸே ।
ஸாஹித்யம் ஹி தயோர்த்வயோரபி ஸுதா
மாத்வீகயோர் யோகவத்-
ஸந்தோஷம் ஹ்ருதயாம்புஜே விதனுதே
ஸாஹித்யவித்யாஜுஷாம் ॥

சம்பூகாவியநடை

44. அஸ்தி ஸ்வஸ்தருவ்ருந்த சுந்தரதர:
சாயோல்லஸத் கந்தரம்-
கிரீடத்கின்னரமானினீ ஜனமன:
[illegible]பாச்சந்த்ய ஸாக்ஷாத்க்ருதீ: ।
லோகாலோக குலாசலாதிகமஹா
சைலாக்ரணீர் தேவதா
ரூபோ நாம ஹிமாசலோ மஹிமபூ:
பூமோத்தரஸ்யாம் திசி: ॥ (1 : 7)

மேலும் இம்மன்னர், 45. இதி போஸலகுல திலகேன சரபந்ருபாலேன விரசிதா முத்ராராக்ஷஸ நாடகஸ்ய ச்சாயா ஸம்பூர்ணா* என்ற வாக்கியத்தின்படி முத்ராராக்ஷஸ நாடகத்திற்கு சாயை என்ற உரைநூலினை இற்றியுள்ளார். இது துண்டிராஜ வியாஸயஜ்வன் என்பவரது முத்ராராக்ஷஸ உரையினைக் காட்டிலும் வேறானது. தமது நீதிமன்றத்தில் கடைப்பிடிக்கத் தேவையாக பல தர்மசாஸ்த்திரங்களிலிருந்து தொகுக்கப்பெற்ற வியவஹாரபிரகாசம், சுபாஷித ஸங்கிரஹம் ஆகிய நூல்களும் இன்றும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தை அணிசெய்கின்றன. இது மட்டுமின்றி தன் தாய்மொழியான மராத்தியில் கங்காவிச்வேச்வர பரிணயம், மோகினீ மகேசபரிணயம், ராதாகிருஷ்ண விலாஸம் போன்ற நாடகங்களை இயற்றியுள்ளார். கஜசாஸ்திரம் சம்ஸ்க்ருதத்திலிருந்து மராத்திக்கு பெயர்த்த இவரது மொழிப்பெயர்ப்பு நூலாகும்.

5-2-4. சரபோஜி மன்னர் நிறுவிய அச்சகம்

தஞ்சை மராட்டியர் ஆட்சிக்காலத்தில் வேதசாஸ்த்ரங்களும் மொழியும் எழுத்தும் கற்பிக்கப் பெற்ற அந்த நவவித்யாகலாநிதி சாலையில் அச்சுப்பணியும் மேற்கொள்ளப்பட்டுவந்தது. அரசர்கள் இருப்பிடத்து மாடியில் 'ஸர்வவித்யா கலாநிதிசாலை' இருந்ததாகவும் பின்னர் அது நவவித்யா கலாநிதி சாலா என்று மாற்றப்பட்டதாகவும் இதில் அச்சகப்பிரிவு இருந்ததாகவும் அறியப்படுகிறது. இதுவே தென்னிந்தியாவில் முதன் முதலாய்த் துவக்கப்பட்ட வடமொழி அச்சுக்கூடமாகும். இதன் காலம் 1805 ஆகும். சாலையின் கண்காணிப்பாளர் குப்பாபட்டர். சிவாஜி மன்னர் காலத்தில் சரசுவதி பண்டாரமும்

* P.No. 3474, Catalogue - 8

நவவித்யா கலாநிதி சாலையும் தனித்தனியே இயங்கியதாய்த் தெரிகிறது.[1]

சரபோஜிமன்னர் நிறுவிய நவவித்யா கலாநிதிசாலை அச்சகத்தில் சம்ஸ்கிருத நூல்களை தேவநாகரியில் அச்சிட ஆரம்பித்தார். அவ்வாறு அச்சிட்ட சிசுபாலவதம், காரிகாவளி, முக்தாவளி போன்ற நூல்களுள் சில சரசுவதிமகால் அருங்காட்சியகத்தில் காணக்கிடைக்கின்றன. தற்போது அரசர்கல்லூரி என்றழைக்கப்படும் கல்யாணமகாலின் மாடியில் கி.பி. 1807ல் சரபோஜிமன்னர் அச்சகம் ஒன்றை ஏற்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனி நவவித்யா கலாநிதி சாலையில் அச்சிட்ட அச்சுநூல் தரும் சில குறிப்புகளை கவனிப்போம்.

அச்சுநூல் தரும் குறிப்பு

5-2-4 (அ) சிசுபாலவதம்-Sisupala vadham

46.சாலாயாம் தஞ்சாநகரே நவவித்யா கலாநிதெள ।
சாலீவாஹசகே லாஸகே ஸ்ரீமுகவத்ஸரே ॥
குப்பாபட்டேண ரிஷிணா வர்ணயந்த்ரே ஸுயோஜிதம் ।
த்ருடோsயமிலத்பத்யம் காவ்யம் மாகவணிக் க்ருதி:[2] ॥

5-2-4 (ஆ) காரிகாவளி - Karikavali

47. சகே சாலிவாஹே மிதே போகஸாயை:
சரத்யங்கிரஸ்யாப்யதோ வார்ணயந்த்ரே ।
அயம் காரிகாவள்யபிக்யோ விசுத்த:
க்ருதோ ஹுப்பளீவம்சய ஸக்கண்ணநாம்னா[3] ॥

---

1. தஞ்சை மன்னரும் சரசுவதிமகால் நூலகமும், ப. எண். 27
2. NNB.No. 14634/NNB Mss No. 2336,T.M.S.S.M.L. Tanjore.
3. NNB.No. 14423/D.No. 6008, NNB Mss No. 2127, T.M.S.S.M.L. Tanjore.

5-2-4 (இ) தர்க்கஸங்கிரஹம்- Tarka Sangraha

48.மிதே லாலஸாயை: பிரஜாபத்யபிக்யே-
ऽப்தகே சாலிவாஹே சகே வார்ணயந்த்ரே ।
அயம் ஸங்க்ரஹ: சுத்ததர்க்கஸ்ய க்லுப்த:-
ஸ்வயம் ஹூப்பளீவம்ச்ய ஸக்கண்ணநாம்னா[1] ॥

5-2-4 (ஈ) குமாரசம்பவசம்பூ:-Kumara Sambhava Campu :

49.சாலிவாஹ சகே மிதே குஸலவைர் வர்ஷே பவாக்யே சுபே
ஸ்ரீ தஞ்சாநகரோத்தமேऽத்ர சரபக்ஷ்மாபால ரத்னாக்ஞயா ।
ஸக்கண்ணாக்ய விபஸ்சிதாக்ருதலிபிர் வர்ணேஷு யந்த்ரே ம்ஹா
கௌமாரோத்பவ சம்புரேஷபுவனே ஜேஜீயதாம் ஸர்வதா[2] ॥

இங்கிலாந்திலும் இவரது புகழ் கொண்டாடப் பெற்றது. லண்டன் ராயல் ஏசியாட்டிக் சொசைட்டி உறுப்பினராகவும் இரண்டாம் சரபோஜிமன்னர் தேர்ந்தெடுக்கப்பெற்றார்[3].

5-2-5 (அ) நூற்பிரதிஷ்ட்டை

நூல்கள் எழுதிமுடித்த பின்னர் அவற்றை பிரதிஷ்ட்டை செய்யும் முறையினையும் ஆன்றோர்கள் கடைபிடித்து வந்தனர். தேவாலயம், குளம், மூர்த்தி போன்றவைகளைச் செய்து மந்திரத்தால் பிரதிஷ்டிப்பது (நாட்டுவது= உயிரூட்டப்படுவது) போல நூல்களுக்கும் அச்செயல் பேசப்படுகிறது. அதனை 'புஸ்தக பிரதிஷ்டை' என்பர்.

---

1. NNB.No. 14313/D. No. 6402, NNB Mss No. 2016, T.M.S.S.M.L. Tanjore.
2. NNB.No. 14297/D. No. 4030(b), NNB Mss No. 2000, T.M.S.S.M.L. Tanjore.
3. Serfoji Maharaja, M. Seeralan, Jl. 30, P.No. iv, T.M.S.S.M.L. Tanjore.

50. புஸ்தகானாம் பிரதிஷ்டாம் ச வக்ஷ்யே லிகனதத்விதிம் ।
லேகனம் ச லிகிதம் புஸ்தம் குரு வித்யாம் ஹரிம் யஜேத் ॥

யஜமானோ குரும் வித்யாம் ஹரிம் லிபிக்ருதம் நரம் ।
பிராங்முக: பத்மினீம் த்யாயேத் லிகித்வா ச்லோகபஞ்சகம் ॥

ரௌப்யஸ்த்த மஷ்யா லேக்யா ச லேகின்யா நாகராக்ஷரம் ।
பிராம்மணான் போஜயேத் பக்த்யா சக்த்யா தத்யாச்ச தக்ஷிணான் ॥

குரும் வித்யாம் ஹரிம் பிரார்ச்ய புராணாதி லிகேன் நர: ।
தர்ப்பணே புஸ்தகம் த்ருஷ்ட்வா ஷேசயேத் பூர்வவத் கடை: ॥

நேத்ரோன்மீலனம் க்ருத்வா சய்யாயாம் து ந்யஸேன் நர: ।
ந்யஸேத்து பௌருஷம் சூக்தம் வேதாத்யம் தத்ர புஸ்தகே ॥

க்ருத்வா ஸஜீவகரணம் பிரார்ச்ய ஹுத்வா சரும் தத: ।
கேஹே தேவாலயாதௌ து புஸ்தகம் ஸ்த்தாப்ய பூஜயேத் ॥

வஸ்த்ராதி வேஷ்ட்டிதம் பாடாத் ஆதாவந்தே ஸமர்ச்சயேத் ।
ஜகச்சாந்திர் சாவதார்ய புஸ்தகம் வாசயேன் நர: ॥

த்யாயமேகம் கும்பாத்பி: யஜமானாதி ஷேசயேத் ।
த்விஜாய புஸ்தகம் தத்வா பலஸ்யாந்தோ ந வித்யதே ॥

த்ரீண்யாஹு ரதி தானானி காவ: ப்ருத்வீ ஸரஸ்வதீ ।
நரகாதுத்ரந்த்யேவ ஜயா வாபன தோஹனாத்* ॥

என்கிறபடி புஸ்தகபிரதிஷ்ட்டா விதிகளைக்கூற உள்ளேன். ஸ்வஸ்திக மண்டலத்தில் இரும்பு போன்றதால் செய்த ஆஸனத்தில் வைத்து புத்தகத்தை பூசிக்க வேண்டும். குருவையும், ஹரியும், குறித்து வேள்விபுரியவேண்டும். யஜமானன், குருவையும், கல்வியையும் ஏடெழுதிய மனிதரை ஹரியாகவும் நினைத்து வேள்வியினை மேற்கொள்ளவேண்டும்.

** அக்னிபுராணம் - அத்தியாயம் - 36*

ஏடெழுதுபவர்கள் கிழக்குமுகமாக இருந்துகொண்டு இலக்குமியை தியானித்து 5 சுலோகங்களை வெள்ளி அல்லது தங்கநிற மையைக் கொண்டு எழுதவேண்டும். பிறகு பிராமணர்களுக்கு உணவும் தக்ஷிணையும் அளிக்கவேண்டும். இப்படி குருவையும், கல்வியையும், ஹரியையும் வணங்கி மனிதன் புராணம் முதலிய செய்திகளை ஏட்டில் எழுதவேண்டும்.

5-2-5 (ஆ)புரோக்ஷணம்

முன்போலவே மண்டலாதிகளைச் செய்து ஈசான்யத்தில் பத்ரபீடத்தில் கண்ணாடிப்பேழையினுள் புத்தகத்தை வைத்து கண்ணாடி வழியாகப்பார்த்து கும்பநீரால் ப்ரோக்ஷணம் செய்யவேண்டும். பிறகு நேத்ரோன்மீலனம் (நேத்ரோன்மேஷணம் (அ) கண்திறத்தல் சடங்கு) செய்து சயனத்தில் வைத்திடல் வேண்டும். அப்படி வைத்துவிட்டு புருஷசூக்தாதி மந்திரங்களைக்கூறி அதற்கு உயிர்ப்பினை ஊட்டி, பூசித்து, வேள்வியையும் இயற்றி வீட்டிலோ அல்லது தேவாலயத்திலே அதைவைத்துப் பூசனைபுரிய வேண்டும். அதனை துணியினால் சுற்றி முதலிலும் முடிவிலும் பூசிக்க வேண்டும். பிறகு அந்த புத்தகத்தை எடுத்து உலகநன்மையைக் கருத்தில்கொண்டு ஒரு அத்தியாயத்தை படிக்கவேண்டும். கும்பநீரால் அதனை ப்ரோக்ஷணம் செய்து வேதியர்களுக்குத் தானம் வழங்குதல் வேண்டும். அவ்விதம் செய்யின் நிரம்பப் பயன் கிட்டுகிறது.

5-2-5 (இ) தானங்கள்

தானங்கள் பல இருப்பினும் அவற்றுள் சிறந்தது பசு, பூமி, கல்விகளாகும். கல்வியை ஜபித்தலாலும் (அத்யயனம் செய்வதாலும்), பூமியில் விதையினை

விதைப்பதாலும், பசுக்களைக் காப்பதாலும் நரகிலிருந்து விடுதலை நிச்சயம். ஒரு ஓலைச்சுவடியை எழுதி மைதடவி பிறருக்கு கல்வித் தானமாக அளிப்பவர் அதிலுள்ள ஏடுகள் அல்லது எழுத்தெண்ணிக்கை ..ரின் கணக்கில் ஆயிரமாண்டுகள் விஷ்ணுலோகத்தில் விளங்குவார். பாஞ்சராத்ரம், புராணம், பாரதம் ஆகியவற்றை தானம்புரிபவர் 21 தலைமுறைகள் தன் பித்ருக்களை உயர்த்தி பரம்பொருளோடு கலப்பார் என அக்னிபுராணம் கூறுகிறது.

6-1. சுவடிப்பாதுகாப்பு

ஓலைச்சுவடி நூலகத்திற்கு வநதவுடன சுத்தம் செய்து இரசாயனிகக் காப்பறையில் வைத்துப் பிறகு எண்களிட்டு மரபீரோக்களில் வரிசையாய் அடுக்கி வைக்கவேண்டும். ஓலைச்சுவடிகளுக்கு இரு பக்கங்களிலும் மரத்திலான பட்டிகளைப் போட்டு அவற்றிலுள்ள துளையின் வழியே கயிற்றைப் பொருத்தி கட்டிவைக்க வேண்டும். ஒவ்வொரு சுவடிக்கட்டுகளின் நடுவே இடைவெளியும், சுவடிகள் காப்புப்பலகைகள் பீரோக்களில் கீழும் மேலும் வருமாறு வைத்திடல் மிகமிக அவசியமாகும். இல்லையெனில் ஓலைகளின் ஓரப்பகுதி ஒடிய நேரிடும். சுவடிகளுக்கு மிகுதியான வெப்பமும் குளிர்ச்சியும் இருக்கக்கூடாது. அதிக உஷ்ணம் தன் சக்தியை இழப்பதற்கும் அதிக குளிர்ச்சி பூஞ்சைக்காளான் வருவதற்கும் காரணமாகின்றது.

சரசுவதி மகாலிலுள்ள சுவடிகளைப் பாதுகாக்கும் வழியாக ஈரப்பதத்தைப் போக்கடிக்க சுவடிகளைச் சூடேற்றும் முறை கையாளப்பட்டுள்ளது. இதற்கு 17-2-1875, 24-2-1877 ஆகிய ஆண்டுகளில் 'குப்பாபட்லு' என்பவர் வேண்டுகோள் விண்ணப்பித்திருக்கின்றார். அப்பணிக்காக 3½ ரூபாய் சம்பளத்தில் ஒருவர்

நியமிக்கப்பட்டதும் ஆவணத்தில் குறித்து வைக்கப்பட்டுள்ளது*.

சில இடங்களில் சுவடிக்கட்டுக்கு தகுந்த மரப்பெட்டிகளை அமைத்து அதிலே வைத்து காப்பாற்றுகின்றனர்.

ஓலைச்சுவடிகள் நன்கு பதப்படுத்தி எழுதப் பட்டிருப்பின் அவற்றை உரியமுறையில் காப்பாற்றி வைத்தால் சுமார் 2000 வருடங்கள் நிற்கும். காகிதச் சுவடிகள் நல்ல காகிதத்தில் நல்ல மையினைக்கொண்டு எழுதி நன்றாக இருப்பின் அவற்றை காப்பாற்றி வைத்தால் சுமார் 600 ஆண்டுகள் நிற்கும்.

நமது பாரம்பரியக் கலைகளெல்லாம் பாதுகாத்து வைக்கப் பயன்படும் ஒருமுறை என்றால் பதிப்பு. பதிப்பிட்ட நூலையும் பாதுகாப்பதிலும் நாம் மிகுந்த அக்கரைகாட்டவேண்டும். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நீலகண்ட தீக்ஷிதர் தமது நீலகண்டவிஜயசம்பூ நூலில் 51. "கதி கவய: ?, கதி க்ருதய:?, கதி லுப்தா: ?, கதி சரந்தி ?, கதி சிதிலா: ? என்று தொடக்கத்திலேயே தெரிவிப்பதால் பாதுகாப்பு விழிப்புணர்வு அக்காலத்திலிருந்தே உணர்த்துவது அறியப்படுகிறது.

6-1-1 ஜீர்ணோத்தாரணம்

ஜீர்ணோத்தாரணம் என்பது பழுதுநீக்கி மறுபடி நாட்டுதலைக் குறிக்கும். இதனால் ஏற்படும் பயன்பற்றியும் சிறிது பார்ப்போம்.

---

* தஞ்சை மராட்டியர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், ப.எண். 257.

52. ஜீர்ணம் ஜினக்ருஹம் பிம்பம் புஸ்தகம் சிராத்தமேவ வா ।
உத்தார்ய ஸ்த்தாபநம் பூர்வபுண்யத: அதிகமுச்யதே[1] ॥

(பொ.) பழுதடைந்த ஜினாதி ஆலயங்கள், மூர்த்தி, புத்தகம், சிராத்தம் (பித்ருதிதி) போன்றவற்றை புதுக்கி மறுபடியும் நிலைநாட்டுதல் முன்னர் அடைந்த புண்யத்தைக் காட்டிலும் மிகுதியான பயனைத் தரவல்லது.

6-1-2. புத்தக அழிவிற்கு காரணங்கள்

53. உதகானல சோரேப்ய: மூஷிகேப்ய: ததைவ ச ।
துக்கேன லிகிதம் ராஜன் யத்னேன பரிபாலயேத்[2] ॥

(பொ.)புத்தகங்களுக்கு நீர், தீ, கள்வன், எலி ஆகிய நால்வழிகளால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதோடு துன்பத்தைப் பொருட்படுத்தாது எழுதப்பட்ட இதனை முயற்சி செய்து காப்பாற்றி வாருங்கள் என்கிற சுவடி எழுத்தாளர்களின் குறிப்பால் அழிவிற்கு உரிய காரணிகளிலிருந்து புத்தகங்களைக் காப்பாற்ற விழிப்புணர்வு தூண்டப்படுகிறது.

6-1-3. திருடுதல்

புத்தகங்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தும் நால்வகைக் காரணிகளுள் களவும் ஒன்று. புத்தகக்களவும், களவாடிய புத்தகம் மறுபடி மற்றொருவருக்கு கைமாறுதலையும் நைஷதம் எனும் காகிதச்சுவடி தரும் இறுதிக்குறிப்பால் இப்போது அறிவோம்.

---

1. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், பருவஇதழ்.51.

2. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், பருவஇதழ்.51.

காகிதச் சுவடிதரும் குறிப்பு

54. இதம் புஸ்தகம் சிவபட்லாண்டகேன முஷிதம், அத ஏவ விக்ரீதம் ச ।

(பொ.) இந்த புத்தகம் சிவபட்லாண்டகை என்பாரால் திருடப்பெற்றது. புத்தகத்தின் உரிமையாளர் இதனைக் கண்டுகொள்வார் என்று அஞ்சிய சிவபட்லாண்டகையால் மற்றொருவருக்கு அது விற்கப்பட்டுள்ளது. This was stolen by Siva bhatlandage and when the owner found it; it was sold to the person who stole it.[1]

6-1-4. தீக்கிரை:

புத்தகங்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தும் நால்வகைக் காரணிகளுள் தீ ஒன்றாகக் கருதப் பட்டுள்ளது. தீக்கிரையாக்கின 'மகாவீரசரிதம்' எனும் காகிதச்சுவடி கூறும் இறுதிக்குறிப்பினைச் சிறிது பார்ப்போம்.

மகாவீரசரிதம் சுவடிக்குறிப்பு

Colophon: 55. இதி வச்யவாசா பவபூதினா விரசிதம் மகாவீரசரிதம் நாம நாடகம் ஏதாவதேவ அஸ்மின் தேசே த்ருச்யதே.சேஷம் து ராஜசேகரேண தக்தமிதி பிரஸித்தி: । "தௌராத்ம்யாத்" இத்யேதஸ்ய பத்யஸ்ய சதுர்த்தசரண: மகாதேவ கவினைவம் பூரித: "ஹந்த! பிரத்யுத தாருணம் வ்யவஸிதம் திக்! ஸங்க்யமேவம் விதம் । இதம் புஸ்தகம் கனச்யாமஸ்ய । முத்துராமகவினா து ஏவம் பூரித: "ஹந்த! பிரத்யுத துஷ்க்ருத: ச ஸுமஹத் கர்த்தவ்யமுத்வீக்ஷிதம்" ॥ ஸமாப்தம் இதம் நாடகம் மகாவீரசரிதம் நாம ராஜசேகரதக்த சேஷம்[2] ।

---

1. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், பருவஇதழ்.51.

2. 5th Act, Verce 46, DC. Vol. V, 3454, III, P.No. 3455 & 3457, Mahavira caritam by Bhavabhuti, Paper Manuscript.

(பொ.) அனைவரையும் கவர்ந்திழுக்கவல்ல நாவன்மை பெற்ற பவபூதிகவியால் இயற்றப்பட்ட மகாவீரசரிதம் எனும் இராமாயணத்தைச் சார்ந்த நாடகநூல் தேசத்தில் கிடைப்பது இவ்வளவே. மீதி ராஜசேகரனால் எரியூட்டப்பெற்றது உலகமறிந்த செய்தி. ராஜசேகரனால் தீக்கிரையாக்கப்பட்டு எஞ்சிய இந்த மகாவீரசரிதம் ' நாடகம் முடிந்தது' என்று கூறும் இறுதிச் சொற்றொடரும் மேற்படி செய்கையை அடியொற்றி நிற்கிறது. இந்த புஸ்தகம் கனச்யாமனுடயது. கனச்யாமன் என்னும் இவர் கி.பி. 1728-1735 வரை தஞ்சாவூரை ஆண்ட துக்கோஜியின் மந்திரி ஆவார்.

தற்போது ஏழு அங்கங்களுள்ள 'மகாவீரசரிதம்' காணக்கிடைப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. ஐந்தாம் அங்கத்தில் 46ஆம் சுலோகம் வெகுகாலமாகக் கிடைக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, மகாவீரசரிதச்சுவடி ஐந்தாம் அங்கம்-46 ஆம் சுலோகத்திற்கு மேல் குறையாகவும் நின்று போயிற்று. அது வீரராகவர் இயற்றிய மகாவீரசரித உரையின் வழி அறிமுடிகிறது. அவ்வுரையில் ஐந்தாம் அங்கத்திற்கு மேல் ஏழு அங்கம் வரை சுப்பிரமண்யகவி இயற்றிய நூலிற்கு உரைசெய்வதாய்க் குறிப்பிட்டுள்ளார். இதனால் எரியூட்டப்பெற்று, ஏழாம் அங்கம் ஈறாக உள்ளபகுதி சுப்பிரமண்யகவியால் எழுதி இணைக்கப் பட்டதாகிறது.

6-2. புத்தகப்பாதுகாப்பு

இருக்குவேத ஸம்ஹிதை மற்றும் 'மகாபாரத உரை' ஆகிய சுவடிகளின் இறுதியில் புத்தகத்தினை எவ்வாறெல்லாம் காப்பாற்றவேண்டும் என்பது

குறிக்கப்பெற்றுள்ளது. அந்த பாதுகாப்பு சுலோகத்தை தற்போது கண்டு மகிழ்வோம்.

6-2-1. பாதுகாப்பு விழிப்புணர்வு சுலோகம்

56. ஸம்போஷ்யம் ஸதபத்யவத் பரகராத் ரக்ஷ்யம் ச ஸு
க்ஷேத்ரவத்
ஸம்சோத்யம் வ்ரணினோங்கவத் ப்ரதிதினம் வீக்ஷ்யம் ச
ஸன்மித்ரவத் ।
பத்யம் பத்யவத் அச்லதம் நஹி ந விஸ்மார்யம் ஹரேர்
நாமவத்
நைவம் ஸீததி புஸ்தகம் கில கதா சைதத் குரூணாம் வச:[1] ॥

(பொ.) புத்தகத்தை குழந்தையைப்போல் நன்கு வளர்த்து வரவேண்டும். பிறர்கையில் அகப்படாநிலம் போலே நன்றாய் காக்கவேண்டும். நோயாளியைக் கவனிப்பது போல் அடிக்கடி கண்காணித்து வரவேணும். நற்றோழர்களை நாளும் பார்ப்பதுபோல் பார்க்க வேண்டும். பழங்காலத்தில் சுவடியே புத்தக ஸ்தானத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. சுவடியினைக் கயிற்றினால் தொய்வில்லாமல் இறுகப் பற்றி கட்டிவைத்திடல் வேண்டும். இதனால் ஏடுகளையும், பழுதுற்றவையும் கட்டிலிருந்து நழுவாமல் காக்கலாம். பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டே சுவடியினையும், புத்தகத்தினையும் முன்னோர்கள் துணியில் சுற்றி வைத்திருந்தனர். மேலும் ஹரியின் நாமத்தை என்றும் மறவாதிருப்பதுபோல் இதன்மீதும் நாம் மிகுந்த அக்கறைகொள்ளவேண்டும். இவ்வாறு செய்தோமானால் புத்தகம் (சுவடி) ஒருபோதும் அழியாது என்பது எங்கள் குருக்களின் மொழியாகும். இருக்குவேத சம்ஹிதைச் சுவடிநூல் 1787ஆம் ஆண்டு

1. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், பருவஇதழ்.51.

எழுதப்பெற்றதாய் தஞ்சை சரசுவதி மகால்நூலகம் சம்ஸ்க்ருதத்துறையில் தியாகராஜஸ்வாமி கலெக்ஷனில் உள்ளது[1]. மேற்படி சுவடியை எழுதியவரே இறுதியில் ஸம்போஷ்யம் எனத்தொடங்கும் பாதுகாப்பு விழிப்புணர்வுச் சுலோகத்தைக் கொடுத்துள்ளார்.

6-2-2. பாதுகாப்பு விழிப்புணர்வு சுலோகம்

மேற்கூறிய கருத்தையே அடியொற்றி மற்றொரு சுவடி எழுத்தாளரும் கீழ்க்கண்டவாறு தன் உள்ளக் கருத்தை தெரிவிக்கின்றார்.

57. பக்னபிருஷ்ட்ட-கடி-கிரீவ-தீக்ஷ்ணநேத்ர-மதோமுகம் ।
கஷ்டேண லிகிதம் சாஸ்த்ரம் புத்ரவத் பரிபாலயேத்[2] ॥

(பொ.) அமரமுடியாமல் அமர்தல், இடுப்பொடிதல், கழுத்துவலி, கூரியபார்வையால் கண்நோவு அல்லது மேற்படி அனுபவத்தாலும் ஏற்பட்ட வெம்மையான பார்வை, தொங்கிய தலை போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களையெல்லாம் பொருட்படுத்தாது இச்சுவடி எழுதப்பட்டது. இதனை குழந்தையைப்போல் நன்கு பரிபாலனம் செய்ய வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள சுவடி எழுத்தாளர்களின் நன்மொழியினை வாழ்நாளில் நாம் அனைவரும் கட்டாயம் கடைபிடிக்கவேண்டும்.

7. சுவடி எழுத்துக்கள் சில

ஆய்வாளன் மிகவும் தெரிந்தமொழி ஒன்றில் மற்றவர்களும் அறியும்வண்ணம் அல்லது அறிந்து

1. T.S.1/D.No.33).

2. Catalogue No. XV,P.No. 6539/D.No.3874

கொள்ளமுடியுமாறு பொருள் உடைத்தாய் இயற்றியிருக்கின்ற எந்த எழுத்துவகையானாலும் அதை 'கிரந்தம்' என்றழைக்கலாம். கிரந்தம் என்பது Text எனும் ஆங்கிலச் சொல்லிற்கு சமமானது. போஸ்ட்கேட் என்ற அறிஞர் இதனை கீழ்க்கண்டவாறு 'text' is to be understand a document written in a language known, more or less, to the inquirer and assumed to have a meaning which has been or can be ascertained என ஆங்கிலத்தில் கூறியுள்ளார். கிரந்தம் என்ற சொல் சதபத பிராம்மணத்திலும் பாணினீய சூத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது[1]. ஆதலால் இந்த அத்யயனத்திற்கு எழுத்துக்கலையின் அறிவு அவசியம். சாகித்திய பிரமாணங்கள் அவற்றிலும் க்ரீக்கு மூலமாக கிடைத்த சாட்சியங்கள் குறைச்சல் என்றால் 5ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே எழுத்துக்லை நம்மிடத்தில் வழக்கத்தில் இருந்தது எனத்தோன்றுகிறது. இவ்வாறு கிடைத்த எழுத்துமூலங்கள் குடைந்தெழுதிய தாமிர சாஸனங்களும் கிடைத்துள்ளன. கண்ணாடிபோல மழமழப்பாய் செய்த மண்பலகைகளின் மேல் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. சிந்துலிபிகாரர் உபயோகித்த ஜேடிமண் (படம்.20) (பழங்காலத்தில் தன்னுடைய எண்ணத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்த ஒலியையும் செய்கையையும் பயன்படுத்தினர். பிறகு சித்திரங்களைப் பயன்படுத்திய காரணத்தால் சித்திரமாதிரியான) எழுத்துக்களுக்கு 'சித்திரலிபி' என்ற பெயர் வந்தது. செம்மண்ணிலான வில்லைகளின் மேல் சித்திரலிபியை எழுதினர். இதற்கு பழமையான மெஸபடோமியா நகரத்திலிருந்து ஒரு எழுத்துவகைச் சான்றுகிட்டியுள்ளது[2]. மேலும் அதிகநாள் நிற்காத பூர்ஜமரத்தின்பட்டை தர்ளபத்ரம் சர்மகாகிதம் மரம் அல்லதுபருத்தி துணி போன்றவற்றை

---

1. சம்ஸ்க்ருத ஹஸ்தபிரதிகளு, தொகுப்பாளர், டாக்டர்ஆர். சேஷசாஸ்திரி

2. ஆதாரம்: பரலிதே காகித ரஹிதஸமாஜம் - செய்தித்தாள் - பிரஜவாணீ - 8.7.1990, கன்னடம்.

உபயோகித்து அவை அழிவைத்தழுவியிருக்கலாம் என்ற மொகஞ்சதாரோ நூலில் மார்ஷலின் குறிப்பினை பாரதீய கிரந்த சம்பாதனா பரிசயம் நமக்குத் தருகிறது. ஆயினும் அப்பிரதேசத்தில் நீண்ட நெடிய எழுத்துமூலங்கள் எதும் கிடைக்காததினால் தோல் மரம் பெரும்பாலும் ஓலைகள் எழுதுவதற்கு உபயோகப்படுத்தபட்டு அவை உலர்வுத்தன்மை பொருந்திய உப்பு மண்ணில் சேர்ந்து வெகுகாலம் முன்னமே அழிவைத்தழுவியிருக்கலாம் என்று Indus civilization நூல்கூறுகின்றது. இருப்பினும் இந்தியஸாகித்யத்தில் எழுத்துக்கலையைப்பற்றிய முக்கியகுறிப்பே இல்லாமல் போனதற்கு காரணம் இந்துமதமும் வேதங்களும் சாஸ்த்திரங்களும் குருமுகமாக ஓதுவதிலேயே நின்றுள்ளன. எழுதிய நூல்களைக்காட்டில் குருமுகத்திலிருந்து வருகின்ற சப்தத்திற்கு அதிகவிலை, இதுமட்டுமல்ல; அவற்றை கையெழுத்து பிரதிகளிலிருந்தோ நூல்களிலிருந்தோ கற்காமல் குருமுகமாக அப்பியாசம் செய்யவேண்டும் என்பதே இந்துக்களின் கொள்கை. இன்றைக்கும் இந்துக்கள் கௌரவிப்பது நினைவில் நிறுத்தச்செய்து கொண்டுள்ள முகஸ்தவித்யையையே. பூலர் சொல்வது போலே இக்கால கவிகளும்கூட ஜனங்கள் தமது கிருதிகளை படிக்கவேண்டுமென்று விரும்பாமல் அவை வல்லோரின் சமூகத்திற்கு அணிகளாகவேண்டும் 'ஸதாம் கண்ட பூஷணம்' என்று ஆசீர்வதிக்கின்றனர்.

7-1. எழுத்துகள்

பழமையான பிராம்மீலிபி ஸிந்துலிபியிலிருந்து பிறந்தது என்று காண்பிக்கும் முயற்சியை பேராசிரியர் ஸ்யாங்க்டன் அவர்கள் மேற்கொண்டார்; ஆனால் புதுஆய்வுகள் இந்த குறிப்பிட்ட காலங்களை இணைக்கும்வரை ஸிந்துலிபியின் தற்போதைய பிரச்சினைக்கு பரிகாரமாக இந்த இருண்டகாலத்தின்

மேல் விளக்கு விழுகின்ற வரைக்கும் அந்த சித்தாந்தங்கள் எல்லாம் ஊகம் என்கிற நிலத்தில் மட்டுமே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும். எழுத்துக்கலை வழக்கத்தில் இருந்தது என்பதற்கு பிராமணர் பௌத்தர் மற்றும் ஜைனர் சாகித்யங்களில் ஆதாரங்கள் கிடைக்கின்றன. சுவடி நூல்கள் வெவ்வேறு மொழிகளிலும் வெவ்வேறு எழுத்துகளிலும் அமைந்து விளங்கும். இந்தியாவிலுள்ள மொழிகளைப் பற்றிய குறிப்பொன்று பின் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. (படம்.21) போதிய மொழிப்புலமையும், எழுத்தறிவும் உள்ளவர்களின் சுவடிப் பதிப்புப்பணி மிகச்சுலபமாக அமையும்.

7-2. எழுத்துக்களின் தோற்றம்

தொல்லியல் நிபுணர்கள் இந்திய எழுத்துக்களை ஆய்வு செய்து இதற்கு அசோகன் பிராம்மீ எழுத்துக்கள் மூலம் என்று கூறியுள்ளனர். சில ஆய்வாளர்கள் இரு வகையான எழுத்துக்கள் உள்ளதாய்க் கூறியுள்ளனர். அவை கரோஷ்ட்டீ மற்றும் பிராம்மீ. கரோஷ்ட்டீ வலதுபக்கம் தொடங்கி இடதுபக்கம் ஈறாக எழுதுவது. பிராம்மீ இடதுபக்கம் தொடங்கி வலதுபக்கம் ஈறாக எழுதுவது[1]. பிராம்மீயிலிருந்து தெற்கத்திய நான்கு லிபிகள் உண்டாயின.

7-3. சுவடிப் பதிப்பிற்கு எழுத்தறிவு

சுவடிப்பதிப்பிற்கு எழுத்தறிவு மிக இன்றி யமையாத ஒன்று. எழுத்தறிவு சுலபமாக ஏற்பட வேண்டி ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமத்தில் எழுத்துக்ளைக் கொண்ட பகுதி தேவநாகரி, கிரந்தம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய எழுத்துகளில் கொடுக்கப்படுகிறது.

---

1. A Short History of Sanskrit Literature, Madhabdas Chakravarthy, Culcutta. Year, 1919.

(படம்.22) கிரந்த எழுத்தே துளு, மலையாளம் ஆகிய எழுத்துகளுக்கு அடிப்படையாகின்றது. (படம்.23) கிரந்தம் (படம்.24) கிரந்த எழுத்தின் வளர்ச்சி (படம்.25), கிரந்த எழுத்துப்பயிற்சி (படம்.26), தெலுங்கு எழுத்து வளர்ச்சி (படம்.27) கன்னட எழுத்து வளர்ச்சி (படம்.28), நந்திநாகரி (படம்.29), நந்திநாகரிச்சுவடி(படம்.30), நந்திநாகரி எழுத்துப் பயிற்சி (படம்.31), திகளாரி (படம்.32) போன்ற எழுத்துகள் பதிப்புப் பயன்கருதி இத்துடன் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்படுகின்றன.

8. சுவடிப்பட்டியல்

சுவடிப்பட்டியல் பல்வேறு எழுத்துகளில் மொழிகளில் அமைந்தவற்றை யாவரும் அறிந்த மொழியில் தருகின்ற ஒரு சிறந்த நூலாகும்.

24. சரபோஜி மஹாராஜு வாரிகி பட்டமய்யெடந்துகு முனுபு ஈ ஸரசுவதீ மகால் புஸ்தகாலுகு விவரமைன ஜாப்தா லேது. 1720 காலயுக்தி ஸம்வத்ஸரம் சரபோஜி மஹாராஜு வாரி பட்டமய்யி மன்யம்பட்லு யனெ கங்காதரபட்டு ஸதாசிவபட்லுகு தானாதிகாரம் இச்சின பிம்மட ஈ ஸரசுவதீ மகால் காகிதால புஸ்தகாலுகு தாட்யாகுல புஸ்தகாலுகுன்னு தகுமைனவார்லனு நியமிஞ்சி பெரிசீலுனி ஜாப்தா சாலிவாஹனசகம் ஸம்வத்ஸரமுலு 1722 இங்கிலீஷ் ஸம்வத்ஸரமுலு 1801 லோ ஜாப்தா பரிஷ்காரமுகா கலகு ஜேஸிந்தி. ரௌத்ரீ நாம ஸம்வத்ஸரமு. (சரபோஜி விழாமலர் 1 ப.எண்.37&படம்.34)

(பொ.) சரபோஜி மன்னர் பட்டத்துக்கு வருவதற்கு முன் இந்த சரசுவதி மகால் நூல்நிலைய நூல்களுக்கு விவரமான பட்டியல் இல்லை. 1720 காளயுக்தி ஆண்டு சரபோஜி மன்னருக்கு பட்டம் கட்டிய பின்னர் மன்யம்பட், கங்காதரபட், சதாசிவபட் ஆகியோருக்கு (விவரப்பட்டியலிட) உரிய அனுமதி அளித்தபின்னர்

சரசுவதி மகால் காகித புத்தகங்களுக்கும் ஓலைச்சுவடி நூல்களுக்கும் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு நியமனம் செய்து சுவடிகளைப் பரிசீலனை செய்து பட்டியல் தயாரிக்கப்பட்டது. சக ஆண்டு 1722 ஆங்கில ஆண்டு 1801ல் நூல் விவரப்பட்டியல் தயாரிக்கப் பட்டது. ரௌத்ரி வருடம்[1].

ஸங்கிரஹ பாண்டாகாரம் என்ற சேகரிப்புச் சுவடிகளின் பதிவேட்டுப் புத்தகத்தில் தாளபத்ர கிரந்தானாம் சூசி என்ற தலைப்பில் சுவடிப்பட்டியல் காணக்கிடைக்கிறது. அதில் சில தலைப்புகள் 'செலவு' என்றும் சில தலைப்புகள் 'வரவு' என்றும் குறிக்கப்பட்டு அதன்கீழ் சுவடி விவரப்பட்டியல் செய்யப்பட்டுள்ளன. இது அந்த காலத்திய 'சுவடிச் சேகரிப்பு பதிவேடு' ஆகலாம். செலவு, வரவு என்னும் சொற்கள் எதைக் குறிக்கின்றன. என்பது அறியமுடியவில்லை.

8-1. பழையபட்டியலும் புதுப்பதிவேடும்

தஞ்சை சரசுவதி மகால் நூலக அருங்காட்சியகத்தில் காணப்பெறும் தெலுங்கு எழுத்து சுவடிப்பட்டியல் ஓலைச்சுவடியிலேயே அமையப் பெற்றதாய் சம்ஸ்கிருத நூல்களைச் சுட்டுவதாய் விளங்குகிறது. அது தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் 1801 ஆம் ஆண்டைச்சார்ந்த முதன் முதல் சுவடிப்பட்டியல் ஆகும். அந்த பழமையான சுவடிப்பட்டியலோடு புதுப்பதிவேட்டினை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

8-1-1. பட்டியல் தரும் குறிப்பு

46-நைஷதம், 10, ரோ. ஸர்கமுதலு, 15 ரோ. ஸர்க பர்யந்தம், கிரந்தலிபி, ஆகுலு 52.

---

1. *மன்னர் சரபோஜி பிறந்தநாள் விழா மலர், 24.9.1989.* P.No. 37&38, T.M.S.S.M.L. Tanjore.

47.-நைஷதம், 13 ரோ. ஸர்கமுதலு 22, ரோஸர்க பர்யந்தம், கிரந்தலிபி, ஆகுலு 48,

48.-நைஷதம், 4 ரோ. ஸர்க, அபூர்த்தி, கிரந்தலிபி, ஆகுலு 14,

49-குமாரசம்பவம், ஸர்கலு 8, நைஷதம் 8 கிரந்தலிபி, ஆகுலு 24 இதற்கு,

50-குமாரசம்பவம், ஸர்கலு 7, கிரந்தலிபி, ஆகுலு 47 இதற்கு[1]

8-1-2. பதிவேடு தரும் குறிப்பு

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் முதன்முதல் சுவடிப்பட்டியலைக்கொண்டு தயாரிக்கப்பெற்ற 1857ன் பட்டியலின்படி புதுப்பதிவேடு தயார் செய்யப் பெற்றுள்ளது. (படம்.35) அத்துடன் கீழ்க்கண்ட சில எண்களை ஒப்பிட்டுப் பார்ப்போம். 49-குமாரசம்பவம், ஸர்கலு 8, கிரந்தலிபி, ஆகுலு 24 இதற்கு[2]

50-குமாரசம்பவம், ஸர்கலு 7, கிரந்தலிபி, ஆகுலு 47, இதற்கு[1]

இவ்வாறு பழையபட்டியலோடு புதுப் பதிவேட்டினை ஒப்பிட்டுப் பார்த்ததில் சில செய்திகள் சமமாய் உள்ளது. அறியப்பட்டது.

8-2. மோடி ஆவணம் தரும் பட்டியல் குறிப்புகள்

ஓலைச்சுவடிகளின் அட்டவணை 24 தலைப்பு களை உட்கொண்டதாய் கி.பி. 1834 ஆம் ஆண்டில்

---

1. தஞ்சை சரசுவதி மகால் நூலகம், அருங்காட்சியகம், தஞ்சாவூர்
2. B.No. 100080/D.No.3048 see palmleaf Register book, P.No. 73/sel.No.50.

செய்யப்பெற்றுள்ளது. சகம் 1785 (+ 78=1863 AD) இல் "பனை ஓலைச் சுவடி ஜாபிதா"[2] குறிப்பினை மோடி ஆவணம் கொடுக்க, குப்பாபட்லு தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அலுவலர் ஆகவும் இருந்தமை அறியப்படுகிறது. 1871 ஆம் ஆண்டு சுவடி விவரப்பட்டியல் தயார்செய்ய டாக்டர் ஏ.சி.பர்னல் நியமிக்கப்பட்டார். In march 1871 the then government of madras lord napien deputed A.C. Burnell to catalogue the manuscripts, Dr. A.C. Burnell has Catalogued the Sanskrit Manuscripts in 3 volumes[3] the then government of madras by g. ono 71 dated 10th march 1871 appointed Dr. A.C. Burnell to catalogue the manuscripts in the Thanjavur library.[4]

தஞ்சை சரசுவதி மகால்நூலக அருங்காட்சியகத்தினை அணிசெய்கின்ற அணி செய்கின்ற ஓலைச் சுவடிகளுக்கு உண்டான விவரப்பட்டியல் போன்று மற்றொருபகுதி பாதுகாப்புப்பிரிவில் உள்ளது. (This copy corresponds to the list prepared in .... Which is now kept in a 2 Palmleaf of books.) (படம். 36) அது கங்காதரபட் குழு செயல்பட்ட பட்டியல் பணியை விளக்குகிறது. பட்டியல் குறிப்பு-62" ரெளத்ரீ ஸம்வத்ஸரம்,மார்கசீர்ஷ சுத்தத்வீதீயை, அங்காரகவாரம் மத்யஸ்த்துலு வேதமூர்த்தி கங்காதரபட்லு, ஸதாசிவபட்லு லாண்டகே வாரி அதிகாரமந்து தாளபத்ரபுஸ்தகாலு ருஜுவு ஜூசி ராசினவிவரம், ராமாயண பட்யபுஸ்தகால்லுகு லெக்கவிவரம்" என்றுள்ளது. அதில் ராமாயணம், பாரதம், பாகவதம், ஜோதிடம், நிகண்டு, அலங்காரம் ஆகிய தலைப்புகளில் சுவடிப்பட்டியல் அமைந்துள்ளது. சரசுவதிமகால் நூலக அருங்காட்சியகத்தில் மக்களின் பார்வைக்காக ஓலைச்சுவடிகளின் பட்டியல் ஓலைச்சுவடியிலேயே இயற் றப்பெற்றதாய் வைக்கப் பெற்றுள்ளது. அந்த பட்டியலும் (கங்காதரபட்) சதாசிவபட் குழு மேற்கொண்ட சுவடிப்பட்டியல்

பணியைத் தெரிவிப்பதாகும். அதிலுள்ள பட்டியல் குறிப்பு - 63 "ரௌத்ரீஸம்வத்ஸரம், மத்யஸ்த்துலு வேதமூர்த்தி ஸதாசிவட்லு லாண்டகே வாரி அதிகாரமந்து தாடபத்ர புஸ்தகாலு ருஜுவு ஜூசி வ்ராசின விவரம். காவ்ய பட்யபுஸ்தகாலுகு லெக்கவிவரம்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. அவை இரண்டிலும் ஆண்டின் எண்கள் கொடுக்கப்பட வில்லை. அதில் காவியம், சங்கீதம், அலங்காரம், தோத்திரம், வேதாந்தம், மந்திரசாஸ்திரம், பத்ய காவியம், அரவம் (தமிழ்) போன்ற தலைப்புகளுக்கான சுவடிகளின் விவரம் காணப்படுகிறது. சரசுவதிமகால் சுவடிவிவரப்பட்டியல் என்றால் மொத்தம் 24 தலைப்புகள் வரவேண்டும். இதற்கு குறைவாகவேதான் இங்கும் பாதுகாப்புப் பிரிவிலும் உள்ள சுவடியிலும் தலைப்புகள் தென்படுகின்றன. ஆதலால் இரண்டும் முழுமையற்றவை. இவ்விரண்டு சுவடிகளின் அடிப்படையில் அமைந்து, 1857 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்டதின் அடிப்படையில் தற்போது சரசுவதிமகால் பர்னல் ஓலைப்பதிவேடு (வடமொழிப் பிரிவில்) அமைந்துள்ளது. அதில் சிறுமாற்றங்களும் சுவடி எண்ணிக்கை அதிகரிப்பும் உள்ளன. இதற்குண்டான குறிப்புகள் பர்னல் பதிவேட்டின் முதல் பக்கத்தில் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன. இந்த குறிப்பினை வைத்துப்பார்க்கும் போது 1857ல் இருந்த சுவடிகளின் எண்ணிக்கை மாறுபடுவதற்குக் காரணம் இந்த பதிவேடு தெலுங்கிலிருந்து தேவநாகரிக்கு மாற்றி எழுதுவதற்கு முன் கிரந்த எழுத்தில் ஒரு பதிவேடு இருந்திருப்பது தெரியவருகிறது. (T.M.S.S.M. Library, List od Sanskrit Mss as Palmleaf. This is a Copy in Devanagari of the former in Grantha Character is Konkanesvara's (a former Librarian) hand. Sign/ 20.9.1923) (படம்.36)1857ல் மற்றொரு பதிவேடும் இருந்திருக்கவேண்டும். அருங்காட்சியகம் பாதுகாப்புப்

பிரிவு ஆகியவற்றில் இரு பகுதிகளாய்த் தென்படும் ஓலையின் ஓலைச்சுவடிப் பட்டியல் தெலுங்கு எழுத்தில் உள்ளது. காலக்கணக்கு பஞ்சாஹ்கம் (எபிமெரி) துணைகொண்டு பார்க்கும்போது ரௌத்ரி ஆண்டும் 1800ல் வருகிறது. ஆகவே இவையிரண்டும் 1857க்கு முன்பாக 1800 ஆம் ஆண்டில் எழுதப்பெற்றவை என்பது உறுதி.

கி.பி. 1868ல் சரசுவதிமகால் நூலகத்தின் சுவடிகளை சென்னை அரசுகட்டளையின் பேரில் பரிசீலனை செய்து பட்டியல் தயாரிக்க முற்பட, அறிஞர் 'பிக்வேர்ட்' என்ற வடமொழிப் பேராசிரியர் 'இந்த நூலகத்தைப் போன்றதொரு நூலகம் இந்தியாவில் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பர்னல் துரையவர்கள் காலத்திற்கு பிறகும் சுவடிவிவரப்பட்டியல் பணி தொடர்ந்தது தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் 1-19 வரையிலான சம்ஸ்கிருத விவரப்பட்டியல். தயாரிப்புத் தலைவரும், வடமொழிப்பேராசிரியருமான திரு. P.P. சாஸ்திரி அவர்கள் In sanskrit alone there are 24,432 manuscripts written in various scripts. In respect of quantity and richness of material the Sanskrit section of this library is easily the biggest manuscripts librafy in the world the Sanskrit section of the government oriental library madras with its 22,270 manuscripts ranking second. (A Descriptive Catalogue of the Telugu Manuscripts Catalogue of the Telgu Manuscripts' Walter, 1933, Introduction, P.No. iii, by P.P.Sastri) என்கிறபடி 'உலகத்திலேயே பெரிய சுவடிநூலகம் இது' என்று புகழ்ந்துள்ளார்.

நீண்டநாட்களுக்கு முன்பு 20-23 ஆகிய பட்டியல்களையும், அண்மைக்காலத்தில் வெளிவந்த 24-27 ஆகியவற்றையும் சேர்த்து இதுவரை மொத்தம் 27 பட்டியல்களை சம்ஸ்கிருதத்துறை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

8-3-1. சுவடிப்பட்டியலின் பயன்கள்

59. 'ஹஸ்த புஸ்தகானாம் ...ச புஸ்தகானாம் சூசீ தத் ஸபாத்யக்ஷ ஸ்ரீயுத James proncep ஸாகேப் அனுக்ஞயா ஸாதாரண ஜனோபகாரார்த்தம் கலிகாதாக்யா ராஜதான்யாம் தன்முத்ரா யந்த்ராலயே முத்ரித:

(பொ.) கையெழுத்துப் பிரதிகளுக்கும், புத்தகங்களுக்கும் பட்டியல் அந்த சபைத்தலைவர் ஜேம்ஸ்பிரின்ஸெப் அவர்களின் அனுமதியோடு மக்கள் அனைவரின் அனுமதியோடு மக்கள் அனைவரின் பயன்பாடு கருதி கல்கத்தா ஏசியாட்டிக் சொசைட்டிக்குச் சேர்ந்த அச்சகத்தில் பதிப்பிக்கப் பட்டது என்கிற நூற்குறிப்பால் அறியமுடிகிறது. Bibliographic survey of Indian manuscripts catalogues by subhash biswas year P.No. 39. 1998) இதனால் சுவடிப்பட்டியல் பணி அனைவருக்கும் பயனிக்கவல்லது என்பது உறுதி.

8-3-2. சுவடிவிவரப்பட்டியல் பயன்

சுவடிப்பட்டியல் என்பது சுவடியில் என்ன செய்தி குறிப்பிட்டுள்ளது என்பதை மட்டுமே தெரிவிப்ப தாகும். சுவடி விவரப்பட்டியல் 'விவரணாத்மக சூசி' என்ற வகையில் சுவடியின் தொடக்கம் முடிவு, இறுதியடி, எழுதியவர் குறிப்பு ஆகியன அமையப் பெற்று ஆய்வாளர்களுக்கு ஆய்வு எடுத்துக் கொள்ளும் வழிமுறைகளை விளக்கமாகத் தெரிவிப்பதாகும்.

60. அமுத்ரித கிரந்த ஸம்பாதனார்த்தம் முத்ரிதானாம் பாடஸங்கலனார்த்தம் ச விவரணாத்மக சூசி ஆவச்யகீ, முத்ரித கிரந்தானாம் ஸங்க்ஷிப்த சூச்யாலம் பவதி'. வெளிவராத நூலைப் பதிப்பிப்பதற்கும், வெளிவந்த வற்றிலிருந்து பாடவேறுபாடுகளைச் சேகரிப்பதற்கு

1. BAIMC by subhash C. Biswas, year-1998

விவரப்பட்டியல் தேவை. வெளிவந்த நூலாகில் சுருக்கப்பட்டியல் போதும் என்றவாறு பட்டியல் பயனும் தயார் செய்யும் முறையும் கூறப்பட்டுள்ளது. 'சுவடி விவரப்பட்டியல் பணிக்கு ஒரு சிலரே ஆர்வம் காட்டுகின்றனர்' என்பது சுபாஷ் சி. பிஸ்வாஸ் அவர்களின் அபிப்ராயம்.[1]

9-1. சுவடிப்பதிப்புமுறை

சுவடிப்பதிப்புமுறை என்பது எளிதான செயல் அல்ல. முதலில் எதற்காக சுவடியைப் பதிப்பிக்க முயலுகிறோம் என்ற அடிப்படைக்கொள்கைதனை நெஞ்சத்தில் நிலைநிறுத்தவேண்டும். பாதுகாப்பிற்காக இருக்கலாம்; அல்லது அது பதிவிடுவதற்காகவும் அமையலாம். அதற்கு பொறுமையும் பயிற்சியும் தேவை. சுவடிப்பதிப்பாளர் ஒருவர் ஒரு சுவடியை எடுத்துக்கொண்டு ஒரு தரத்திற்கு பலமுறை அதனைப் படித்தறிதல் இன்றியமையாத ஒன்று. அவ்வாறு பல்வேறு வகைச்சுவடிகளை எடுத்து அவற்றின் எழுத்துப்போக்கினை நாம் உள்ளத்தில் பதியவைக்க வேண்டும். அதற்கு முன்னர் நமக்காக முன்னோர்கள் விட்டுச்சென்ற ஏட்டுச் செல்வத்தைக் குறித்தும் அதை எப்படிக் கட்டி வைத்திருக்கிறார்கள்; அதை எவ்வாறு கையாளவேண்டும்? என்பதனையும் முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஏடுகளை சரிசமனாகச் செய்துகொண்டு இருபக்கங்களிலும் கட்டைகளை (அல்லது அட்டைகளை) இணைத்து இடது பக்கமுள்ள தொளையிலே கயிற்றினைப்பொருத்தி வைப்பர். அதனாலேயே தொளையின் இடது பக்கத்தினைச் சுற்றிச்சரிசெய்த பின்னரே வலது பக்கத்திற்குச் சென்று கயிற்றினால் சுற்றப்படவேண்டும். இம்முறையினை ஓலைச்சுவடிகளுக்கு எண்ணெய்த் தடவும்போதும்,

1. BAIMC by subhash C. Biswas, year-1998

கயிறுபிணைத்து கட்டுகின்றபோதும், பஞ்சு, நூல் தனியாகப் பிரிந்திராத நல்லதுணி, சரியானபிரஷ் ஆகியவற்றைக்கொண்டு தூசுகளை அகற்றும் போதும், சுவடிகளுக்கு எண்ணெய்த் தடவும்போதும் இடம் முதல் வலம்போகவேண்டுமே தவிர வலம் முதல் இடம் வருதல் கூடாது. ஏனெனில் பிணைத்திடும் கயிறே பேராபத்தினுள் நம்மை சிக்கவைத்து ஏடுகள் ஒடிய ஏதுவாகி விடும். இவ்வாறு சுவடியினை அவிழ்த்து மறுபடி கட்டிவைக்கும் முறை அறிந்த நாம் சுவடியைப் பெயர்த் தெழுதும் பணிக்குச் செல்வோம்.

அதனாலேயே தொளையின் இடது பக்கத்தினைச் சுற்றிச்சரிசெய்த பின்னரே வலது பக்கத்திற்குச் சென்று கயிற்றினால் சுற்றப்படவேண்டும். இம்முறையினை ஓலைச்சுவடிகளுக்கு எண்ணெய்த் தடவும்போதும், கயிறுபிணைத்து கட்டுகின்றபோதும், பஞ்சு, நூல தனியாகப் பிரிந்திராத நல்லதுணி, சரியானபிரஷ் ஆகியவற்றைக்கொண்டு தூசுகளை அகற்றும் போதும், சுவடிகளுக்கு எண்ணெய்த் தடவும்போதும் இடம் முதல் வலம்போகவேண்டுமே தவிர வலம் முதல் இடம் வருதல் கூடாது. ஏனெனில் பிணைத்திடும் கயிறே பேராபத்தினுள் நம்மை சிக்கவைத்து ஏடுகள் ஒடிய ஏதுவாகி விடும். இவ்வாறு சுவடியினை அவிழ்த்து மறுபடி கட்டிவைக்கும் முறை அறிந்த நாம் சுவடியைப் பெயர்த் தெழுதும் பணிக்குச் செல்வோம்.

9-1-1. சுவடிப்பெயர்ப்பு

பதிப்புப் பணியிலேயே சுவடிப்பெயர்ப்பு என்பது ஒரு சிறந்த பணியாகும். ஆய்வாளர்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க பணி இதுவே என்றால் அது மிகையல்ல. இப்பணியில் தெளிவுடைமை, மொழிப்புலமை, கருத்துடைமை, பொறுப்புணர்வு தேவைப்படுகிறது.

வரி பிறழாமலும், வார்த்தை பிறழாமலும், தன் கருத்தைப் புகுத்தாமலும், திருத்தாமலும் சுவடிப் பெயர்ப்பினைச்செய்தல் வேண்டும். சுவடிப் பெயர்ப்பாளருக்கு போதியஅளவு இலக்கிய இலக்கண சொற்பயிற்சிகள் தேவை. இவ்வாறு இருந்தால்தான் சுவடியின் ஓட்டத்தைப் புரிந்துகொண்டு வேகமாகவும் சரியாகவும் எழுதமுடியும்.

9-1-2. பிரதிஒப்பீடு

சுவடியைப் பெயர்த்தெழுதும் பணிக்கு அடுத்தாற்போல் நாம்செய்யவேண்டியது பிரதிஒப்பீடு. பிரதிகளுக்குள்ள பாடவேறுபாடு குறிப்பது. பிரதி பேதம், எனப்படும். சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிய படியை மூலப்பிரதியுடன் சரிபார்த்தல் ஒப்புநோக்குத லாகும். சுவடிப் பெயர்ப்பினை சரிபார்க்க ஒருவரும் மூலப்பிரதியினை ஒப்புநோக்க ஒருவரும் ஆக இருவர் இப்பணிக்கு தேவை. செவ்வியபடியை முதலில் தேர்ந்தெடுத்து அதன் வழி கிடைக்கும் மற்ற பாடங்களின் தொகுப்பும் மிக அவசியமாகும்.

9-1-3. பதிப்பாசிரியர்

பதிப்பாசிரியருக்கு சிறந்த மொழிப்புலமையும், பதிப்பிடும் நூற்துறை அறிவுமிகுதியும், பதிப்புத் துறையில் பட்டறிவும் தேவை. பதிப்பாசிரியர் ஒரு நூலைப்பதிப்பிக்க முற்படும்போது ஒரு முறைக்கு இருமுறை பொருள் விளங்கப்படித்து நூற்பொருளை உள்வாங்கிக்கொள்ளவேண்டும். யாப்பமைதியைக் கண்டு ஒழுங்குபடுத்துதலும் சந்திப்பிழை நீக்குதலும் பின்னர் செய்யவேண்டிய செயலாகும். உரையோடு கூடிய நூலாகில் மேற்கோள்பாடங்களை மூலநூலுடன் ஒப்பிட்டு ஆய்ந்து பாடவேறுபாடுகள் குறிக்கப்பட

வேண்டும். பதிப்பாசிரியருக்கு அச்சு நுணுக்கம், மெய்ப்புத்திருத்தும் அனுபவம், மெய்ப்புத் திருத்தத் தேவையான மொழி அறிவு, இலக்கண அறிவு, இலக்கிய அறிவு, யாப்பியல் அறிவு ஆகியவை மிகமிகத்தேவை.

9-1-4. பதிப்பகப்படிவம் தயாரித்தல்

பதிப்பகப்படிவம் தயாரிப்பது மிக்ககவனத்துடன் மேற்கொள்ளவேண்டிய பணியாகும். நாம் எவ்வாறு பதிப்பகப்படிவம் தயாரித்துக் கொடுக்கிறோமோ அதற்கேற்றவகையில் அதனை அச்சுக்கோப்பவர் இயன்ற அளவிற்கு நிறைவாகச் செயதளிப்பர்.

இப்பணி முதன்முதலில் சுவடிபார்த்து அதனைப் பெயர்த் தெழுதுவதில் தொடங்குகிறது. சுவடியிலிருந்து பெயர்த்தெழுதியதை ஒருமுறைக்கு பலமுறை சுவடியோடு ஒப்பிட்டுப்பார்த்து சரிசெய்து யாப்பமைதி, சொற்பிழைகளை கவனிக்கவேண்டும். நாடகம், காவியம் முதலான நூலின் அமைப்பிற்கேற்ப பெயர்த்தெழுதிய படிவத்தைச் சீரமைத்தல் வேண்டும்.

பதிப்புக்குத் தக்கவாறு முதலில் சீர்செய்துகொண்ட பின்னரே பதிப்பகப்படிவங்களை எழுத முன்வர வேண்டும். ஆதலால் தான் இதற்கு பதிப்பகப் படிவங்கள் என்றுபெயர். அப்பணியினைச் சரிவரச் செய்யாவிட்டால் அச்சுகோப்பதும், மெய்ப்பு திருத்துதலும் மிகச்சிரமமான செயலாகிவிடும்.

9-2-1. மெய்ப்புத்திருத்துதல்

அச்சகத்தில் ஒரு செய்தியை அதன் மூலத்திற்கு தக்கவாறு எழுத்துகளைப் பொருத்தியபின் அதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை பரிசீலித்து முறைப்படி திருத்துவது ‘மெய்ப்புத் திருத்துதல்’ ஆகும்.

குறைபாடுகள் என்றால் அச்சு முளைகளுக்கு தொடர்புள்ளதும் செய்தியை அடியொற்றி எழுதுவதும் ஆக இருவகைகள் ஆகும்.

9-2-2. அச்சு முளைகளால் ஏற்படுபவை

1. எழுத்துகள் தலைகீழாக இருத்தல். 2.எழுத்துகள் இடம்மாறி இருத்தல். 3. எழுத்துகள் அளவில் வேறுபாடு. 4. எழுத்துகள் இல்லாதிருத்தல். 5.பிழையான எழுத்துகள். 6. உடைந்த எழுத்துகள் சேர்ந்திருப்பது, 7. வரிகள், பத்திகள் ஆகியவற்றின் நடுவே அதிக இடைவெளியும், போதுமான இடைவெளியில்லாதும் இருத்தல். 8. வரியின் இறுதியில் சரியற்ற சொற்பிரிவுகள். 9. வரிகள், ஓரங்கள், பகுதித் தொடக்கத்தின் ஓரங்கள் நேராக இன்மை, 10. எண், அடையாளம் கோஷ்டங்கள் சித்திரங்கள் அடிக்குறிப்புகள் இவைகளில் ஏற்படும் சில முக்கிய குறைபாடுகள் ஆகும். இவ்வாறு அச்சுமுளைகளால் சரிசெய்யப்பட வேண்டியகுறைபாடுகள் பத்து வகையாகின்றன.

9-2-3. செய்திக்கு ஏற்ற சில குறைபாடுகள்

1. எழுத்துகளில் தெளிவின்மை, ஐயம், தவறுகள், 2. சொற்றொடர் 3. அமைப்பில் குறைகள் மற்றும் இலக்கணப் பிழைகள், 4. நூலின் நடை, சுருங்கக்குறிப்பு அடையாளம் ஆகியன பொருத்துதவில் சமான முறையைக் கையாளாமை, ஆகியவற்றோடு அச்சகப் பிரதியை அச்சகத்திற்கு கொடுக்கும் முன்பு இந்த எல்லா தவறுகளையும் நீக்கியிராமை ஆகியன மெய்ப்புகளில் பிழை ஏற்படக்காரணம் ஆகின்றன.

9-2-4. மெய்ப்புத்திருத்தும் விதிகள்

எழுத்துகளாலான முளைகளைச் சேர்த்து அமைக்கப்பெற்ற மாதிரிபக்கமாகிற பிரதிக்கு 'க்யாலி'

மெய்ப்பு என்று பெயர். இதனை அச்சகப் பிரதியுடன் மெய்ப்புத்திருத்தும் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. அங்கு இருவர் உதவிசெய்து மெய்ப்புத்திருத்தும் செயலை மேற்கொள்வர். ஒருவர் மூலப்பிரதியை மிக்ககவனமாக எழுத்து எழுத்தாய்பிரித்தும், அடையாளம் மற்றும் சுருக்கங்களை விவரமாகக் கூறுவர். மற்றொருவர் மெய்ப்பில் எல்லாம் சரியாக வந்துள்ளதா என்று கூர்ந்து கவனித்தவாறே தொடர்வார். குறைவந்திருக்கும் இடங்களிலெல்லாம் அவற்றை திருத்தம் உரிமை இவருடையதே, மெய்ப்பின் இடப்பக்கம் மற்றும் வலப்பக்கம் உள்ள வெற்றுப்பகுதியில் அந்த வரியின் பக்கத்தில் தப்புகள் வந்திருக்கும் முறையில் குறிப்பிட்ட குறியீடுகளின் துணையோடு தவறுகளை சுட்டிக்காட்டவேண்டும். பிழைகளை குறிப்பிடுவதற்கு அகில இந்திய அச்சக சங்கத்தினரால் (International Printing association) அங்கீகரிக்கப்பட்டுள்ள அடையாளங்களை குறிக்க வேண்டும். அப்படியே சரியான எழுத்துகளையும் குறியீடுகளையும் சுட்டவேண்டும். மெய்ப்புத் திருத்தச் செயலில் பயன்படுத்தும் குறியீடுகளையும் (படம்.33) அவற்றின் விவரங்களும் பின் இணைப்பாக கொடுக்கப் பட்டுள்ளது.

பதிப்புக்கு அளித்த, பதிப்பகம் நமக்கு திரும்ப அளித்த மெய்ப்புகளில் கண்டு வரும்பிழைகளை அந்தந்த இடங்களிலேயே திருத்துதல் கூடாது. முதலில் மெய்ப்புத்திருத்தம் செய்யவேண்டிய தாளை (காகித்தை) இடம், வலம் என்கிறபடி இருபாகமாக வருமாறு மடித்து கொள்ளவேண்டும். சொற்றொடரின் இடப்பக்க பாதியில் காணப்படும் தவறுகளைச் சரிசெய்ய திருத்தப்படவேண்டிய இடத்தில் ஒரு அடையாளத்தைச் செய்து, இடப்பகுதியில் காணப்படும் பிழைகளை இடப்பகுதியிலுள்ள

வெற்றிடத்திலும், அப்படியே வலப்பகுதியில் ஏற்படும் பிழைகளை வலப்பகுதியில் தென்படும் வெற்றிடத் திலும், குறியீடுகளுடன் திருத்தத்தையும் காண்பிக்க வேண்டும். குறியீடும் திருத்தமும் முறையே இடப்பகுதியின் தொடக்கத்திலிருந்தும் வலப்பகுதி எல்லைக்கோட்டினைத் தொடர்ந்தும், பிழையுள்ள சொற்றொடருக்கு நேராகவும், குறிப்பிடவேண்டும்*.

இவ்வாறு நூற்பகுதியின் எல்லைக்கோடுகளுக்கு இருபுறமும் தவறுகளின் குறியீட்டோடு திருத்தும் முறையினைக் காகிதச் சுவடிகளிலிருந்து கண்டுபிடித்திருப்பர் போலும். ஏனெனில் சுவடி எழுத்தாளர்களால் சுவடியினை பிரதி செய்யும்பொழுது நடுவே விடுபட்டுள்ள எழுத்தினையோ அல்லது சொல்லையோ பொருத்த குறிப்பிட்ட இடத்தில் எழுத்து வரிகளின் மேலே V என்று குறியீட்டுக்காட்டி, சுவடிகளின் இரு ஓரங்களிலும் இணைக்கப்பட வேண்டியவற்றை சுட்டிக்காட்டியுள்ளனர். த்வறான எழுத்தைத் திருத்த அந்த எழுத்தின் மேல் II இக்குறியீட்டினை குறித்துள்ளனர். தவறுள்ள வரிக்கு நேரே தவறு திருத்தமும் காகிதப்பிரதியில் காணக் கிடைப்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

அச்சகம் முதல் மெய்ப்பில் குறிப்பிட்ட திருத்தங்களைச் செய்து இரண்டாவது மெய்ப்பை அளிக்கின்றது. இதில் திருத்தங்கள் சரியாக மேற்கொள்ளப்பட்டனவே என்று கவனிப்பதோடு நில்லாமல் புதிய குறைபாடுகளைக் கவனிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். முதல் தரம் படிப்பதில் கண்ணில் விழாது இருப்பதான குறைகள் இரண்டாம் தரம் படிப்பதில் சரிப்படுத்தவேண்டும். இதையடுத்து நாம் மேற்கொள்ளவேண்டியது (மெஷின்புரூப்) இயந்திரமெய்ப்பாகும். இது பிரசுரிக்கும் தாள்வடிவாக

அமைந்து விளங்கும். இதனை ஒருவரே பார்த்து சீர்செய்து பதிப்பிற்கு அளித்துவிடலாம்.

9-3-1. ஆய்வுப்பதிப்பு

சுவடிப்பதிப்பு முறைகளில் முக்கியமாக ஐந்து செய்திகளை நெஞ்சில் கொள்ளவேண்டும். அவை ஸாமக்ரீஸங்கலனம் (பதிப்பிற்கான சுவடிச் சேகரிப்பு), வம்சாவளிநிர்ணயம் (சேகரித்த சுவடிகளை வகைப் படுத்துதல்), பாடஸங்கலனம் (பாடவேறுபாடுகளைத் தொகுத்தல்), பாடபரிஷ்கரணம் (பாடவேறுபாடு களைத் தேர்வு செய்தல்), உன்னதவிமர்சனம் (உயர்தர ஆராய்ச்சி) ஆகியன. பதிப்புப்பணி (ஸம்பாதனம்) ஆங்கிலத்தில் Editing (எடிட்டிங்) என்று கூறப்படுகிறது. Edit-usலிருந்து வந்த சொல் Edit ஆகும். Editio-onis=The publishing of a work.[1]

உயர்தரஆராய்ச்சி பதிப்புப்பணியை மேற்கொள்ள பாடவேறுபாடுகளை நாம் கண்டறியவேண்டும். அதற்கு முதன்முதலில் நாம் செய்யவேண்டியது சுவடிகளைச் சேகரிப்பதாகும். அடுத்தபடியாக எடுத்துக்கொண்ட பதிப்புப்பணியின் சுவடி நூலாசிரியரின் பிறபடைப்புகள் பற்றிய ஆராய்ச்சியும் சேகரிப்பும் தேவைப்படுகிறது. சுவடி நூல் ஆய்வுப்பதிப்பிற்கு மொத்தம் மூன்று பிரதிகளாவது இருத்தல் வேண்டும். அவை மூன்றும் வெவ்வேறு வம்சாவளியை(வழியினை)ச் சார்ந்தவனாய் இருத்தல் வேண்டும். மூன்றுக்கு மேல் அதிகப்பிரதிகள் கிடைக்கு மாயின் சுவடிநூல் ஆய்வுப்பதிப்புப்பணி மிகவும் சுலபமாகும்.

மகாபாரதத்தின் ஆய்வுப்பதிப்பிற்கு Dr. Sukthankar அவர்கள் 70 பிரதிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

1. D.D. Simpson Latin English Dictionary, P.No. 72.

வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பிரதிகளைக் கொண்டுவரவேண்டியிருந்தால் நுண்படமெடுத்து அவற்றின் நகல்களைப்பெற்று வரலாம். படிஎடுத்து வருவோமாயின் படியெடுக்கப்பெற்ற பிரதியினை மூலப்பிரதியுடன் ஒப்பிட்ட பின்னரே எடுத்துவர வேண்டும். ஒரே பிரதேசத்திலிருந்து பிரதிகளைச் சேகரித்தால் அவையனைத்தும் ஸமானபாடங்களைக் கொண்டதாகவே அமையும். ஆதலால் வெவ்வேறு இடங்களிலிருந்து பிரதிகளைச் சேகரிக்க வேண்டும். கிடைத்தவற்றுள் பழமையான பிரதிகளையும், புதுமையான பிரதிகளையும் கண்டறியவேண்டும். பழமையான பிரதிகளில் பெரும்பாலும் சுத்தபாடங்கள் கிடைக்கும். புதுமையான பிரதியாகில் அதில் அசுத்தமான பாடங்களே அதிகம் கிடைக்கும். மேலும் அந்த பிரதிகள் முழுமையாயும் நன்றாயும் தெளிவாயும் இருப்பின் சுவடிப்பதிப்புப்பணி மிகச்சுலபமாக நிறைவேறும். சுவடிப்பதிப்பு பணியின் பொருட்டு எடுத்துக்கொண்டபிரதிகளின் பாஷாசுத்தி (மொழித் தூய்மை) ஸந்தானசுத்தி (தொகுதித்தூய்மை)யையும் கண்டறிதல் வேண்டும்.

9-3-2. ஸந்தானசுத்தி (தொகுதித்தூய்மை)

ஸந்தானம் என்பது சுத்தஸந்தானம், அசுத்த ஸந்தானம் என்று இருவகைப்படும். மூலப்பிரதியாக எடுத்துக்கொள்ள மூலப்பிரதியின் பாடத்தினை அனுசரித்தவாறே வேறுபட்ட குடும்பத்தினைச் சார்ந்தமையும் பிரதி சுத்தஸந்தானப்பிரதி எனப் படுகிறது. மூலப்பிரதியின் பாடத்திற்கு ஒட்டாமல் பற்பல மாறுபாட்டுடன் விளங்கும் பிரதியை அசுத்த ஸந்தானப்பிரதி என்று கூறுவர். இப்போது நமக்கு

இரண்டு பிரதிகள் கிடைத்திருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். ஒரு பிரதிக்கு 'அ' என்றும் மற்றொரு பிரதிக்கு 'ப' என்றும் எண்ணைக் குறிப்பிடுவோம். 'அ'விலிருந்து 'ப' பாடம் வந்தாலும் 'ப' விலிருந்து 'அ' பாடம் வந்திருப்பினும் அது பயனற்றதாகும். ஆய்வாளர்கள் அதனை கீழ்க்கண்டவாறு குறிப்பர்.

*d.1. தாய்ப்பாடம்		மகள்பாடம்	வேறுபாடற்றபாடம்	
அ	>	ப4	அ	ப4
			|	|
ப4	>	அ	ப4	அ

ஒன்றிலிருந்து மற்றொன்று சமானபாடமாகவே அமைவதால் இதனால் கிடைக்கும் பயன் சமமானதே யாகும். 'அ' விலிருந்து 'ப' பாடம் கிடைப்பின் 'அ' என்பது தாய்ப்பாடமாகும் 'ப' விலிருந்து 'அ' கிடைப்பின் ப என்பது தாய்ப்பாடமாகும். இவ்வாறு கிடைக்கும் தாய்மகள் பாடங்களை தாய்ப்பாடம் >மகள்பாடம் என்ற வகையில் குறிப்பர். இது அதமம் (கடைநிலைப்பாடம்) என்று கொள்ளப்படுகிறது. இரண்டுபிரதிகள் கிடைத்து அவற்றின் மூலம் ஒன்றோயாகில் அவற்றால் கிடைக்கும் பாடமும் சமமானதே ஆகிறபடியால் அதனை மத்யமம் (நடுநிலைப்பாடம்) என்றழைப்பர்.

அதனை-

d.2. மூலப்பிரதி

?

அ ப4

என்று குறிப்பர் ஆய்வாளர்கள்.(*d1- d9 களுக்கு ப.எண். 204ஐ பார்க்கவும்)

கிடைத்த அ, ப பிரதிகளின் மூலப்பிரதிகள் வெவ்வேறாயின் அதுவே உத்தமம் (சிறந்தது) என்று கூறப்படுகிறது. இவ்வாறு அமைவதே பதிப்பில் சிறப்பிடம் பெறுவதோடு பதிப்பாசிரியருக்கு பெருமளவு உதவியினை அளிக்கின்றது.

அதனை ஆய்வாளர்கள் கீழ்க்கண்டவாறு அடையாளம் இட்டுக்காட்டுவர்.

d.3. தமிழ்



மூன்று பிரதிகள் கிடைத்துள்ளன என்று வைத்துக் கொள்வோம். அவற்றில் இரண்டு பிரதிகளின் பாடங்கள் சமமானதாய் அமைந்து ஒரு பிரதியின் பாடம் மட்டும் தனித்து விளங்கினால் அதனைக் கீழ்க்கண்டவாறு விளக்குவர்.

d.4. தமிழ்



மூன்று பிரதிகள் கிடைத்து இரண்டு பிரதிகளின் பாடம் சமனாயிருந்து மற்றொன்றின் பாடம் சம்மல்லாது விளங்கிய போதும் இரண்டு குடும்பத்தின் மூலப்பிரதி எதுவென்றறிய முடியவில்லை. அந்நிலையில்

மூலப்பிரதி கிடைக்கவில்லை என்பது உறுதியாகின்றது. மூலப்பிரதி கிடைக்காமல் வினாவில் நிற்கும் நிலைக்கு அவர்கீய வ்யஞ்சனாக்ஷரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ய,வ,ர,ல எழுத்துக்கள் அவர்கீய (க எனும் நான்கு ஒலிகொண்ட எழுத்துக்களைப் பெறாத) உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும்.

d.5. தமிழ்



மேலும் சுவடிகளை மாத்ருகா புத்ரிகா ஸோதர ஸதஸ்ய பிரதிகள் என்று தனித்தனியே பிரித்தறிந்து ஸதஸ்யபிரதியினை அடிப்படையாகக் கொள்ளலாம்.

1) மாத்ருகா (தாய்), புத்ரிகா(மகள்), சோதர (உடன்பிறப்பு) பிரதிகளைக் கீழ்வருமாறு விளக்கப்படுகிறது.

d.6. தமிழ்



இவ்வுதாரணத்தில் க என்பது மாத்ருகாபிரதி (தாய்ச்சுவடி). க3 என்பது புத்ரிகா பிரதி (மகள்சுவடி). க2 என்பது ஸோதரப்பிரதி (உடன்பிறப்புச்சுவடி). க&க3 சுவடிகளை மாத்ருகா புத்ரிகா பிரதிகள் எனச் சுட்டிக்காட்ட க > க3 என்று குறிக்கப்படுகிறது.

2) ஸோதர (உடன்பிறப்பு), ஸதஸ்ய (நடுவுநிலை) பிரதியினை எடுத்துக்காட்ட கீழ்க்கண்ட வகையினைப் பயன்படுத்தப்படுகிறது.

d.7. தமிழ்



இந்த உதாரணத்தில் (அ) (ப[4]) ஸகோதரப் பிரதிகள். (க) என்பது ஸதஸ்யப் பிரதி. இவற்றை யெல்லாம் அறிந்த பின்னர் மூலப்பிரதியினையும் (அடிப்படைச் சுவடியினையும்), பரம்பராகதப்பிரதியினையும் (வழிவழிவந்த சுவடியினையும் கண்டறிதல் வேண்டும்), மூலப்பிரதியின் கீழ்வரும் சுத்தஸந்தான அசுத்தஸந்தானப்பிரதிகளையும் (தூய்மையுற்றவை, தூய்மையற்றவை), பரம்பராகதப் பிரதியின் கீழ்வரும் சுத்த ஸந்தான அசுத்தஸந்தானப் பிரதிகளையும் கண்டறிய வேண்டும். பிறகு ஒவ்வொரு பிரிவிலும் இரு பகுதிகள் கொண்ட அவற்றுள் மாத்ருகா (தாய்), புத்ரிகா(புதல்வி), சகோதர (உடன்பிறப்பு), ஸதஸ்ய (நடுவுநிலை) பிரதிகளையும், பரம் பராகதப்பிரதியின் கீழ்வரும் சுத்த ஸந்தான அசுத்தஸந்தானப்பிரதிவழிவந்த ? மாத்ருகா (தாய்), புத்ரிகா(மகள்), சகோதர (உடன்பிறப்பு), ஸதஸ்ய (நடுவுநிலை) பிரதிகளையும், அசுத்தஸந்தானப் பிரதி வழிவந்த மாத்ருகா (தாய்), புத்ரிகா(புதல்வி), சகோதர (உடன்பிறப்பு), ஸதஸ்ய (நடுவுநிலை) பிரதிகளையும் கண்டறியவேண்டும்.

இங்கு கவியினார் கைபுனைந்த (கவிஹஸ்தாக்ஷரப்) பிரதியினை மூலப்பிரதி

(அடிப்படைச்சுவடி)என்றும், கவிஹஸ்தாக்ஷரப் பிரதியினைக்காட்டில் வேறானப் பிரதியைப் பரம்பராகதப்பிரதி (வழிவழிவந்த சுவடி) என்றும் கூறுவார்கள்.

அதன் விளக்கப்படம் கீழ் வருமாறு-

d.8. தமிழ்



இவ்வாறு சுவடிகளின் வம்சாவளியைத் தீர்மானித்துக்கொள்வதன் பயனாக அவற்றுள் ஒவ்வொன்றுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை

அறியமுடிகிறது. மேலும் எம்.எம். கலபுர்கி அவர்கள் விளக்கியிருக்கும் ஏழு பிரதிகள் கொண்ட வம்சாவளியைப் பார்த்து மகிழ்வோம்.

d.9. தமிழ்



இப்படத்தில் க, க^{2}, க^{3}, க^{4}, ச,ச^{2}, ஜ ஆகியவை ஏழு பிரதிகள் ஆகும். இவற்றுள் க> க^{3} என்பவை முறையே மாத்ருகா(தாய்), புத்ரிகா(மகள்)பிரதிகள் ஆகும். (க^{2}) என்பது சோதர (உடன்பிறப்பு) பிரதி. இவை ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை. க^{4}, ச, ச^{2}, ஜ வரையிலான நான்குபிரதிகள் மற்றொரு குடும்பத்தைச் சார்ந்தவை. இருப்பினும் மாத்ருகா(தாய்), சோதர (உடன்பிறப்பு) பிரதிகளைக்கொண்ட குடும்பத்திற்கும், மற்றொரு வகையைச் சார்ந்த சுவடிகளின் குடும்பத்திற்கும் மூலப்பிரதி கிடைக்காததால் வினாக்குறி இடப்பட வேண்டியதற்கு பதிலாக ய,ர,ல எனும் அவர்கீய உயிர்மெய் எழுத்துக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. இவ்வாறாக வம்சாவளியை நிர்ணயித்த பிறகு மேற்கொள்ள வேண்டியசெயல் 'பாடஸங்கலனம்' ஆகும்.

9-3-3. பாடஸங்கலனம்

பாடபரிஷ்கரணம் செய்வதற்குப் பல பிரதிகளிலிருந்து கிடைத்த பாடங்களை ஒருங்கே திரட்டுவது

பாடஸங்கலனம் எனப்படும். இப்பணியை மேற்கொள்ள மொழி வல்லுநர், ஸாஹித்ய பிரவீணர், எழுத்தியல் நிபுணர், பிராமாணிகர், சிரமத்தைச் சகிப்பவர் ஆன பண்டிதர் வேண்டும். பாடவேறுபாடுகளைக் குறிப்பதற்கு இருவர் தேவை. ஒருவர் பாடவேறுபாடுகளைப் படிப்பவராயும் மற்றொருவர் அவற்றைக் குறிப்பவராயும் முதலில் அமைந்து, பின்பு படிப்பவர் குறிப்பவராயும், குறிப்பவர் படிப்பவராயும் அமைதல் வேண்டும். இவ்வாறு பாடவேறுபாடுகளைக் குறிக்கும்போது மூல ஏட்டுடன், பலசுவடிகளுடன், எடுத்தாண்ட நூல்களுடன், உரைகளுடன், பொருட்பொருத்தங்களுடன் ஒப்பு நோக்கவேண்டும்.

9-3-4. பாடவேறுபாடுகள் தொகுக்கும் முறை

ஆய்வுப்பதிப்பில் பாடவேறுபாடுகள் தொகுக்கும் முறையைச் சிறப்பாகக் கையாளவேண்டும். நான்கு பிரதிகள் கிடைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவற்றைக்கொண்டு பாடவேறுபாடுகளையும் தொகுத்து சமமான பிரதிகள், சமமல்லாத பிரதிகள் கண்டெடுக்கப்படுகின்றன. அவற்றுள் இரண்டுபிரதி முழுதும் ஒத்தே காணப்படின் அதனை ஸார்வத்திரிக ஸம்பூர்ணஸாம்யம் (Ditto-graphy) என்பர். மற்றொருபிரதி சிறிது ஒத்தே என்று சிலவிடங்களில் மாறுபடும்போது இரண்டாம் கிளை அறியப்படுகிறது. நான்காம்பிரதி தனித்தே விளங்குவதாய்க் கொள்வோம். ஆக முதல் மூன்றுபிரதிகளின் இரு மூலங்களின்முன் அமைந்தபிரதி ஸமான பூர்வஜம் (Sub-archetype) எனப்படுகிறது. நான்காம் பிரதியின் மூலமும் ஸமான பூர்வஜம் பிரதியின் மூலமும் மூலாதர்சபிரதி (ur-text) என அழைக்கப்படுகிறது. மூலாதர்சபிரதியின் மேல்

அமையும் பிரதி நூலாசிரியரின் கையெழுத்துப் பிரதியாகும்.

இந்த வம்ச விருக்ஷங்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்காக Dr. Smt Punam Pankaja Kumar Raval அவர்களின் பதிப்பான அபிக்ஞான சாகுந்தலத்தின் 'பாடசம்பாதனபத்ததி' பின் இணைப்பாக இணைக்கப் படுகிறது. அவர்களும் தஞ்சை மராட்டியமன்னர்களின் அமைச்சர் மற்றும் கவியுமான கனச்யாமனின் சாகுந்தல உரையை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த கையெழுத்துப்பிரதிகள் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் *4309*, *4310*, *4311* என்ற எண்களில் காணப்படுகின்றன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்க ஒன்று. பிரதிபேதம் காணும் முறைக்கு பின் இணைப்பு *(படம். 37 & 38)*களைப் பார்க்கவும்.

9-3-5. பாடபரிஷ்கரணம்

பாடவேறுபாடுகளைச் சேகரித்த பிறகு அவற்றை நால்வகைகளில் பரிசீலிக்க வேண்டும். 1. ஸ்வீகார*:* (எடுத்துக்கொள்ளுதல்), 2. வர்ஜனம் (தள்ளுபடி), 3. ஸந்தேஹ*:* (ஐயப்பாடு), 4. பரிஷ்கரணம் (தேர்ந்தெடுத்தல்) என்பன அவை நான்காகும். இவற்றை முறையே 1. Aceptence, 2. Rejection, 3. Doubt, 4. Altration or emendation என்றழைப்பர். பாடவேறுபாடு களால் கிடைத்த சரியான பாடத்தை எடுத்துக் கொள்ளுதல் ஸ்வீகாரபாடமாகும். தள்ளுபடி செய்கின்றதான வர்ஜனபாடத்தை அடிக்குறிப்பில் அடைவுக்குறியினுள் கொடுக்கவேண்டும். எந்தப்பாடம் ஐயப்பாட்டுடன் விளங்குகிறதோ அதனை மூலப்பிரதியில் பொருத்தும்போது அருகில் (?) என்ற அடையாளத்தைப் பொருத்த வேண்டும். பரிஷ்காரம்

செய்த பாடமாகில் மூலப்பிரதியில் இந்த [] அடைவுக் குறியினுள் கொடுக்க வேண்டும். பரிஷ்கரணம் என்னும் செயல் பலபாடங்கள் கிடைத்தும் பயனில்லாது போனாலும் வேற்றுபாடம் கிட்டாத போதிலும் பிழைமலிந்த பிரதியாயினும் மூலத்தில் பாடம் விடுபட்டிருந்த நிலையிலும் மேற்கொள்ளப் படுகிறது. மேற்கூறியபடி நால்வழிகளில் பரிசீலித்த பாடவேறுபாடுகளைப் பயன்படுத்துவதற்கும் பதிப்புப் பணியைச் செவ்வனே செய்திடுவதற்கும் ஸ்ரீ சீதாராம் ஜாகிர்தார் இயற்றிய 'கிரந்த ஸம்பாதனா சாஸ்திரபரிசயம்' என்ற நூலிலிருந்து சில குறிப்புகள் சேகரித்திங்கே இணைக்கப்படுகின்றன.

9-3-6. பதிப்புப்பணியில் பயன்படுத்தப்பெறும் சில குறிப்புகள்

(ஸ) (स) : இந்த குறிப்பிற்கு ஸர்வத்ர (எல்லா விடத்திலும்) என்று பொருள். அதாவது எல்லாச் சுவடி களிலும் இருக்கும் ஒரே பாடத்தைச் சேகரித்து ஸம்பாதகன் அவற்றைத் தள்ளுபடி செய்கிறான். அப்போது இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.

2. (மு.பா) (मु.पा) : முக்கிய பாடாந்தரம்: (சிறப்பான பாடவேறுபாடு) பாடாந்தர விமர்சனத்தில் வருகிறது.

3. (ஸ்வீ.பா) (स्वी. पा): ஸ்வீகிருத (எடுத்துகொண்ட)பாடம்: விவரணசந்தர்பத்தில் (விரித்துரைக்குங்கால்) வருவது.

4. --- : பாடவேறுபாட்டில் குறிப்பிட்டுள்ளபாடம், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அடிப்படைப் பாடத்திற்குச் இணையாக உள்ளது என்று பொருள்.

5. ... : அடிக்குறிப்பில் கொடுத்தபாடங்களில் ஒப்பான அம்சங்களைக்கூறி பிறகு வேறுபட்டவையைப் பிரதி செய்யும்போது இந்த அடையாளம் பயன்படுத்தப் படுகிறது.

6. xxx : சுவடிகளில் 'கிரந்தபாதம்' (வெற்று இடைவெளி) இருப்பதைத் தெரிவிக்க இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.

7. < > : இரண்டு சுவடிகளின் பாடங்களில் வேறுபாடு சிறிதேயாகில் பாடவேறுபாட்டினைக் கொடுத்து அவ்விரண்டுக்குமுள்ள வேறுபாட்டினை இந்தக் குறியினுள் இடப்படுகிறது. எ.டு: தேங்காடுத்தவிரே (க^{3}) தேங்காடுத்தமிரே (ச) இதனை <மி> <க^{3} ச> - நம்பியண்ணண் ரகளை, ப.எண். 62.

8. [ ] : ஸம்பாதகர் (பதிப்பாசிரியர்) அவரது அறிவுபூர்வகமாக ஊஹித்தபாடத்தை இந்த அடைவுக்குறியினுள் கொடுக்கப்படுகிறது.

9. [?] : அடிப்படைப்பாடத்தைத் திருத்துவது ஸாஹஸம் (பெருமுயற்சி) என்று தோன்றினால் அப்போது ஸம்பாதனத்தின் குறிப்பைத் தெரிவிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இது பரிஷ்க்ருத(செவ்வைப் படுத்திய)பாடத்துடன் வருகிறது.

10. (): பௌனருக்தி தோஷத்தை(கூறியது கூறல் குறையை) (Redudant) இந்த அடைவுக்குறியினுள் எழுதப்படுகிறது.

11. (?) : பொருள் முதலானவற்றில் ஸந்தேஹம் (ஐயம்) உண்டாகும்போது இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.

12. > : ஒரு குறிப்பிட்ட உருவம் வேறொன்றிலிருந்து தோன்றியுள்ளதைக் காண்பிப்பதற்கு இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.

13. <: ஒரு குறிப்பிட்ட ரூபம் வேறொரு மூலத்திலிருந்து தோன்றியுள்ளதைத் தெரிவிப்பதற்கு இவ்வடையாளம் உபயோகிக்கப்படுகிறது.

14. 0 : ஸமாஸத்தினுடைய ஒரு பாகத்தினைப் பற்றியது என்பதைத் தெரிவிக்க இவ்வடையாளத்தை உபயோகிக்கப்படுகிறது.

(கடைசியான மூன்று அடையாளங்கள் பெரும்பாலும் அடிக்குறிப்புப் பகுதிகளில் கையாளப்படுகின்றன.)

9-3-7. பாடவேறுபாடு பொருத்துதல்

பாடபரிஷ்கரணம் முதலியவை செய்தபிறகு பாடவேறுபாடுகளைப் பொருத்துதல் அவசியமாகிறது. மூலத்தில் குறிப்பிட்ட இடத்தில் முன்னும் பின்னுமாக எண்ணைக் கொடுத்து, நூற்பகுதியின் அடியில் பாடவேறுபாட்டிற்குரிய எண்ணுடன் அவற்றைக் கொடுக்க வேண்டும். அதன்பிறகு சுவடியின் எண்ணைக் குறிக்கும் எழுத்தினை அடைவுக்குறியினுள் கொடுக்க வேண்டும். இது ஒருமுறை. ஏதாவது ஒரு பக்கத்தில் குறிப்பிட்ட இடத்தில் எண்களைப் பொருத்திக் காட்டுவது இன்னொருமுறை. சுலோகப் பகுதியினையே a, b, c, d என நாற்பிரிவாகப் பிரித்துக்கொண்டு உரிய எழுத்து, சொல், சொற்றொடர்களின் வேறுபாடுகளை அந்தந்த பக்க அடிக்குறிப்பில் 'அதற்காக இது' என்ற சுட்டிக்காட்டுவது மற்றொரு முறையாகும். தொடர் எண் கொடுத்து பாடவேறுபாட்டினையே நூலின் பிற்பகுதியில் இணைக்கும் முறையும் வந்துள்ளது. இம்முறை மூல நூலோட்டம் தடைபடுவதைத் தவிர்க்க பாடபேதங்கள் பின்னடைவுப்பகுதியில் முதற்பகுதியாக அமைப்பது சிறப்பாகும் என்று 'பதிப்பு நெறிமுறைகள்' (தஞ்சை

சரசுவதி மகால் வெளியீடு) கூறுகிறது. அதில் அச்சுப்புள்ளி, நூலமைப்புமுறை காபிரைட்டின் விளக்கம், சுவடிப்பதிப்புகளின் வகைகள் போன்ற பல்வேறு செய்திகள் காணக்கிடைக்கின்றன மேற்கூறிய நான்கு முறைகளுக்கும். எடுத்துக்காட்டாக நாககுமாரஷட்பதி (கன்னடம்) (படம்.39), சாணக்கியநீதி சமுச்சயம்(படம். 40), விஷ்வக்ஸேன ஸம்ஹிதா (படம்.41), நாலாயிர திவ்யப் பிரபந்தம் (மர்ரேபதிப்பு) (படம். 42), ஆகியவற்றின் சில பக்கங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இப்படியாக பல ஏடுகளுடன் ஒப்பிட்டும் பொருள்கொள்ள முடியாத வகையில் ஒரு பாடம் அமைவதாகில் அதனை 'பாடகிரந்தி' என்றழைப்பர். இது பிரதிசெய்பவரின் கவனமின்மையால் ஏற்பட்டு எந்த விதிமுறைகளுக்கும் உட்படாது விளங்கும். இவ்வாறு ஏற்படும் பிழைகளை உத்தேசிதம் (எதிர்பார்த்தது), அனுத்தேசிதம் (எதிர்பாராதது) என்று இருவகையாகப்பிரிப்பர். உத்தேசிதமான பிழைகளைத் தோற்றுவிப்பதில் கவி, ஸஹ்ருதயர், லிபிகாரர் ஆகிய மூவருக்கும் பங்குண்டு. கவிஹஸ்தப் பிரதிகளிலும் பிழைகாணப்படலாம். ஸஹ்ருதயர்களில் சிலர் தன்னிச்சையாகச் சில பாடங்களைப் புகுத்தி விடுகின்றனர். லிபிகாரர் சுவடியைப் பெயர்த்தெழுதும் போது மிக்ககவனத்துடன் இருத்தல்வேண்டும். இவ்வாறு எழுதுவோரில் சிலர் மூலத்தை விட்டுவிடுவர். சிலர் புதிதாய் சிலவற்றைப் புகுத்திவிடுவர். அனுத்தேசிதமான பிழைகளுக்கு லிபிகாரரே காரணர் ஆகிறார். இவ்வாறு பிழை ஏற்படுதலை அன்யதாஞானமூலம், அனவதானதா மூலம், அக்ஞானமூலம் என்று மூவகையாகப் பிரிப்பர். மூலபாடத்தைப் (அன்யதாக்ஞானம்) புரிந்து

கொள்ளாமல் மாற்றி எழுதுதல், (அவதானதா) கவனமின்மை குறிப்பிட்ட நூலின் (அக்ஞானம்) ஞானமின்மை ஆகியவற்றால் அனுத்தேசிதமான பிழைகள் ஏற்படுகின்றன. இப்படியாகப் பிழைத்திருத்தம் முதலியவற்றைச் செய்தபிறகு உன்னத விமர்சனத்தைச் (Higher criticism) செய்தல் வேண்டும். இது சரித்ர முறையிலும், ரஸங்கள் குறித்த முறையிலும், தார்சனிகவழியிலும் மேற்கொள்ளப்படுகிறது.

9-4-1. ஆய்வேடு அமைப்பு

மேற்கூறிய வகையில் பாடவேறுபாடுகளை யெல்லாம் தொகுத்த பின்னர் ஆய்வேடு முறைப்படி தயாரிக்கவேண்டும். சமஸ்கிருத ஆய்வேட்டின் வடிவம் கீழ்க்கண்ட பிரிவுகளுடன் அமைக்கப்படுகிறது.

1. முகப்ருஷ்டம் = முகப்பு பக்கம்
2. பிராக்கதனம் (அ) பூமிகா=முன்னுரை(அ)பூமிகை
3. விஷயசூசி = பொருளடக்கம்
4. ஸங்கேத(அ) ஸங்க்ஷேப சூசீ
   அடையாளம் (அ)சுருக்கக்குறிப்பு
5. உபக்கிரமாத்தியாயம்(அ) பிராரம்பிகாத்தியாயம்-
   தொடக்கம்(அ)ஆரம்பபகுதி
6. முக்யவிஷயஸம்பந்தி அத்தியாயம்-ஆய்வேட்டின்
   முக்கியச் செய்தி தொடர்பான அத்தியாயங்கள்
7. உபஸம்ஹாரம்(அ) நிஷ்கர்ஷாத்யாய:
   முடிவுரை (அ) ஆய்வு முடிபுகள் கூறும்
   அத்தியாயங்கள்
8. அனுக்ரமணிகா (சப்தாதி) = சொல்லடைவு
9. கிரந்த சூசீ ததா சோதபத்ரிகா சூசீ =
   துணைநூற்பட்டியல் மற்றும் ஆய்வேடு பட்டியல்

9-4-2. முகப்ருஷ்டம் = முகப்புப் பக்கம்

முகப்புப்பக்கத்தில் ஆய்வேட்டின் பெயர், ஆய்வாளனின் பெயர், ஆண்டு, ஆய்வேடு சமர்ப்பிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் பெயர், குறிப்பிட்ட பட்டத்திற்கான ஆய்வேடு போன்ற செய்திகள் கொடுக்கப்படவேண்டும்.

9-4-3. பிராக்கதனம் (அ) பூமிகா-முன்னுரை (அ) பூமிகை

இந்த பகுதி ஆய்வாளனுக்குச் சேர்ந்ததாகும். இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட செய்தியின் தூண்டுகோல், வளர்ச்சி, ஆய்வேட்டின் முக்கியத்வம், ஆய்வேடு தயாரிக்க உதவியதைக் குறிப்பிடுதல், நன்றியுரை ஆகியன அமையும். இவை அனைத்தும் சுருக்கமாக இப்பகுதியில் இணைக்கவேண்டும். இப்பகுதியில் அமையும் பதிப்பாசிரியர் குறிப்பு மிகச் சிறப்புவாய்ந்த ஒன்று. பலசுவடிகள் கிடைப்பின் எந்த சுவடியை ஆதாரமாக பதிப்பாசிரியரால் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும், ஆதாரமாகக் கொண்டதற்கான அடிப்படைச்சான்றுகள் எவை எவை? என்றும், மற்றவற்றைக் காட்டில் குறிப்பிட்ட சுவடியை அடிப்படையாகக்கொள்ள காரணத்தையும் குறிப்பிட வேண்டும். கிடைத்த பாடங்களில் சில சரியற்ற பாடமாயினும் ஆய்வுநெறிப்படி அடிக்குறிப்பில் இணைக்கவேண்டும். சுத்தமற்ற பாடமாகில் அதனையும் அதன் பக்கத்திலேயே பரிசுத்தமானவற்றை வினாச்சின்னத்துடன் (கேள்விக்குறியோடு) அடைவுக் குறியினுள் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட பாடங்களுள் மிகவும் சுத்தமான பாடம் எனில்; em என்ற அடையாளத்தோடு அடிக்குறிப்பில் பொருத்த வேண்டும். சுவடிகளில் காணப்படும் வெற்றிடத்தை நிரப்ப, கிடைத்த வேறு சுவடிகளைக்கொண்டு

வெற்றிடம் கூறும் அடையாளத்தைவிட்டு அதன்பக்கத்தில் அடைவுக் குறியினுள் கிடைத்த பாடத்தைக் கொடுத்துக் காண்பிக்கவேண்டும். அஸ்பஷ்ட்ட (தெளிவற்ற) பாடமாகில் பா ்தின் இருபுறமும் நக்ஷத்திர சின்னங்களைப் பொருத்திக் காட்டவேண்டும். நூலின் முடிவில் குணதோஷ விவரணமான ஒரு (Critical notes) பகுதியை அமைக்க வேண்டும். நூலில் கூறப்பட்ட மந்திரங்கள், வைதிக சூத்திரங்கள், பாரிபாஷிகபதங்கள் ஆகிய வற்றிற்கு சூசியையும் கொடுக்கப்பட வேண்டும்*. முன்னுரை பக்கங்கள் ரோமன் எண்ணில் (படம்.43) கொடுக்கப்பட வேண்டும்

9-4-4. விஷயசூசி = பொருளடக்கம்

இப்பகுதியில் தேவைக்கேற்ப அத்தியாயத்தின் சிறப்புச்செய்திகள், ஆய்வேட்டினுள் கொடுக்கப்பெற்ற சிறப்பான துணைத்தலைப்புகள் ஆகியன அமையச் செய்யவேண்டும்.

9-4-5. ஸங்கேத(அ)ஸங்க்ஷேப சூசி = அடையாளம் (அ)சுருக்கக் குறிப்பு

ஸங்கேதசூசியைக் குறிப்பிட நூற்பகுதி எழுத்தைக்காட்டிலும் வேறுவகையான எழுத்தினைப் பயன்படுத்தலாம் . சுருக்கியசொற்கள், செய்திகள், புத்தகங்களின் விவரம் ஆகியவை அகரவரிசையில் அமைத்து, விளக்கம்தரவேணும். ஸங்கேதாக்ஷர (எழுத்துச்சுருக்க) விளக்கப்பட்டியினை அமைக்க சுவடிகளின் குறிப்பாக பிரதேச (தலத்தின்) எழுத்துக்களையோ, பிரதிகொடுத்தவரின் பெயரின் முதலெழுத்தையோ அதற்கு வைக்கலாம்.

எ.டு: தார்வாட் = தா, மைசூர்=மை, நரசிம்மன்= ந.

1. EC = Epigraphic of Carnatica
2. SII = South Indian Inscriptions
3. பம்பா (पम्भा) = பம்ப பாரதம் (पम्पभारतम्)
4. சமத[3] (शमद) = சப்தமணி தர்ப்பணம் (शब्दमणि दर्पणम्)

9-4-6. உபக்கிரமாத்தியாயம் (அ) பிராரம்பிகாத்தியாயம்= தொடக்கம் (அ) ஆரம்பப்பகுதி

ஆய்வேட்டின் முழுமையிலும் இப்பகுதி சிறப்புடையது. இப்பகுதியை தயாரிப்பதற்காக அல்லது எழுதுவதின்பொருட்டு ஆய்வேட்டிற்கு முழு உருவம் அளித்த பிறகு அதிலிருந்து செய்திகளைச் சேகரிக்கவேண்டும். இந்த பகுதிக்கு 'விஷய பிரவேசம்' (புகுமுகச்செய்திப்பகுதி) என்ற மற்றொரு பெயரும் உண்டு. முதன்முதலில் ஆய்வேட்டின் அல்லது ஆய்வுச்செய்வதின் நோக்கம் விரிவாக இப்பகுதியில் இடம்பெறச்செய்தல் வேண்டும். நடுநடுவே ஆய்வுச்சிறப்பினையும் விளக்கலாம். இவ்வாறு செய்கை ஆய்வுசெய்தியைப் பரப்பவும் துணைபுரிகிறது. இதுவரை செய்த ஆய்வு விபரம் இதில் கொடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட தலைப்பில் ஆய்வு மேற்கொண்டதால் கிட்டியபயனையும் இங்கே தெளிவாக்கவேண்டும். புதியபயன் இல்லையாயினும் அதனையும் குறிப்பிடவேண்டும். ஆய்வுச்செய்தி பிற அறிஞர்களால் மேற்கொள்ளப்பட வில்லை ஆயின் தக்க அடிப்படை ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்ட வேண்டும். ஆய்விற்காக கையாளப்படும் இம்முறை நமது அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்கும் நுண்கருதுகோளாகும். ஆகையால்

ஆய்வேடு தயாரிக்கும் பணியில் இயன்றவரை மிகமிகக் கடினமாக உழைத்து அதன்பயனாய்க் கிடைத்தவற்றை சுருக்கமாக எடுத்துரைக்க வேண்டும். இனி விரிவான விளக்கத்திற்கு முக்கிய உடற்பகுதியாக அமையும் பகுதிக்குச் செல்வோமாக.

9-4-7. முக்யவிஷயஸம்பந்தி அத்தியாயம்= முக்கியச்செய்திக்கு தொடர்புள்ள அத்தியாயம்

ஆய்வேட்டின் அடிப்படைச்செய்திகளைத் தொடர்புபடுத்திக்கூறும் இப்பகுதியில் முயன்று சேகரித்த செய்திகள் முறைப்படி பிரிக்கப்பட்டுள்ளதை கொடுத்தலாலும், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் காண்பதாலும், ஆய்வுக்குண்டான செய்தியின் இயற்கையான வளர்ச்சி கண்டறிய இப்பகுதி வழிவகுக்கிறது.

9-4-8. உபஸம்ஹாரம் (அ) நிஷ்கர்ஷாத்யாய: = முடிவுரை (அ) ஆய்வுமுடிபு கூறும் அத்தியாயம்

முடிவுரையில் ஆய்வேட்டின் மூலம் கிடைத்த சிறப்புப்பயனையும், ஆய்வு முடிவினையும், சுருக்க மாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கவேண்டும். எந்த ஒரு ஆய்வேட்டிலும் முடிவுகளைத் தெரிவிக்கத் தனியான ஒரு பகுதி இறுதியில் அமைகின்ற முறை உண்டு. ஆயினும் இப்பகுதி அவசியமில்லை என்று தன்னுடைய கருத்தினை 'சம்ஸ்கிருத சோதப்ரக்ரியா ஏவம் வைதிக அத்யயன்' என்ற ஹிந்தி மொழிநூலை இயற்றிய கிருஷ்ணலால் குறிப்பிட்டுள்ளார்.

9-4-9. அனுக்ரமணிகா (சப்தாதி) = சொல்லடைவு

இதில் சொற்கள், செய்திகள் ஆகியவை இடம்பெறச்செய்தல் வேண்டும். அவை ஆய்வேட்டில்

குறிப்பிட்டுள்ள சில பகுதியின் விவரணமாக இருக்கலாம். ஆய்வினைக் குறித்த தொடர்புடைய சிறப்புச்செய்தியாகவும் அமையலாம். ஸந்தர்ப கிரந்தங்களைக் குறிக்கும் இப்பகுதியைப் பார்க்கும் போது ஆய்வேட்டின் பயன்பாட்டிற்கான இந்த சொல்லடைவுப்பகுதி அதிகமாகவும் அருமையாகவும் காணப்படும்.

9-4-10. கிரந்த ஸூசீ ததா சோதபத்ரிகா ஸூசீ: துணைநூற்பட்டியல் மற்றும் ஆய்வேடு பட்டியல்

இறுதியாக அமைகின்ற இதில் அடிப்படை நூல்கள், துணைநூல்கள், ஆய்வு நூல்கள் ஆகியவற்றினை அகரவரிசையாக கொடுக்கப்படவேண்டும். ஆய்வேட்டிற்கு துணைநின்ற நூலைச் சார்ந்த இப்பகுதியில் முதலில் எழுத்தாளர் பெயர், பிறகு புத்தகத்தின் பெயர், வெளியீட்டு முகவரி (நகரத்தின் பெயர்), ஆண்டு போன்றவை அல்லது புத்தகத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள முகவரி ஆகியவற்றை முறையே கொடுக்கவேண்டும்.

அடிப்படை நூல்கள் என்று பார்க்கும்போது முதலில் அடைவுக்குறியினுள் பழமையான அடிப்படை நூலின் பெயர், அடிப்படைநூல் எழுதியவர் பெயர், தேவைப்படின் பதிப்பாசிரியர் அல்லது மொழிபெயர்ப்பாளர், எழுதியவர் ஆகியோர்களின் பெயர்கள் வெளியிட்ட இடம், ஆண்டு முதலியன முறைப்படி பொருத்தவேண்டும். வெளிவராத நூல்களாகில் வெளியிட்டஇடம் பொருத்துமிடத்தில் கிடைக்குமிடம், கையெழுத்துப்பிரதியின் எண் முதலியன கொடுக்கப்படவேண்டும். ஆய்வேடுகளைப் பற்றி குறிப்புக்கொடுக்கும்போது முதலில் அகரவரிசையில் ஆய்வேடுகளின் பெயர்களையும்,

அதற்குப்பிறகு வெளியிட்டவர் பெயர், வெளியிட்ட இடம் போன்றவை குறிக்கப்படவேண்டும்.

9-5. சுவடிகளின் ஆண்டு கணக்கிடல்

புத்தகங்கள் வெளிவந்த ஆண்டுகளைக் குறிப்பதில் அதிக சிரமம் ஏதுமிராது. சுவடிகளின் ஆண்டு எதுவென்று கண்டுபிடிக்க ஆண்டு, திங்கள், திதி, வாரம், நக்ஷத்திரம் ஆகிய குறிப்புகள் தேவை. இந்த ஐந்துவகையான குறிப்புகள் இருப்பின் சுவடிகளின் ஆண்டு கண்டுபிடிப்பது எளிது. இவற்றுள் சில விடுபட்டும் காணக்கிடைக்கும். சுவடிகளின் ஆண்டு சுவடியின் இறுதியில் சில எழுத்தாளர்களால் மட்டுமே குறிக்கப்பெறும். எழுத்தாளர்கள் தரும் குறிப்பினைக்கொண்டு நூலகங்களில் காணக்கிடைக்கும் காலக்கணிப்பு (எபிமெரி) நூல் துணையுடன் ஒப்பாய்வு செய்து சுவடிகளின் ஆண்டைக் கண்டுபிடிக்கலாம்.

ஆண்டுகளின் குறிப்பில் நேரிடையாகவே ஆண்டின் பெயர் கூறி ஆண்டெண்ணிக்கை குறிக்கப் படுகிறது. எழுத்துக்களைக்கொண்டு 'கடபயாதி' எண்ணிக்கையின் அடிப்படையில் குறிப்பது ஒரு முறையாகும். குறிப்பாக ஒரு சொல்லைக் கூறி அதன் பொருளை உணர்ந்து அதற்கான எண்ணிக்கையைக் கொண்டு ஆண்டினை அறிவது மற்றொரு முறை. இவ்வாறு சுவடிகளில் குறிக்கப்பெற்ற ஆண்டுகளைச் சேகரித்த பின்னர் அதற்குச் சமனான ஆங்கில ஆண்டைக் கண்டுபிடிக்க உதவியாக சில செய்திகள் (படம் 44 முதல் 48 வரை) பின்இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சுவடிநூல் ஆய்வுப் பதிப்புப்பணியை மேற்கொள்ளும் நபர் நல்ல ஒரு சுவடிப் பெயர்ப்பாள ராகவும், எழுத்தியல் வல்லுநராகவும், இலக்கிய

இலக்கணங்களில் சிறந்த அறிஞராகவும், சொல்வளம், திறனாய்வு அறிவு போன்றவற்றைப் பெற்றவராகவும் விளங்குதல் மிகமிக அவசியமானதாகும். இத்தகைய தகுதிவாய்ந்தவர்கள் மேற்கொள்ளும் சுவடிநூல் ஆய்வுப்பணி சிறப்பாக அமைவதோடு பலருக்கு வழிகாட்டியாயும் அப்பணி அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

முடிவுரை

இந்நூலில் முன்னுரை, சுவடியின் வரலாறு, சுவடி அமைப்பின் பயன் சுவடிப் பாதுகாப்பு, சுவடி எழுத்துக்கள் சில, சுவடிப் பதிப்புமுறை, முடிவுரை, துணைநூற்பட்டியல் ஆகியன அமைய சிறப்பாக இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் நூலகம் தோறும் இருக்கவேண்டிய ஒரு நூலும் யாவரும் படித்துப் பயன்பெறத்தக்கதும் ஆகும்.

பிற்சேர்க்கை - I

अनुबन्धः - अ देवनागरि श्लोकाः इत्यादि

(பிற்சேர்க்கை -அ தேவநாகரி சுலோகங்கள் முதலியன)

1. ताडपत्रं दृढं सौम्यं ऋजु साग्रं द्विधा कृतम् ।
   मृदुलं यत्प्रशस्तं तत् मतं लेखाविलेखने ॥

2. कर्कशं कल्मषं वक्रं हीनाग्रं त्रुटितं युगम् ।
   तालपत्रं न तत् श्रेष्ठं मतं लेखाविलेखने ॥

3. सम्पुटिका, सफलखटिका, समुद्गकः, सलेखनीकमषीभाजनानि, ताडिपत्राणि, भूर्जत्वचो वा सलोहककण्टकानि तालदलानि सुसम्मृष्टा भित्तयः, सततसन्निहिता स्युः । तद्धि काव्यविद्यायाः परिकरः इत्याचार्याः ।

4. भूर्जपत्रगत्योऽयं अक्षरविन्यासः

   (Vikramorvasiya, Nataka, II Act. by Kalidasa)

5. भर्जत्वचःकुञ्जरः बिन्धु शोणाः-

   कुमारसम्भवम् (ooooo)

6. तां भूर्जजां गगन -

   वृत्तरत्नावली (P.No. 37, Sloka No. 38)

7. सरस्वतीदुर्गमार्गदीपिका

   1) यस्योपदेशात् शरभक्षितीशो-
   जहौजवा(सा?)त् क्रैस्तवमार्गखङ्गम् ।
   अण्णामखीन्द्रं षडमर्षगोत्रं
   धर्माधिकारानुगुणं स्मरन्तु ॥

2) धर्मानुगामी यदि भूपतिस्यात्
लोकस्तु धर्मानुपजीव्य तिष्ठेत् ।
धर्माधिकारं नृपलोक भूत्यै
योऽधत्त राजैक हितैषि चित्तः ॥

3) यस्योद्यमो वैदिकमार्गरम्ये
सत्क्षेत्र विद्वज्जन सत्स्वरूपे ।
चोलस्य देशे शरभेन्द्रकाले
अण्णामखीन्द्रं सततं स्मरन्तु ॥

8. वासवदत्ता

विश्वं गणयतो धातुःशशिकठिनी खण्डेन तमो मषी श्यामे अजिन इव वियति संसारस्यातिशून्यत्वात् शून्यबिन्दव इव विलिखिताः ।

9. तञ्जावूर सब् कोर्ट् असलनम्बर 26 सन् 1916 इसवी मोकासा राज्यनायक शरभोजी राजे हस्तलिखित ।

10. श्रीमच्छाहमहीशमण्डनसमाज्ञप्तैर्मुहुः सादरं
श्रीगङ्गाधरवाजपेयमखिभिः षड्दर्शिनीपारगैः ।
तेनेऽवैदिकतन्त्रसंग्रह इति ग्रन्थोऽयं एतं सतां
तुष्ट्यै भास्कररायनामककृती भारत्युपास्योऽलिखत् ॥

11. प्रजोत्पत्तौ कुम्भामासि दर्शे कौशिकसम्भवः ।
अप्पादीक्षित नामायं अलिखत् युद्धकाण्डकम् ॥

12. इति श्रीतालपाक अन्नमाचार्यपुत्रुण्डैनतिरुमलैयगारु भगवद्गीतार्थमु तेलुगु चेसि अर्थं व्रापिञ्चिनदि पद्देनिमिति अध्यायालु सम्पूर्णमु ।

13. अद्र्यङ्केषु महीमितेषु शकभूपाब्देषु पर्यापिते-
ष्वब्दे राक्षसनाम्निमाधवसिताष्टम्यां रवेर्वासरे।
एकोजिक्षितिपाज्ञया कविकृपानाथेन मेधाविना
मुद्राराक्षसनाटकं विलिखितं चाणक्यनीत्युज्जवलम्॥

14. शरभेन्द्रमहीनेतुराज्ञया बुधसन्नुतः।
रघुवंशमहाकाव्यं सखं भट्टो व्यलीलिखत्॥

15. राजे श्री अरुणाचलभट्टलिखिकात् तञ्जापुरे प्रभवाः
गोपालचक्रपणमेकः उशबू दत्वा सम्पादितम्।

16. श्री अरुणाचलभट्टलेखिकात् तञ्जापुरे प्रभवः गोपालचक्रपणं
दत्वा सम्पादितम्।

17. शेषभट्टसुधीपुत्र बालंभट्टेन धीमता।
द्रव्यैः सम्पादितमिदं जगज्जानातु पुस्तकम्॥

18. शोभकृन् संवत्सरे, मार्गशीर्षमासे, शुक्लपक्षे, प्रतिपदि,
भृगुवासरे आत्महितार्थं गणपतिचतुर्थीव्रतं लिख्यते;
गोविन्दजङ्गमकोटग्रामे शुभमस्तु।

19. शके 1617 (+ 78=1695) विभवनाम संवत्सर
ज्येष्टशुद्धपौर्णिमामङ्गलवासरे तञ्जापुर्यां नागोजिपण्डितेन
लिखितं, स्वार्थं परार्थं च।

20. विकारिसंवत्सरीय नभस्यमासि अष्टमी सोमवासरे।
तञ्जानगर्यां इदमुपनिषद्ग्रन्थं शिवप्रीत्यर्थं लिखितम्॥

21. अनेन प्रीयतां देवान् भगवान्जानकीपतिः।
श्रीरामचन्द्रः पूर्वेषां अस्माकं कुलदैवतम्॥

22. मासे भाद्रपदे तिथौ प्रतिपदि क्रोधाख्य संवत्सरे
सच्छब्दामृतवर्षिणीं कुवलयानन्दप्रदां कौमुदीम् ।
शब्दज्ञानतमोपहां मुररिपोः प्रालेलिखत्प्रीतये
शेषाख्यो विबुधेन्द्रदेशिकमणेः सूनुः गुरुप्रीतये ॥

23. महावीरचरितव्याख्या - प्रद्योतनी -

The scribe writes
चतुर्वेदपारङ्गतानां, षट्शास्त्रतलस्पर्शानां, श्रीमद्भाष्यकार-सिद्धान्तनिरताना, अधीतबोधानुष्ठानप्रचारणानिपुणाना, प्रतिदिनं श्रीमद्भाष्यकारपदपङ्कजसेवारसैकानन्दनिर्भराणां, प्रतिदिनं सूर्योदयात् प्रागेव स्नानं कृत्वा ऊर्ध्वपुण्ड्र-तुलसी-माला-नलिनाक्षमाला -पवित्रादिकं धृत्वा नैमित्तिकसन्ध्या वन्दनादि कर्मसु निष्ठानां, इतिहासपुराणपारायणसुनिष्ठानां, श्रीवैष्णवानां आवासभूते श्रीमद्भूतपुरी श्रीमद्भाष्यकारालय दक्षिणवीथीरिय[illegible]ति प्रसिद्धिमापन्ने भूमण्डलालङ्कार भूते लक्ष्मीनारायणाख्यपुरे सदा वेदपारायण जरीजृम्भमाण-शब्दजालशब्दायमाने तन्निष्ठ श्रीवैष्णवाचरिताग्निहोत्र-वाजपेयक्रतूत्पादित धूमबृन्दप्रच्छादनेनानतितापंकर-सूर्यकिरणे वास्तव्यस्य श्रीसामशाखाप्रवीणस्य विदुषो भारद्वाजकुलपारवारपूर्णचन्द्रस्य श्रीवेङ्कटाचार्यस्य पुत्रेण वेङ्कटराघवेण कविलोकरञ्जनकारिणी प्रद्योतनी समाख्या महावीरचरितव्याख्या सप्ताङ्कसहिता स्वहस्ताभ्यामेव विलिख्य समापिता ।

24. अक्षरं यत्परिभ्रष्टं मात्राहीनं च यद्भवेत् ।
क्षन्तुमर्हन्ति विद्वांसः कस्य नास्ति व्यतिक्रमः ॥

25. अक्षरं यत्परिभ्रष्टं मात्राहीनं च यद्भवेत्
क्षन्तुमर्हन्ति विद्वांसः क्षमा हि विदुषां धनम् ॥

26. यदत्र स्खलितं त्यक्तं प्रमादालस्य दोषतः ।
तत्क्षन्तव्यं बुधैः सद्भिः क्षमा हि विदुषां धनम् ॥

27. विसर्गेषु वर्णेषु मात्रासुपङ्क्तावनुस्वारसंयोगदैर्ध्येषु यद्यत् ।
प्रणष्टं प्रमादेन हस्तस्य दोषात्समालोक्य सर्वं सहन्तां महान्तः ॥

28. अज्ञातदोषान्मतिविभ्रमाद्वा यत्किञ्चिदूनं लिखितं मयात्र ।
तत्सर्वमार्यैः परिशोधनीयं कोपो न कार्यः खलु लेखकस्य ॥

29. अदृष्टदोषान्मतिबिभ्रमाद्वायदर्थहीनं लिखितं मयात्र ।
तत्सर्वमार्यैः परिशोधनीयं कोपं न कुर्यात् खलु लेखकस्य ॥

30. अन्नदानम् -

अन्नदानात्परं नास्ति दानमन्यन्महीतले ।
प्राणीनां देहसन्तापनाशनात्प्राणधारणात् ॥

31. अभयदानम् -

दानमिच्छति चेद्दातुं दद्यादभयपूर्वकम् ।
दानं सर्वजनानन्दं संसारछेदनक्षमम् ॥
देहिनां मृतिभीरूणां प्राणान् यो भुवि रक्षति ।
स निर्भयो भवेद्यस्मात् कुगतिं च न पश्यति ॥

32. भैषज्यदानम् -

रोगेणाङ्गविनाशस्यादङ्गनाशे कुतस्तपः ।
तपोभावेऽपवर्गस्य सौख्यं दूरतरं भवेत् ॥

तस्मात्तद्ग्रस्तपात्रेभ्यो भैषज्यं दीयते सदा ।
स्वयं भवति नीरोगो रूपवानन्यजन्मनि ॥

33. शास्त्रदानम्

साधुभ्यो दीयते शास्त्रं लेखयित्वा स्वशक्तितः ।
व्याख्यायतेऽथवा तेषां शास्त्रदानं तदुच्यते ॥
बिभर्ति सकलं शास्त्रं शास्त्रदानफलात्स्वयम् ।
कृत्वाष्टकर्मनिर्मूलं लभते शाश्वतं पदम् ॥

34. श्री हेविलम्बिसंवत्सर भाद्रपद शुक्लपक्ष 13 रन्तु तोडस्वामिगे शास्त्रदानवागि बरेदुकोट्टरु ।

35. कलिकाल + जिनमुनिपदाम्भोजात भृङ्गनुमप्पभण्डारि देवरु सेट्टि तनगे केवलज्ञानपरिप्राप्ति निमित्तवागि कारकलद शान्तिनाथस्वामिगलबस्तिगे बरसिकोट्ट धर्मनाथपुराणक्के मङ्गलमहा ।

36. दोरो जगन्नाथस्येदं पुस्तकं, इदं पुस्तकं प्रीतिस्नेहाभ्यां जम्बुनाथाय तेन दत्तम्।

37. श्री चोलोत्तुङ्गचोलोख्यचोलोष्वासीन्महीपतिः ।
यः कलिं भारताद्वर्षात् बहिश्चक्रेऽतिदूरतः ॥
अमुना राजराजेन कलिः कृतयुगीकृतः ।
महाग्रहारे राजेन्द्रचोलसंज्ञो महात्मनाम् ॥
सर्वविद्यासमृद्धानां श्रीमतामृषितेजसाम् ।
निवासो विप्रवर्याणां चोलेष्वासीत्प्रतिष्ठितः ॥
महामाहेश्वराणां यस्तारुण्येष्वेव यज्वनाम् ।
राज्ञा राजेन्द्रचोलेन स्वनाम्ना स्थापितः पुरा ॥

तत्राग्रहारे वास्तव्यो वत्सगोत्रसमुद्भवः ।
सामवेदविदामग्र्यः केशवस्वामिनामकः ॥
श्रीराजराजचोलस्य सेवकोऽभूद्विजाग्रणीः ।
तं कदाचित्समामन्त्र्य सोपमानं महीपतिः ॥
चिराच्चिकीर्षितं वस्तु स्मृत्वाज्ञापयदीदृशम् ।
अयि वत्स सुखायालं कौतूहलमतीव मे ।
सलिङ्गेऽस्पष्टसाधूनां नाम्नां नानार्थवाचिनाम् ॥
जिज्ञासितस्य शब्दस्य सुखदर्शनसिद्धये ।
इत्युक्तो राजराजेन शिरसादाय शासनम् ॥
शास्त्रं कर्तुं उपाक्रंस्त राजराजोक्तवर्त्मना ।
ओङ्कारममृतं ब्रह्म .... ॥

Colophon: इति द्रामिड ... केशवस्वामिनः कृतौ नानार्थार्णवसंक्षेपे षडक्षरकाण्डः ।

47382/597/Mss. No. P. 3576-Kesavanighantu, Dc. Vol. XV. Agama and Nighantu, P. No. 433, ORI. Mysore-5 & S.M.L. S. 194&196.

சோழர்கள் - புத்தகம் 2, நீலகண்ட சாஸ்த்திரி, P. No. *904 & 914*

38. श्रीमत्कवेरजातीरं विद्वद्बृन्दोपशोभितम् ।
अत्युत्तमशिवक्षेत्रविष्ण्वादि स्थानमस्ति हि ॥

तत्र तञ्जापुरं नाम राजास्थानमनुत्तमम् ।
राजानः प्रथितास्तत्र भोसलीयान्ववायजाः ॥

तेषु राजा महानासीत् शरभेन्द्रस्सुधार्मिकः ।
तस्य पुत्रो महानस्ति श्रीशिवाजिमहीपतिः ॥

नियोजयामास बुधान् लोकानां हितकाम्यया ।
रच्यन्तां बहवो ग्रन्थाः नानाशास्त्रार्थसंग्रहाः ॥

इति श्रुत्वा वचस्तस्य कुर्वन्ति विबुधा मुदा ।
केचिद्व्याकरणेऽकुर्वन्केचिन्न्याये तथा परे ॥

वैद्यशास्त्रे तथा चक्रुः मन्त्रशास्त्रेषु केचन ।
एवं कुर्वत्सु विद्वत्सु शाहजीन्द्रपुरे वसन् ॥

39. शहजिः क्रिस्तवाब्दे (1693) स्वनाम्ना अग्रहारमेकं निर्माय विद्वद्भ्यो दत्तवान् । तत्र दान शासनपत्रे – वेप्पत्तूराख्य ग्रामस्य पश्चिमतः, त्रिभुवनाख्य ग्रामस्य उत्तरतः, मणञ्जेरिग्रामस्य पूर्वतः, अलक्कुडिग्रामस्य दक्षिणतः वर्तमानं तिरुविशलूरु इत्यपरनामधेयं शहजिराजपुरं इति स्फष्टमुक्तं भवति ।

40. अन्यच्च शहजिराजपुरापरनामधेयस्य तिरुविशल्लूराख्य ग्रामस्य शहजिमहाराजकृते दानशासनपत्रे(नल्लादीक्षित पौत्राय, यज्ञरामदीक्षितपुत्राय श्रीरामभद्रमखीन्द्राय कौण्डिन्य गोत्रोद्भवायय, आश्वलायन सूत्रिणे ऋक्शाखाध्यायिने चत्वारि क्षेत्राणि प्रदत्तानि इति स्फुटं महाराष्ट्रीभाषायां लिखितमस्ति ।

41. <u>*இரண்டாம் துளஜா மன்னர் (1763-1787) தன் பெயரில் நூலியற்றக் கட்டளையிடுதல்.*</u>

